# கடலடியில் தமிழர் நாகரிகம்




நந்திவர்மன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

கடலடியில் தமிழர் நாகரிகம்
நந்திவர்மன்

www.t.me/DigitalNoolagam

# கடலடியில் தமிழர் நாகரிகம்

நந்திவர்மன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

www.t.me/DigitalNoolagam

செ. அரங்கநாயகம் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : பலர்)
வரிசை எண் : 6


**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kaṭalaṭiyil tamiḻar nākarikam |
| Author | : | N. Nandhivarman<br>53-B, Calve Subburayar Street<br>Puducherry - 605 001 |
| General Editor | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 674 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xii + 116 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 55/- (Rupees Fifty five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/95, Millers Road<br>Kilpauk, Chennai - 600 010 |
| | | Tamil Civilization beneath the Seas |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

www.t.me/DigitalNoolagam

க. அன்பழகன்
நிதித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

## அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், புதுவைத் தமிழ்மாமணி நந்திவர்மன் அவர்கள், 'கடலடியில் தமிழர் நாகரிகம்' என்னும் தலைப்பில் நிகழ்த்தியுள்ளதொரு அரிய ஆய்வுரையைப் படித்த ஞான்று, தமிழர்தம் வரலாற்றுப் பழமையையும், பெருமையையும் மேலும் உயர்த்துவதற்கு ஏதுவாகும் பற்பல கட்டமைப்புச் சான்றுகள் நிலவுலகை மூடிக் கிடக்கும் பரவையின் ஆழத்தில் புதையுண்டு போயிருப்பதை, நில்வியல் வரலாற்று உண்மைகள் வெளிப்பட்டுவரும் இன்றைய சூழலில் உய்த்துணர முடிவதைச் சான்றுகளுடன் எடுத்து வைத்திருப்பதை, காலத்தால் ஆற்றவேண்டிய கடமை என்று உளமாரப் பாராட்டுகின்றேன்.

25 கோடி ஆண்டுகள் முன்னர் உலகின் நிலப்பகுதி ஒட்டு மொத்தமும் ஒரே கண்டமாக நிலவி, பின்னர் வட தென் பகுதிகளாக, தென்பகுதி கோண்டுவானாவாகப் பிரிந்து, பின்னரும் நெருங்கிச் சேர்ந்து பின்னரும் பிரிந்து இன்றைய கண்டங்களாக, இயற்கை உருவாக்கிய வரலாற்றில், எத்தனை எத்தனையோ கடற்பெருக்கு, நிலமீட்சி, கண்டங்கள் சேருதல், பிரிதல் எனத் தொடர்கின்றது.

அப்படிப்பட்ட ஒரு கட்டத்தில் அமைந்தது மடகாஸ்கர் முதல் ஆஸ்திரேலியா வரை ஒட்டியிருந்த நிலப்பரப்பு. அதுவும் சில பல நிலப்பகுதிகளை இழந்த நிலையில் குமரிக்கண்டமாக அமைந்ததென்பர். குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக நிலவியது தான் இன்றைய இந்திய நாட்டின் தென்னகம் என்பர்.

அதுவே முதல் மாந்தன் பிறந்த நிலம், அவன் தமிழனாக உயர்ந்த நிலம் என்பர். அவர்களிடம் உருக்கொண்ட தமிழ்மொழியும், வளர்ந்த நாகரிகமும், உலக நாகரிகங்கட்கெல்லாம் 'தாய்' என்று கருதும் தரத்தது. உலகின் நிலநடுக்கோட்டின் தெற்கில் ஒரு பெரும் நிலப் பரப்பாக இருந்த கோண்ட்வானா, இன்றைய பசிபிக் கடல் பரப்பை மையமாகக் கொண்டிருந்தது என்றும், பின்னர் நிலத்தடிப் பாறைத் தட்டுக்களின் மோதுதலால் தெற்கு நோக்கி நகர்ந்ததென்றும், அதனால் அந்தப் பகுதியில் வளர்ந்திருந்த ஒரு சிறப்பான நாகரிகத்தில் எழுந்த கட்டுமானங்கள் மூழ்கின என்றும் அறியப்படுவதை ஆசிரியர் விளக்குகிறார்.

www.t.me/DigitalNoolagam

அதனால் கணக்கிட முடியாத நூற்றாண்டுகளாக, பசிபிக் கடலின் அடி நிலம் மெல்லமெல்ல அமிழ்ந்து வருகிறது என்பதுடன் இலெமூரிய நாகரிகத்தின் பழைய தடயங்கள் அங்கு மூழ்கியிருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர் கருதுவதையும் எடுத்துக்காட்டுகிறார்.

அமெரிக்காவின் செவ்விந்தியரான தொல்குடி மக்கள் தலைவன் 'மாயன்' சுவடிகளை ஆராய்ந்த அறிஞர் ஒருவர், 'மூ' என்னும் பழம்பெருங் கண்டம் ஒன்று இருந்தது பற்றியும், அது மூழ்கியபோது தப்பி வந்தோர் 'மாயன்' நாகரிகத்தை உருவாக்கிய தாகவும் கூறியுள்ளதை எடுத்துரைக்கின்றார்.

குமரிக் கண்டமென நாம் கருதும் இலெமூரியாவே 'மூ' நாகரிகம் கொண்டவர்களாகக் கருதப்படும் 'தமிழர்' வாழ்ந்த நிலம் என்றும் கருதுகிறார். தொன்னாளில் நிலவிய குமரிக்கண்டம் என்பது ஒரு சிறந்த அறிவியல் அடிப்படையான கட்டுமானங்களைக் கொண்டதாக, கட்டடவியல் கணக்கியலின்படி கற்கள் இணைத்துக் கட்டப்பட்ட கட்டடங்கள் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதால், பசிபிக்கிலோ, சீனத்தின் கிழக்குக் கடலிலோ ஆழ்கடல் ஆய்வு நடத்துவதன் மூலம், அந்த நாகரிகத்தைக் கண்டறிய முடியும் என்னும் நம்பிக்கையையும் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

திராவிடத் தமிழ் இனத்தின் நாகரிக வரலாறு, ஆரிய வைதிகச் சுனாமியால் மூழ்கடிக்கப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சி அமைந்த சூழலால், மறுபடியும் உண்மை வெளிப்படும் வாய்ப்பைப் பெற்று, அதன் மூலம் நிலைநாட்டப்பட்ட வரலாற்று உண்மைகளின் துணையால், இக்காலத்தில்தான் தமிழக ஆட்சியில் உள்ள முதல்வர் கலைஞரின் முயற்சியால் "தமிழ் ஒரு செம்மொழி" என்பதை நடுவண் அரசு ஏற்று அறிவிக்கும் நிலை பெற்றுள்ளோம்.

இன்று தமிழ் வழங்கும் நிலத்திலும், இந்தியக் கடற்கரை ஒட்டிய மறைந்த பட்டினங்களான பூம்புகார், கொற்கை, மாமல்லபுரம் ஆகியவற்றிலும், அருகன்மேடு, ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல் ஆகிய ஊர்களிலும் சிந்துவெளி நகரங்கள், துவாரகா முதலான இடங்களிலும் தொடங்கப்பட்டுத் தொய்வு நிலைக்கு ஆளாகியுள்ள அவற்றின் அகழ்வாராய்ச்சியை விரைவுபடுத்துவ தாலேயே மேலும் பல அரிய வரலாற்றுச் செய்திகளை நாம் பெற முடியும்.

தமிழ்மொழி உலக மொழிகட்கெல்லாம் முதல் மொழியாக, மூத்த மொழியாக விளங்கும் தகுதியுடையதாவதைப் போன்றே,

www.t.me/DigitalNoolagam

உலகின் மானுட வரலாற்றில் மிகவும் தொன்மையும், முதன்மையும் கொண்டதாகவும் விளங்குகின்ற நாகரிகமே, மறைந்த இலெமூரியாவில் வாழ்ந்த மக்களிடம் நிலவியதாக அறியப்படும் 'மூ' நாகரிகமாக வேண்டும். 'மூ' என்பது மூத்த, முற்பட்ட, பழைய, தொன்மையான என்னும் பொருள் கொண்டதாகலாம் என்று எண்ணவும் இடமிருக்கிறது. தொல்பழங்காலத்துத் திராவிட இனத்துக்குப் பெருமை சேர்க்கும், மலையுடன் தொடர்புடைய வாழ்வினரான நாகர்களின் நாகரிகம் என்றோ, குமரிக்கண்ட மாந்தர் நாகரிகம் என்றோ 'மூ' நாகரிகத்தைக் கருதுவதற்கும் இடமுண்டு.

தமிழ்நாட்டவர் வரலாறு முழுமையாக இடம்பெறும் வண்ணம் இந்திய வரலாறு குமரிமுனையில் துவங்கப்பட வேண்டும்; அப்படி எழுதப்பட்டால்தான் இந்திய மக்களின் வரலாறு முழுமை யுடையதாகும் என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருப்பதை வரலாற்று ஆசிரியர்கள் உணர்ந்துள்ளதைப் போன்று, தொல் பழங்காலக் குமரிக் கண்ட மாந்தர்தம் பழம்பெரும் நாகரிகமாம் 'மூ' நாகரிகம் எந்தப் பகுதியில் இடம்பெற்றிருந்தது எவ்வகைச் சிறப்புடையதாகத் திகழ்ந்தது என்பவற்றைக் கண்டறிந்திடாத வரையில், மானுடத்தின் நாகரிக வளர்ச்சியின் வரலாறு முழுமை பெறாது என்பதை உலக வரலாற்றறிஞர்கள் உணருகின்ற சூழல் விரையும் என்று நம்புகிறேன். அந்தச் சூழல் உருவாகி, உலகின் வளர்ந்த நாடுகள் பலவும், உலகெங்கும் இப்படிப்பட்ட ஆய்வுகள் நடத்துவதற்கு ஆதரவு அளிக்க முன்வரவேண்டும் என்றும் விரும்புகிறேன்.

அகழ்வாய்வை ஒத்ததொரு நிலவியல் வரலாற்று அடிப்படை ஆய்வுக் கருத்துகளை எல்லாம் தொகுத்து, விவரித்துப் பேசி உலகோர் கவனத்துக்குக் கொண்டு வந்ததற்காக, புதுவைத் தோழர் தமிழ்மாமணி நந்திவர்மன் அவர்களைப் பாராட்டுகிறேன். அவரது சீரிய நோக்கம் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

க. அன்பழகன்

www.t.me/DigitalNoolagam

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அறிமுக உரை

தமிழ்மாமணி தோழர் நந்திவர்மன் அவர்கள் எழுதியுள்ள **கடலடியில் தமிழர் நாகரிகம்** எனும் இந்த நூல் அளவில் சிறியதாக இருப்பினும் ஒன்பது தலைப்புகளில் அமைந்து, ஆழ்ந்த ஆய்வுச் சிந்தனைகளை எழுப்பக் கூடியதாக இருக்கிறது.

எண்ணிறந்த ஆண்டுகளுக்கு முன்பு உலகில் ஒரே ஒரு கண்டமே இருந்தது. பின் அது உடையத் தொடங்கியது. அடுத்தடுத்து உடைசல் ஏற்பட்டுத் தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா எனப் பிரிந்தது. இன்றுள்ள ஆஸ்திரேலியா, அண்டார்ட்டிகா, ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, தென்னமெரிக்கா உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பு ஒன்று இருந்தது என்றும் நிலவியல் அறிஞர்கள் அதற்குக் கோண்டுவானா எனப் பெயரிட்டனர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். கண்டங்கள் இடப்பெயர்வு கொண்டன என்ற கருத்தை அல்ஃபெரடு லோதர் வெக்கனர் என்ற ஜெர்மானிய அறிஞர் 1912இல் வெளியிட்டார்.

காலப்போக்கில் அட்லாண்டிக், இலெமூரியா என்ற இரு கண்டங்களிலும் வாழ்ந்த மனித குல முன்னோடிகள் தொழில் நுட்பங்களில் வல்லமை பெற்றிருந்தனர் எனப் பிராஸ் ஜோசப் கூறியுள்ளார்.

> *ஆங்கில அமெரிக்க ஆய்வாளர் சேம்சு சர்ச்சுவார்டு 1931இல் எழுதிய (The Lost Continent of Mu) காணாமற் போன மூ எனும் கண்டம் என்ற நூலில் மூ அல்லது இலெமூரியாக் கண்டம் அவாய் தொடங்கிப் பீஜி தீவு வரைக்கும், ஈசுடர் தீவுகளில் தொடங்கி மரியானாவரை பரவி இருந்ததாக எழுதுகிறார். கடற்கோள் ஏற்பட்ட பிறகு தென்னமெரிக்கா வழியாக அட்லாண்டிசுக் கண்டத்தின் கடலோரம் வழியாக ஆப்பிரிக்காவுக்கும் அகதிகள் பரவினர் என்று எழுதினார்.*
>
> *பிரெஞ்சு எழுத்தாளர் அகசுதசு லெ பிளாஞ்சீயோன் (1825 - 1908) 19ஆம் நூற்றாண்டில்*

www.t.me/DigitalNoolagam

*மூ என்னும் பெருங்கண்டம் பற்றி முதன்முதலில் எழுதினார். மாயன் சுவடிகளை அவர் மொழி யாக்கம் செய்தபோது மூ என்னும் பழம்பெரும் கண்டம் ஒன்றிருந்தது. அக்கண்டம் கடலுள் மூழ்கியபோது அதனின்று தப்பிப் பிழைத்தோர் மாயன் நாகரிகத்தை உருவாக்கியதாக எழுதினார்.*
*(பக். 8)*

இப்படியாக உலகின் பல்வேறு அறிஞர்களின் அரிய கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு இந்நூலாசிரியர் தமிழர் நாகரிகங்களைக் கொண்ட நிலப் பகுதிகள் மாமல்லபுரம், பூம்புகார், குமரி போன்ற இடங்களில் கடல் அடியில் புதைந்து கிடக்கும் இடிபாடு கொண்ட கட்டடங்கள் வழியே வரலாற்றை, மீட்டெடுக்கப்பட வேண்டிய வரலாறைத் தேடிக் கண்டறிந்து, தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாகரிகத்துக்கும் அடையாளச் சின்னங்களை உருவாக்கித் தர வேண்டும்; அதன் வழியாகத் தமிழ் ஆய்வுப் பணிகள் தொடர வேண்டும் எனும் உள்ளக் கிடக்கையை நூலாசிரியர் அரிய நூல்கள் வழியாகவும், செயற்கைக் கோள் படங்கள் வழியாகவும் ஆதாரங்கள் காட்டி, தான் கொண்ட கருத்தை இந்நூலில் நிறுவுகிறார்.

துருக்கித் தொன்மம், வேல்சுப் பகுதியில் வழங்கும் தொன்மம், டிரான்சில் வேனியன் நாடோடிகளிடம் விளங்கும் கதை, பாரசீகக் கதை, ஆப்பிரிக்கக் கண்டத்தில் வெள்ளக் கதைகள் என விளக்கிக் கடல் வெள்ளத்தால் கண்டங்கள் மூழ்கிவரும் செய்திகளை நேரிடையாகவும் மறைமுகமாகவும் தந்து நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

உலகத் தொன்மங்களில் பெருவெள்ளக் கதைகள் குறித்த தலைப்பில்

*முந்நீர் விழவின் நெடியோன்*
*நன்னீர்ப் பஃறுளி* (புறம் 9)

என்பது நெட்டிமையார் குறிப்பு.

நிறைந்த தேடலை வாசிப்பாளர்களிடையே உருவாக்கித் தமிழர் நாகரிகத்தை உலகுக்கு அறிவிக்கத் தூண்டும் நூல் இது.

இந்தச் சிறப்பான நூலினை, "செ. அரங்கநாயகம் அறக்கட்டளை"யின் சார்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதைப் பெருமையாகக் கொள்கிறது.

www.t.me/DigitalNoolagam

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்கள், இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

www.t.me/DigitalNoolagam

## ஆசிரியர் குறிப்பு



1962இல் மாணவப் பருவத்திலேயே எழுதத் தொடங்கியவர். 1965இல் திராவிட மாணவர் முன்னேற்றக்கழகப் புதுவை மாநிலச் செயலாளர். அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அ. இராமசாமி எழுதிய Struggle for Freedom of languages in India என்ற ஆங்கில நூலில் அய்ம்பது மாணவத் தலைவர்களுள் ஒருவர். 1970 முதல் கவியரங்குகளில் பங்கேற்று இரு மொழிகளிலும் கவிதை பாடியவர்; முரசொலி, தமிழ்மணி, கழகக் குரல், நம்நாடு, விடுதலை, நியு டைம்சு, அப்சர்வர், நியூ இந்தியன் எக்சுபிரசு, தினமணி, தீக்கதிர், சிந்தனையாளன், தமிழோசை, தெளிதமிழ், மாலைபூமி, சூரியக்கதிர், The Otherside எனப் பல்வேறு இதழ்களில் எழுதியவர்; இருமொழிகளில் இவர் சிறந்த சொற்பொழிவாளரும் கூட.

நியூ இந்தியன் எக்சுபிரசு ஆங்கில நாளேட்டில் ஏறக்குறைய ஓராண்டு, தமிழ்மொழிப் பண்பாடு பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் நூலாகி இணையத்தில் 11-10-2009 வெளியிடப்பட்டு, பலர் படித்துள்ளனர். Long March of Tamil மற்றும் Tamil Towards Transnation State இரண்டு ஆங்கில நூல்கள் 2010இல் அமெரிக்காவில் வெளி வந்துள்ளன. தமிழர் நாடும் தனிப்பண்பாடும் என்ற இவரின் நூல் 2006இல் வெளிவந்தது. 2009இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவரின் உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் எனும் நூலை வெளியிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என் மதம் என்று கூறித் திராவிடப் பேரவை என்னும் பதிவு செய்யப்பட்ட கட்சியின் பொதுச்செயலாளராக 1996 முதல் உள்ளார். அறிஞர் அண்ணா அறக்கட்டளையின் நிறுவனருமாவார்.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடக மன்றம் வழங்கிய பெரியார் விருதும், இலக்கியப் பொழில் இலக்கிய மன்றம் வழங்கிய நாவலர் விருதும் பெற்றவர். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனால் நற்றமிழ் அறிஞன் நந்திவர்மன் எனப் பாடப்பெற்றவர்.

www.t.me/DigitalNoolagam

## ஆசிரியர் உரை

ஏ! தாழ்ந்த தமிழகமே! என விளித்து அறிஞர் அண்ணா சொற்பெருக்காற்றிய காலம் மனத்திரையில் விரிகிறது. கடல் மட்டம் உயர்ந்தது! தமிழகம் தாழ்ந்தது என்பதும் அறிவியல் படிப்பினை.

கடல் கொண்டது! தமிழ் நிலம் கடல் மடியில் அமிழ்ந்தது என்பதும் இலக்கியங்கள் இயம்பும்.

கெடல் எங்கே தமிழரின் நலம்! ஆங்கே தலையிட்டுக் கிளர்ச்சி செய்க என்பார் பாவேந்தர். கடல் கொண்ட தமிழரின் நிலம் எங்கே? ஆங்கே ஆராய்ச்சி செய்க என்று நாம் கூறியாகல் வேண்டும்.

பண்பாட்டு வேர்களைத் தேடி நிலத்தில் அகழ்வாராய்ச்சிகள் நடந்தது உண்டு. அவை வெளிப்படுத்திய உண்மைகளால் தமிழர்கள் பெருமிதம் கொண்டதும் உண்டு. ஆயின் பண்டைய நம் பண்பாடு முழுவதும் அறியப்பட்டதா? எனில் இல்லை என்றே பதில் வரும். ஏனெனில் இன்றுள்ள தமிழகம் பண்டு நம் முன்னோர் வாழ்ந்த நிலம் அன்று. அந்நிலங்களைக் கடல் கொண்டது என இலக்கியங்கள் கூறும்.

எனவே ஆழ்கடலில் முத்தெடுப்பது போல் கடல் மடியில் கண்டறிய வேண்டும் பழந்தமிழ் நிலத்தை! மீட்டெடுக்க வேண்டும் நம் பண்பாட்டுச் சான்றுகளை! மெய்ப்பித்தாக வேண்டும் மேதினிக்கு நம் முன்னோர் மேன்மையை! அதைச் செய்யும் முன் ஏனைய நாட்டவர் எதிர்கொண்ட பட்டறிவில் நாம் பாடம் பெறுவோம்! நம் நாட்டில் நடந்துள்ள ஆய்வுகளைக் கருத்தில் கொள்வோம்! ஆற்றத் தகுவன ஆற்ற உறுதி பூண்டு எழுவோம்!

அறிஞர் அண்ணா துயிலும் திசை நோக்கித் தொழுவோம்! கடல் மடியில் நம் நாகரிகத்தின் தடயங்களைத் தேடும் முனைப்புப் பெறுவோம்!

இந்நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் போல உரையிடையே சொருகிய ஆய்வுக் குறிப்புகளின் தொகுப்பாகும். ஆய்வு முடிபன்று. ஆய்வு நடாத்திடத் தூண்டும் உரை நூல் வடிவம் பெற்றது. ஓடிக் களைத்த நாயின் நடையென நைடதத்தை நவில்வர். அவ்வாறு திசையறியாது தேடித் திரிந்து உங்களையும் தேடத் தூண்டுவதே இப்பேருரையின் நோக்கம்!

இந்த உரை நிகழ்த்த வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கு நன்றி.

**நந்திவர்மன்**

www.t.me/DigitalNoolagam

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உலகமே ஒரே கண்டம்: அதில் நாவலந் தீவைத் தேடுவோம்! | 1 |
| 2. | மறைக்கப்படும் வரலாறும் மீட்டெடுக்க வேண்டிய வரலாறும் | 13 |
| 3. | தமிழகக் கடலடியில் கிடைத்ததும் தேட வேண்டிய பணிகளும் | 22 |
| 4. | குமரிக்கண்டம் பற்றிய வரைபடங்களும் குற்றம் சுமத்தும் கூட்டமும் | 32 |
| 5. | உலகத் தொன்மங்களில் பெருவெள்ளக் கதைகள் | 43 |
| 6. | ஆப்பிரிக்கக் கண்டத்தில் வெள்ளக் கதைகள் | 63 |
| 7. | ஆசியாவில் பெருவெள்ளக் கதைகள் | 69 |
| 8. | உலகெலாம் தமிழன் பரவினான் எனும் உண்மை மெய்ப்பிக்க முனைக! | 87 |
| 9. | புதிய அறிவும் புத்துருவாக்கமும் | 97 |
| 10. | முடிவுரை | 103 |


www.t.me/DigitalNoolagam

# உலகமே ஒரே கண்டம்: அதில் நாவலந் தீவைத் தேடுவோம்!

எண்ணிலா ஆண்டுகள் முன்பு உலகில் ஒரேயொரு கண்டமே இருந்தது. அதனை இலத்தீன் மொழியில் பங்கேயா என்று அழைத்தார்கள். பங்கேயா என்றால் எல்லா நிலமும் (*All earth*) என்று பொருள்படும்.



பங்கேயா

இணையத்தளத்தில் உள்ள இலவயக் கலைக்களஞ்சியமான விக்கிபீடியா ஒரே கண்டமாக உலகில் விளங்கிய பங்கேயா எண்ணிலா ஆண்டுகள் முன்பு உடையத் தொடங்கியது என்கிறது. அதிலிருந்து கழன்ற தென்னிலப் பரப்பே கோண்டுவானா. வடக்கில் பிரிந்த நிலப்பரப்பு இலாராசியா ஆகும். கோண்டுவானா மீண்டும் உடைந்து தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசுதிரேலியா என்று பிரிந்தது. அதையடுத்தும் அது உடைந்து தற்போதுள்ள நிலையை அடைந்தது என்று விளக்கம் அளிக்கிறது.

> *இன்றுள்ள ஆசுதிரேலியா, அண்டார்டிகா, தென்னாப்பிரிக்கா, மடகாசுகர், இந்தியா, தென்னமெரிக்கா உள்ளடங்கிய பெருங்கண்டம் ஒன்று இருந்தது. நிலவியல் அறிஞர்கள் அதற்குக் கோண்டுவானா என்று பெயரிட்டார்கள். இப்படி ஒன்றாக இருந்த பகுதிகள் பிரிந்தாலும் அவற்றில் இருந்த விலங்கினம், தாவரங்கள் உள்ளிட்டுப் பல ஒப்புமைக் கூறுகள் அவற்றிடையே காணப்பட்டன.*

www.t.me/DigitalNoolagam

*இவை ஒன்றாக இருந்த கண்டம் பிரிந்தது*
*என்பதை உறுதிசெய்யும் சான்றுகளாகத் திகழ்கின்றன*

என ஆசுதிரேலியாவின் கோண்டுவானாப் பாரம்பரியம் பற்றிய கட்டுரை கூறுகிறது.



1912இல் செருமானிய அறிவியல் அறிஞர் ஆல்பிரடு லோதர் வெக்கனர் (*Alfred Lothar Wegener*) விளையாட்டாக உலகமே ஒரே கண்டமாக விளங்கிய உண்மையைக் கண்டுபிடித்தார். உலக வரைபடத்தை எடுத்தார். கத்திரிக் கோலால் ஒவ்வொரு கண்டத்தையும் தனியாக வெட்டி எடுத்தார். ஒரு கண்டத்தின் படத்தை மற்ற கண்டத்துடன் ஒப்பீடு செய்தார். ஒரு கண்டமும் இன்னொரு கண்டமும் பொருந்தின. ஆக விளையாட்டாக ஓர் அறிவியல் உண்மையை அவர் 1912 அளவில் சொன்னார். கண்டங்களின் இடப்பெயர்வுக் கோட்பாட்டின் தந்தை என நிலவியல் அறிஞர்கள் அவரை அழைக்கின்றனர். 1950 வரை அவர் கண்டிபிடிப்பை உலகம் ஏற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவார்ந்த சமுதாயம் அறிவியலை அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை. ஒவ்வொரு கண்டுபிடிப்பையும் கேள்வி மேல் கேள்வி கேட்டு விவாதத்திற்கு உட்படுத்தி உண்மையைக் கண்டறியும் சமுதாயமே உலகில் உச்சம் பெறும். எனவே காலந்தாழ்த்தி ஆல்பிரடு வெக்கனர் கூற்று ஏற்கப்பட்டதில் தவறில்லை.

பங்கேயா உடைந்து அதிலிருந்து கோண்டுவானாவும் இலாராசியாவும் பிரிந்தனவா? கோண்டுவானாவும் இலாராசியாவும் இணைந்து பங்கேயா உருவானதா? என்று விவாதமே நடந்தது. இந்த விவாதத்தில் கோண்டுவானா மற்ற கண்டங்களுடன் இணைந்து பங்கேயாவாக உருப்பெற்றது. பின்னர்ப் பங்கேயா உடைந்து கோண்டுவானா இலாராசியா எனப் பிரிந்தது என்றும் விடைகள் புலப்பட்டன.

*The Formation of Pangaea: The Making of a Supercontinent* என்ற தலைப்பில் பங்கேயா என்று ஒரு கண்டம் உருவானதை டொனால்டு எல். பிளான் கார்டு எழுதுகிறார்.

www.t.me/DigitalNoolagam

அந்த ஆய்வேட்டில்,

> *கோண்டுவானாப் பெருங் கண்டமாகத் திகழ்ந்தது. இன்று தென்பசிபிக் பெருங்கடல் உள்ள பகுதியில் அக்கண்டம் அமர்ந்திருந்தது. நண்ணிலக் கோடு வரையும் அதைத் தாண்டித் தென்துருவம் வரையும் பரவி இருந்தது. பல கண்டங்கள் உடைந்து சிதறிய துகள்களையும் குப்பைகளையும் புழுதியையும் இன்று பசிபிக் பெருங்கடல் என்று சொல்லப்படும் பகுதியில் துடைத்தெறிந்துவிட்டு அங்கு வீற்றிருந்தது கோண்டுவானாப் பெருங்கண்டம்*

என்று கூறுகிறார்.

நண்ணிலக் கோட்டுக்கு எதிர்த்திசையில் இலாராசியா என்ற சிறிய கண்டம் இருந்தது. அந்நிலப்பரப்பே வளர்ந்து பெரிதாகி வட அமெரிக்கா என்று ஆயிற்று. கிழக்கில் எவ்வளவு தூரமென வரையறுக்க இயலாத் தூரத்தில் பால்டிகா என இன்னொரு சிறிய கண்டம் இருந்தது. அக்கண்டமே இன்றைய அய்ரோப்பாவின் பெரும்பகுதியை உள்ளடக்கி நின்ற நிலப்பரப்பாகும்.

ஆங்காங்கே எங்கிருந்தன எனச் சொல்லவியலா இடத்தில் சிறு சிறு கண்டங்கள் இருந்தன. அவை ஆசியாவுடன் பின்னாளில் இணைந்தன.

இலாரென்சியாவும் பால்டிகாவும் மோதிக் கொண்ட போது தென்துருவப் பகுதியில் நகர்ந்து இன்றுள்ள தென் அட்லாண்டிக் நோக்கிக் கோண்டுவானா சென்றது. கோண்டுவானா என்ற பெரும் கண்டம் ஆப்பிரிக்காவை, தென்னமெரிக்காவை, இந்தியாவை, அண்டார்டிகாவை, ஆசுதிரேலியாவை, நியுகினியாவை, நியுசிலாந்தை உள்ளடக்கியதாக இருந்தது. இன்று வேறு கண்டங்களுடன் ஒட்டியுள்ள பல பகுதிகள் அப்பெருங் கண்டத்தின் பகுதிகளாக இருந்தன. மத்திய அய்ரோப்பா, இத்தாலி, ஃபால்கன் தீபகற்பம், துருக்கி, மத்தியக் கிழக்கு நாடுகள், ஈரான் ஆகியவையும் கோண்டுவானாப் பெருங்கண்டத்தின் பகுதிகளாக விளங்கின.

எனவே தமிழர் நாகரிகம் பற்றிய தடயங்களை இன்றைய இந்தியாவிலும் அதனை ஒட்டிய கடல் மடியிலும் மட்டும் தேடினால் போதாது. உலகின் முதல் பெருங்கண்டத்தில் இருந்து தான் உலக முதன் மொழி பேசிய தமிழனின் வரலாற்றைத் தொடங்கல் வேண்டும். யாதுமூரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் கூற்று உண்மையே! உலக மாந்தர் நாம்! ஒரே கண்டத்தில் உதித்துப் பிறந்தவர் நாம்! எனவே மாந்த குல

www.t.me/DigitalNoolagam

வரலாற்றில் கடலடியில் கண்டெடுக்கப்பட்ட தடயங்களில் தமிழன் தொன்மைத் தடயங்கள் தட்டுப்படுகின்றனவா என்று தேடியாக வேண்டும். இதுவரை கண்டெடுக்கப்பட்ட நாகரிகங்களில் தமிழ்க் கூறுகளை நாம் ஆய்ந்தாக வேண்டும். இன்னும் அதிகமாகக் கடல் மடியில் ஆதாரம் தேடி மேய்ந்தாக வேண்டும்.

**தேடத் தொடங்குவோம்**

தி. இந்துசுதான் டைம்சு நாளேடு 18.12.2009 ஆம் நாளன்று இலண்டனில் இருந்து பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா *(PTI)* செய்தியாளரின் செய்தியை வெளியிட்டது.

கிரேக்கத் தத்துவஞானி பிளாட்டோ கி.மு. 350 அளவிலேயே தொழில் நுட்பத்தில் சிறந்தோங்கிய கண்டம் பற்றிக் குறிப்பிட்டார். அட்லாண்டிசு என்ற அந்தப் பெருங்கண்டம் ஒரு நாளிரவில் அட்லாண்டிக் பெருங்கடலின் அலைகளால் விழுங்கப்பட்டுக் காணாமல் போயிற்று.

கடலடி அகழ்வாய்வில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர்கள் அந்தக் கண்டத்தைக் கரீபியன் பகுதிக் கடலடியில் கண்டெடுத்துள்ளனர் எனப் பிரிட்டனின் புகழ்மிகு நாளேடு டெய்லி மிர்ரர் செய்தி வெளியிட்டது. கடலடியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் ஒரு நகரின் அழிவை அச்செய்தி வெளிப்படுத்தியது. எகிப்திய நாகரிகத்துக்கு முற்பட்ட பிரமிடுகள் அங்கே கண்டெடுக்கப் பட்டன. கி.மு. 2600 அளவில் இந்தப் பிரமிடுகள் கட்டப் பட்டிருத்தல் வேண்டுமென ஆய்வாளர்கள் சொன்னார்கள்.

அதுபற்றி மேலும் எழுதுகையில் பி.டி.அய். செய்தியாளர்:

> *உண்மையில் பிளாட்டோ கூற்றுப்படி சாலமன் அரசனின் காலத்துக்கு 9000 ஆண்டுகள் முன்பாக மேற்கு அய்ரோப்பாவின் பெரும் பகுதியையும் ஆப்பிரிக்காவையும் வென்றெடுத்த எர்குலிசின் வெற்றித் தூண்டுகள் எதிரே விரிந்து பரந்திருந்த கடல் ஆதிக்க வல்லரசாக அட்லாண்டிசு விளங்கிற்று. ஒரு நள்ளிரவில் ஆகூழின் பயனாக அட்லாண்டிசு கடலில் மூழ்கியது*

எனப் பிளாட்டோ கூறியதைப் பதிவு செய்துள்ளார்.

www.t.me/DigitalNoolagam



கடலடியில் பிரமிடுகள் கண்டுபிடிப்பு

அட்லாண்டிசு என்பது கிரேக்க மொழியில் அட்லசு ஆகும். தமியூரசு - ழித்தியசு தீவுகள் என்று கி.மு.360 அளவில் பிளேட்டோ எழுதிய நூலில்தான் முதன்முதலில் இந்தச் சொல் பயன்படுத்தப் படுகிறது.

அட்லாண்டிசுக் கண்டம் இருந்தது என்ற கருதுகோளைத் தீவிரமாக முன்வைத்தவர் அமெரிக்க நாடாளுமன்றச் செனட்டராக மின்னசெட்டாவிலிருந்து தேர்வு பெற்ற இக்நாசியசு டொன்னெலி (1831-1901) ஆவார். அவர் 1882 இல் எழுதிய *Atlantis: The Ante-Diluvian world* என்ற நூல் இன்றளவும் மறைந்த அந்த மாபெரும் கண்டம் பற்றிப் பேசுபவர்க்கு ஊக்க மூட்டும் நூலாகும். அட்லாண்டிசு மனித நாகரிகத்தின் தொட்டில் என அவர் எழுதினார். இருபுறம் இருந்த கடல் ஒட்டிய பண்பாட்டுக்கும் அட்லாண்டிசுக்கும் நிலவிய ஒப்புமையை அவர் விளக்கினார்.

பிரியன் ஆக்டன் (*Brian Haughton*) எழுதிய *Hidden History: Lost Civilization, Secret Knowledge and Ancient Mysteries* என்ற நூல் அட்லாண்டிசு இப்படி இருந்திருக்கக் கூடும் எனப் பல்துறை அறிஞர்கள் உருவகித்து வரைந்த வரைபடங்களைக் காட்டும். அட்லாண்டிசு பற்றிய பதிவுகளைப் பல்துறை வல்லார் பல சமயங்களில் எழுதிக் குவித்துள்ளனர். இந்தப் பதிவுகளையும் வரைபடங்களையும் தொகுத்துக் காட்டவே ஒரு நூல் பற்றாது என்று அவர் எழுதினார்.

சப்பான் தீவுக் கூட்டங்களை ஒட்டி அண்மைக் காலத்தில் கடலடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளையும் மறைந்துள்ள வரலாற்றையும் இந்நூல் மறைக்காமல் சொல்கிறது. அட்லாண்டிசுக் கண்டம் போன்றே பசுபிக் கடலில் மாபெரும் கண்டம் ஒன்றிருந்தது என்பது உறுதிபடத் தொடங்கியுள்ளது.

www.t.me/DigitalNoolagam



யோனாகுனி கடலடியில் ஆய்வு

யோனாகுனி (*Yonaguni*) தீவை ஒட்டிக் கடலில் மூழ்கித் தேடிய ஆய்வாளர்கள், கடல் மட்டத்திலிருந்து 100 அடி ஆழத்தில் பிரமிடுகள் போன்ற வடிவமைப்புடன் கூடிய கட்டுமானங்களைக் கண்டறிந்தார்கள். கற்களால் ஆன இந்தக் கட்டுமானங்கள் இயற்கையாக உருவானவையா? இலெமூரியாக் கண்டத்தின் இழந்த நாகரிகத்தின் எச்சங்களா? என்று வினா முளைத்தது.

இலெமூரியாக் கண்டம் என்பதை மூ என்றும் சொல்வார்கள். இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள இந்து மடாலயங்களில் கிட்டும் ஆவணங்கள் இது பற்றிப் பேசுகின்றன.




GEOGRAPHICAL POSITION OF – MU. WHERE THE SACRED & INSPIRED BOOKS WERE WRITTEN. BC. 70 000.

Hanghton begins with Atlantis widely considered the greatest enigma of all (and among the most controversial). Merely presenting thumbnail sketchers of all the theories used to

www.t.me/DigitalNoolagam

describe it would require a full length book in itself..... Hidden History does not neglect Atlanties Pacific Counterpart especially in view of recent discoveries made around the Japanese islands. Under the clear waters of Yonaguni, scuba divers recently found a pyramidial structure sitting nearly hundred feet below the surface. Could this artificial looking formation of massive stone be result of natural process? or is it remains of the lost civilization of Lemuria, also known as Mu, mentioned in the Hindu monastry records of Burma and India?

அட்லாண்டிசு, இலெமூரியா என்னும் இரு கண்டங்களிலும் வாழ்ந்த மனிதகுல முன்னோடிகள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் உச்ச நிலை கண்ட தொழில் நுட்பங்களில் வல்லமை பெற்றிருந்தனர்.

அதற்குச் சான்றாக ஆக்டன் காட்டும் 'பாக்தாத் மின் கலம்' பிரமிப்பூட்டும் சான்றாகும். தங்கத் தகடுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மின்கலம் தாமசு எடிசன் முதல் மின்விளக்கை கண்டுபிடிக்குமுன் ஈராயிரம் ஆண்டுகள் முன்பே அட்லாண்டிசு நாகரிகத்தில் இருந்தது. மின்கலம் மூலம் மின்னாற்றலைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் இருந்தது என *Hidden History* நூலுக்கான அணிந்துரையில் ஃபிராங்க் சோசப் கூறியுள்ளார்.

எனவே நாம் குமரிக்கண்டம் என்ற சொல்லாட்சியைப் புழக்கத்தில் விடுமுன்பு பயன்படுத்திய இலெமூரியாக் கண்டம் இருந்தது பசிபிக் பெருங்கடலில் என்றால் சப்பானை ஒட்டிய கடல் மடியில் அகழாய்வு செய்து வெளிக்கொண்டு வந்த சான்றுகளில் தமிழ்ச்சுவடுகளை நாம் ஆராய வேண்டும்.




*Problem of Lemuria: The Sunken continent of the Pacific* நூலாசிரியர்கள் லெவிசு இசுபென்சு மற்றும் பால் டைசு

*இன்று பசிபிக் பெருங்கடலை ஒட்டியுள்ள நாடுகளில் வாழும் இனங்களுக்கோ அவர்களின் மூதாதையர்க்கோ தொடர்பில்லாத அழிவுகளின் தடங்கள் ஆங்குள்ளன. இந்த அழிவுகளை ஆய்ந்து தொன் முதுகாலத்தில் அங்கிருந்த பழம் பெரும் மக்களின் எச்சங்களைப் பற்றிய நம் கவனம் உள்ளது*

www.t.me/DigitalNoolagam

*கணக்கிலிட முடியாத நூற்றாண்டுகளாகப் பசிபிக் கடலில் நிலம் மெல்ல மெல்ல அமிழ்ந்தது. இன்றும் அமிழ்ந்து வருகிறது. மிக மிக ஆழமாகக் கடலின் அடியில் இலெமூரிய நாகரிகத்தின் பழைய தடயங்கள் மறைந்திருக்க வேண்டும் என நாங்கள் கருதுகிறோம்*

என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




ஆங்கில அமெரிக்க ஆய்வாளர் சேம்சு சர்ச்சுவார்டு 1931 இல் எழுதிய *(The Lost Continent of Mu)* காணாமற் போன மூ எனும் கண்டம் என்ற நூலில் மூ அல்லது இலெமூரியாக் கண்டம் அவாய் தொடங்கிப் பீஜி தீவு வரைக்கும், ஈசுடர் தீவுகளில் தொடங்கி மரியானாவரை பரவி இருந்ததாக எழுதுகிறார். கடற்கோள் ஏற்பட்ட பிறகு தென்னமெரிக்கா வழியாக அட்லாண்டிசுக் கண்டத்தின் கடலோரம் வழியாக ஆப்பிரிக்காவுக்கும் அகதிகள் பரவினர் என்று எழுதினார்.

பிரெஞ்சு எழுத்தாளர் அகசுதசு லெ பிளாஞ்சீயோன் (1825 - 1908) 19 ஆம் நூற்றாண்டில் மூ என்னும் பெருங்கண்டம் பற்றி முதன்முதலில் எழுதினார். மாயன் சுவடிகளை அவர் மொழியாக்கம் செய்த போது மூ என்னும் பழம்பெரும் கண்டம் ஒன்றிருந்தது. அக்கண்டம் கடலுள் மூழ்கியபோது அதனின்று தப்பிப் பிழைத்தோர் மாயன் நாகரிகத்தை உருவாக்கியதாக எழுதினார்.

மூ என்ற கண்டம் ஒன்றில்லை என்ற கருத்துடையவர் *Ophiolite*. மூ இருந்தது என்பது உண்மையானால் *Desmarquet* எழுதிய *Thiacouba prophecy* என்ற நூலின் தகவல்களை ஏற்றாக வேண்டும். நிலவியலாளர் கருத்துக்கு முரண்பட்டதாகவும் அறிவியல் அடிப்படையில் ஏற்க இயலாததாகவும் மூ பற்றிய கருதுகோள் உள்ளதென அவர் கருதுகிறார். பல்வேறு கண்டங்களும் அமர்ந்திருந்த தட்டுகளின் எல்லைகளாகக் காட்டும் வரைபடத்தைக் கொண்டு பசிபிக் பெருங்கடலின் வடபகுதியில் பெருங்கண்டம் இருந்த சான்றுகளே இல்லை என்பது இவர் கருத்தாகும்.

எட்கார் காய்சி (1877-1945) அட்லாண்டிசு பற்றியும் மூ பற்றியும் கற்றறிந்தவர் அவர்தான். முதன்முதலில் மூ என்பதற்கு இலெமூரியாக் கண்டம் என்று பெயர் இட்டவர். அந்தச் சொல்லே இன்று ஆய்வாளரிடையே பேரளவில் புழக்கத்தில் உள்ளது.

www.t.me/DigitalNoolagam

கர்னல் சேம்சு சர்ச்சுவார்டு இந்தியத் துறவி ஒருவரிடம் நண்பர் ஆனார். பிரிந்தானியப் படையில் முப்பதாண்டுகள் பணிபுரிந்தவர். துறவி தந்த ஓலைச் சுவடிகள் மூலம் மூ என்னும் பழம் பெரும் நாகரிகம் உறைந்தது பற்றி அறியலானார்.

**கோண்டுவானா இலெமூரியா மூ பிறகு குமரிக்கண்டம் என்று பல பெயர்களில் சொல்லப்படுவதெல் லாம் தமிழர் வாழ்ந்த நிலமே! அது தொடர்பான நூல்கள் அனைத்தும் படித்தவர் எவரும் இலமே!**




***Eden in the East: The drowned continent of South East Asia*** **என்ற நூலை இசுடீபன் ஓபன் ஈமர் 1999 இல் வெளியிட்டார்.**

கடல் மட்டம் உயர்ந்து வந்ததால் இரு முறை தமிழ்ச் சங்கம் இடமாற்றம் செய்யப்பட வேண்டி வந்தது. பத்தாயிரம் ஆண்டுகள் நீடித்த சங்கம் பற்றித் தமிழர் மரபில் பேசப்படுவது உண்டு. தென் துருவம் வரை நீண்டிருந்த நாடாக, மாலத்தீவையும் இலங்கையையும் உள்ளடக்கிய பெரு நிலப்பரப்பாகக் குமரிக் கண்டம் என்று அழைக்கப்படும் இழந்த தமிழர் நிலமிருந்தது. தொன்மங்களும் இலக்கியங்களும் சொல்வது நிலவியல் சான்றுகளுடன் ஒப்பீடு செய்யத்தக்கதாக இருக்குமாயின் அதைக் கற்பனை என நமது அறிவியலார் முடிவு செய்யலாகாது.

*இந்திய வரலாற்றைப் பல்லாயிரம் ஆண்டுகள்*
*விரிவாக்கும் சான்றுகள் கடலடியில் கிடைத்தன.*
*தேடினால் இன்னும் கிடைக்கும்*

என்கிறார் டாக்டர் கொண்ராட் எல்சுட்.

இந்திய மொழிகளில் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றில் இடம் பெற்றிருந்த இரண்டு பழமையான வரைபடங்களை டாக்டர் ரோனால்டு பி. அஞ்சார்டு அவர்களுக்கு வரலாற்றாசிரியர் சம்பத் அய்யங்கார் அனுப்பி வைத்த செய்தியும் நூலில் உள்ளது. திரு. எனிட் எம். இர்வின் அவர்கள் கல்லில் செதுக்கப்பட்ட இலெமூரியாக் கண்டப் படத்தை டாக்டர் அஞ்சார்டுக்கு அனுப்பி வைத்தார்.

www.t.me/DigitalNoolagam

*மசுகாரா கண்டத்தில் தான் இலெமூரிய நாகரிகம் தோன்றியது. இது இந்து மாக்கடலில் இருந்தது. ஆசுதிரேலியா வரை இக்கண்டம் நீண்டிருந்தது*

என்று கல்லில் செதுக்கப்பட்ட சிற்பமும் வரலாறு கூறும்.



**பெருநாட்டில் ஐகா அருகில் கண்டெடுக்கப்பட்ட கல்லில் செதுக்கப்பட்ட இலெமூரியாக் கண்டத்தின் படம்**

எனவே நாம் குழம்பிவிட்டோம். நமது பிறந்தகமாம் குமரிக்கண்டத்துக்குப் பலர் பல்வேறு பெயர்களைக் கூறி வந்துள்ளனர் என்பதை நாம் முதலில் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

அட்லாண்டிசு பற்றிக் கி.மு. 360 இல் பிளாட்டோ முதலில் கூறினார். எட்கார் காய்சி அட்லாண்டிக் கண்டத்தின் அழிவுகளைப் பெர்முடா அருகே காணலாம் எனச் சொன்னார். 1969 இல் பிமினி அருகே கட்டடவியல் கணக்கியல்படி கற்கள் இணைத்து உருவாக்கப்பட்ட வடிவங்கள் கடலடியில் கண்டுபிடிக்கப்பட்டன. எட்கார் காய்சியின் வருமுன் உரைப்பது மெய்ப்பிக்கப்பட்டதாகப் பலர் மகிழ்ந்தனர்.

மற்றவர்கள் இதை ஏற்கவில்லை, அண்டார்டிகா அருகே அட்லாண்டிசு இருந்தது என ஒரு சாரார் நம்பினர். மெக்சிகோ அருகே அட்லாண்டிசு இருந்ததாக இன்னொரு சாரார் இயம்பினர்.

www.t.me/DigitalNoolagam

பிரிட்டன் அருகில் இருந்தது, கியூபா பக்கத்தில் இருந்தது என அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

> *அட்லாண்டிசு பெரிய கண்டமோ தீவோ அன்று. வெடித்துச் சிதறிய வான்வெளிக் கிரகமே அட்லாண்டிசு*

என்றார் அலன் ஆல் ஃபோர்டு என்ற எழுத்தாளர்.




**அரிசியோ சந்தோசுவின் அட்லாண்டிசு நூல்**

பேராசிரியர் அரிசியோ சந்தோசு எழுதிய *Atlantis: The Lost Continent Finally Found* என்ற நூல் அட்லாண்டிசு எங்கிருந்தது என்ற புதிருக்கு விடை கண்டது.

> *பொருத்தமான இடத்தை விட்டுவிட்டு வேறெங்கோ தேடியதால் இதுவரை அட்லாண்டிசு கண்டுபிடிக்கப் படவில்லை. அக்கண்டம் தென் சீனக் கடலில் ஒளிந்துள்ளது*

என்று தீர்ப்பளித்தார்.

இவரது இணையத்தளம் 18 செப்டம்பர் 2003 இல் புதுப்பிக்கப்பட்டது. 1997 முதல் 2003 வரை இவரது இணையத் தளம் 2,134,883 பேரால் படிக்கப்பட்டது. 2003 இல் புதுப்பிக்கப் பட்ட பிறகு 1,843,632 பேர் பார்வையாளர்களாக உள்ளனர்.

ஆக நம் குமரிக்கண்டத்தை வங்காள விரிகுடாவில், அரபிக்கடலில், இந்துமாக்கடலில் தேடியாக வேண்டிய நாம் தென்

www.t.me/DigitalNoolagam

சீனக் கடலிலும் ஆய்வு நடத்தியாக வேண்டிய நிலையில் உள்ளோம்.

> *1970 முதல் நிகழ்ந்த ஆய்வுகள் உலகில் மூன்று காலக் கட்டங்களில் கடற்கோள்கள் நிகழ்ந்ததாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு 15,000-14,000 ஆண்டு முன்பும் 12,000-11,000 ஆண்டு முன்பும் 8,000-7,000 ஆண்டு முன்பும் முப்பெரும் கடலழிவுகளை உலகம் எதிர்கொண்டது. பிளாட்டோ Timaews and critias நூலில் அட்லாண்டிசுப் பெருவெள்ளம் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் இயற்கைப் பேரிடர் 12,000-11,000 ஆண்டுகட்கிடையே நிகழ்ந்ததெனக் கூறலாம். தமிழிலக்கியங்கள் குமரிக்கண்டம் பற்றியும் கடற்கோள் பற்றியும் கூறுவதும் இதே காலத்தினதே.*

என *Bridging the Myth and Science of flood* என்ற கட்டுரையில் *Harry Young* கூறுகிறார். தியோசபிகல் பல்கலைக் கழகம் வெளியிட்ட ஏப்ரல்/மே 2000 சன்ரைசு இதழிகையில் அவர் இவ்வாறு எழுதினார்.

குமரிக்கண்டம் என்பது தென்சீனக் கடல் மடியில் ஒளிந்திருக்கும் என்பதையும் நாம் தேடியாக வேண்டும். அறிவியல் கருவிகள் வந்து விட்டன. நீர்மூழ்கிக் கலங்கள் வந்துவிட்டன. கடலடியில் அமிழ்ந்துவிட்ட கலங்களைத் தேடியவர்கள் கற்சிலைகளை, கோட்டைகளைத் தற்செயலாகக் கண்டெடுத்தனர். இன்று கனிமங்களைத் தேடுகிறார்கள். இதற்கென உலகக் கடல்மடி ஆணையத்தையே *International Sea bed Authority* அய்க்கிய நாடுகள் மன்றம் உருவாக்கியுள்ளது. இந்து மாக்கடலில் 1,50,000 சதுரக் கிலோ மீட்டர் இந்திய ஆளுமைப் பகுதியென இந்த ஆணையம் அறிவித்துவிட்டது. கனிமம் தேடும்போதே நம் அமிழ்ந்த நாடுகளையும் தேடுங்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடியுங்கள் என்றே இந்திய நடுவண் அரசிடம் நாம் கோரிக்கை வைப்போம்.

www.t.me/DigitalNoolagam

# மறைக்கப்படும் வரலாறும் மீட்டெடுக்க வேண்டிய வரலாறும்

தமிழர் வரலாற்றுக் கட்டமைப்பில் ஈடுபடுவோர் இன்று புழக்கத்தில் உள்ள வரலாற்றை மட்டுமே மனதில் இருத்திக் கொள்ளக் கூடாது. மாற்று வரலாறு எழுதுபவர்கள் நூல்களையும் படித்திட வேண்டும். மறைக்கப்படும் வரலாறு பற்றியும் புரிந்து கொள்ள வேண்டும்.

*Ancient Civilizations: Six great Enigmas* என்ற நூல் வில் ஆர்ட் அவர்களும் இராபர்ட்டு பெர்ரின்கர் அவர்களும் கூட்டாக எழுதிய நூலாகும். இந்நூல் இன்று அதிகாரப் பூர்வ நூல் வரலாறு என்று ஏற்கப்பட்ட வரலாற்றுக்கும் மாற்று வரலாறு எழுதிப் புதிய உண்மைகளைப் புலப்படுத்த முற்படுபவர்களுக்குமுள்ள முரண்பாடு களை விவாதிக்கிறது. அப்படி தமிழின் தொன்மையை நிலைநாட்ட ஆய்வு செய்வோர்க்கும் அதில் உட்புகுந்து இடைச் செருகலாகத் தமிழர் வரலாற்றில் குழப்பத்தை உருவாக்குபவர்களுக்கும் நடக்கும் கருத்தியல் போர் பற்றியே தனி நூல் எழுத வேண்டி இருக்கும்.

கிறிசு துன் எழுதிய *The Giza Power Plant: Technologies of Ancient Egypt* என்ற நூல் எகிப்திய பிரமிடுகள் உருவாக்கப்படக் காரணமான பொறியியல் புலமைமிகு வல்லுநர்கள் பற்றிப் பேசுகிறது. நம்மிடையே கரிகாற்சோழன் கட்டுவித்த கல்லணை உண்டு. ஆயின் அந்தப் பொறியியல் புதுமை பற்றியோ அதனை உருவாக்கிய தமிழ்ப்பொறிஞர் மற்றும் வினைஞர் திறம் பற்றியோ விதந்தோதும் நூற்களை நாம் உருவாக்குவதில்லை.

ஆயிரமாண்டு இடையறா வரலாற்றுச் சிறப்புமிக்க செஞ்சிக் கோட்டை என்றால் இராசா தேசிங்குவின் கதையுடன் அந்த வரலாற்றை முடித்துக் கொள்பவர்கள் நாம்.

சமணமுனிவர்கள் இருக்கையாக இருந்தது முதல் பல்வேறு மன்னர்களின் ஆட்சியின் கீழ் அங்கு நிகழ்ந்த மாற்றங்களை அங்குலம் அங்குலமாக அலசி ஆய்வு செய்ய ஆறு ஆண்டுகள் நாள்தோறும் செஞ்சிக்கு சென்று ஆய்ந்தவர் அறிஞர் ழான் தெலாசு. அவரின் ஆய்வு நூலைப் பிரெஞ்சு மொழியில் பிரஞ்சு அரசு நிறுவனமான எகோல் பிரான்சே எக்சுடீம் ஓரியண்டு வெளியிட்ட போதே நியு இந்தியன் எக்சுபிரசில் அது பற்றிக் கட்டுரை எழுதினேன். ஆங்கிலத்திலும் அந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டது. இன்னும் தமிழில் வெளிவரவில்லை. ஆறாண்டுகள்

www.t.me/DigitalNoolagam

ஆகிவிட்டன. அந்நூல் நுவலும் பொறியியலில் தமிழர்க்கிருந்த அறிவும் ஆற்றலும் கோட்டை வடிவமைப்பில் தமிழர் பெற்றிருந்த திறமும் இன்று தமிழர் அறியாதவை. ஆயின் தரணி அறிந்தவை.

அரசியின் குளியலறைக்கு ஆங்காங்கு மலை மீதே சுனைகளில் நீரைத் தேக்கிக் குழாய்கள்மூலம் கொண்டுவந்து குளியலுக்கு நீரைப் பொழியச் செய்த நேர்த்தியை வியக்கிறார் ழான் தெலாசு. எந்த நீரூற்றுக் கருவியும் இல்லை. வடிவமைப்பிலேயே குளியலறையில் நீர் கொட்டிற்று. எடுத்துக்காட்டாக இச்செய்தி இங்குச் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு துறையிலும் நந்தமிழர் நாகரிகம் பற்றி நாம் அறிதல் வேண்டும். அறிந்ததை அவனிக்குச் சொல்லுதல் வேண்டும். இருக்கு வேதம் தமிழரின் அணைகள் நீரைச் சிறைப்பிடிக்கும் சிறைகள் என்று எழுதியது. நீரைச் சிறைப்பிடித்ததாக நினைத்து அணைகளை இடித்த மதியீனர்களின் செயலும் நம்மவர் பெற்றிருந்த பொறியியல் அறிவும் சிந்துவெளியில் புதைந்து கிடப்பது இன்று வெளிப்பட்டுவிட்டது. ஆயின் கடல் மடியில் உள்ள நம் பழந்தமிழ் நாட்டை இலக்கியங்களே படம்பிடிக்கின்றன. அறிவியல் துணைகொண்டு அகழ்ந்து ஆழ்கடலில் இருந்து அரிய வரலாற்றை நாம் மீட்டெடுத்தாக வேண்டும்.

துல்லியமாகச் செதுக்கப்பட்டு ஒவ்வொன்றும் 16 டன் எடை கொண்ட கற்களை ஒன்றன் மீது ஒன்று அடுக்கி அவை பிணைந்து கொள்ள ஏதோ ஒரு கலவையைப் பயன்படுத்திப் பிரமிடுகள் கட்டப்பட்ட நேர்த்தியைப் பிரமிப்புடன் பேசுகிறார்கள். இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் ஆயிரமாண்டு விழாவால் தான் அகிலமெங்கும் பேசப்படுகிறது.

> *13 ஏக்கரில் சுண்ணாம்புக்கல் படுக்கையை இன்றைய இலேசர் தொழில்நுட்பம் கொண்டு செய்தது போன்று மயிரிழைகூட மாறுபடாமல் செப்பமாகவும் நுட்பமாகவும் துல்லியமாகவும் அடித்தளமாகப் பிரமிடுகளுக்கு அமைத்த திறம் கண்டு உலகம் வியக்கிறது*
>
> *350 அடி உயரத்துக்கு 26டிகிரி கோணத்தில் மேலேறிச் செல்ல அம்பு போல் நீண்ட பாதையைக் குடைந்து உருவாக்கிய திறமும், பிரமிடுகளின் உள்ளே இயந்திரங்கள் மூலம் செதுக்கப்பட்டுப் பதியப்பெற்றுள்ள கிரானைட் கற்களின் பயன்பாடும் உலகம் போற்றும் உயர்தொழில்நுட்பம் அன்றிருந்தது என்பதை அவனிக்கு அறிவிக்கின்றன.*

www.t.me/DigitalNoolagam

இவ்வாறு எகிப்திய நாகரிகத்தையும் அதன் சின்னமான பிரமிடுகளையும் போற்றுபவர்களே மொகஞ்சதரோவில் கண்டெடுக்கப்பட்ட திராவிட நாகரிகம் பற்றியும் பேசுகிறார்கள் பெருமிதமுடன்! எழுதுகிறார்கள் நம் ஏற்றம் பற்றி!

முதல் செங்கல் நாட்டும் முன்பாகவே முழு நகரின் வரை படத்தையும் திட்டமிட்டு வடிவமைத்து நேரிய வீதிகளுடன் கட்டப்பட்ட நகரின் நேர்த்தி தமிழரின் கீர்த்தியை எகிப்திய நாகரிகத்துக்கு இணையாகப் பேச வைக்கிறது. 99.99% விழுக்காடு மக்கள் இனக்குழுக்களாக, நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த போது உச்சநிலை நகரமைப்புடன் உயரிய நாகரிகம் கண்டவர்களாகத் திராவிடர்கள் வாழ்ந்தது கண்டு வியக்கிறார்கள் இந்நூலாசிரியர்கள்.

பேசாமல் சிந்து சமவெளி நாகரிகத்தின் பெயரைச் சரசுவதி நாகரிகமென மாற்றித் தமதாக்கிக் கொள்ளவும் ஒரு கூட்டம் திட்டமிட்டுப் பணியாற்றுகிறது. வீண்பழி சுமத்தாதீர் என்கிறீர்களா? எல்லா நாட்டிலும் நடந்த வரலாற்று மறைப்பு - இருட்டடிப்புத்தான் இங்கும் நடந்தது; நடக்கிறது. மனித இயல்பு அது! அவர்கள் மேல் தவறில்லை.

மேலை நாடுகளிலும் இத்தகு இருட்டடிப்பு நிகழ்ந்தது உண்டு. 1909 ஏப்ரல் 5 அமெரிக்க மாநிலமான அரிசோனா அரசிதழின் பதிப்பில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. *"Explorations in Grand Canyon: Remarkable find indicates ancient people migrated from Orient"* என்பது அக்கட்டுரையின் தலைப்பு. கடல் மடியில் இருந்த மாபெரும் கடற்பள்ளத்தாக்கில் கண்டு எடுக்கப்பட்ட சான்றுகள், பழங்கால மக்கள் கீழ்த்திசையில் இருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் என்பதை மெய்ப்பித்ததாக அக்கட்டுரை கூறிற்று.

இசுமித்சோனியன் நிறுவன நிதியுதவியுடன் அந்த ஆய்வு நடந்தது. கற்களில் மனிதக் கைகளால் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள், செப்புக் கருவிகள், எகிப்திய கடவுட் பதுமைகளின் சிலைகள், பதப்படுத்தப்பட்ட சடலங்கள் போன்றவை கண்டு எடுக்கப்பட்டதாக ஏடுகளில் செய்திகள் வெளியாயின. இச்செய்தி இன்றளவும் ஒரு நூற்றாண்டு நடந்தும் புதிராகவே உள்ளது. உண்மை புலப்படாத செய்திக் கசிவு என்றே எடுத்துக்கொள்ள முடிகிறது. ஏனெனில் எந்த நிறுவன நிதி உதவியோடு ஆய்வு நிகழ்ந்ததோ அந்நிறுவனமே இக்கண்டுபிடிப்புப் பற்றித் தனக்கேதும் தெரியாது எனக் கைவிரித்து விட்டது. மீண்டும் அதே இடத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். வெறும் கையினராகத் திரும்பினார்கள். இது பற்றிக் கருத்து வெளியிட்ட ஆய்வறிஞர் டேவிட்டு ஆர்செர் சைல்டுரெசு,

www.t.me/DigitalNoolagam

*ஒரு புகழ்பெற்ற இசுமித்சோனிய நிறுவனப் பெயரோடு ஊடகங்களில் முதல்பக்கச் செய்தியாக வெளிவந்து பல பக்கங்களில் விளக்கமாகக் கூறப்பட்ட இந்தச் செய்தியை முற்றிலும் பொய் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது*

என்று கருத்து வெளியிட்டார்.

*NEXUS NEWTIMES VOL. 2 NO. 13* ஆசுதிரேலியாவில் இருந்து வெளியாகும் இதழாகும். அந்த இதழில் அகழ்வாராய்ச்சி கண்டு பிடிப்புகள் மறைப்பு என்ற தலைப்பில் டேவிட் ஆர்செர் சைல்டுரெசுவின் கட்டுரை வெளியாயிற்று.

அமெரிக்காவில் உலக ஆய்வாளர் மன்றம் ஒன்றுள்ளது. *World Explorers Club 403 Kemp Streat, Kumpton, Illinois 60946-0074 USA* என்பது அம்மன்றத்தின் முகவரியாகும். அம்மன்றம் கருத்துத் தெரிவிக்கையில்

*நாம் அனைவரும் Raiders of the Ark என்ற திரைப்படத்தை அறிவோம். அப்படத்தில் செருசலேம் கோயிலில் கண்டு எடுக்கப்பட்ட முக்கிய வரலாற்றுச் சின்னம் ஒரு பெட்டியில் அடைக்கப்பட்டு, பெரிய கிடங்கில் பதுக்கி வைப்பதாகக் காட்சி காண்பிக்கப்படும். அது கற்பனையான திரைக்கதை என்றாலும் உண்மைக்கு நெருக்கமான நிகழ்வையே படம்பிடித்துக் காட்டியது.*

*அகழ்வாராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் இருட்டடிப்புக்கு ஆளாக்கப்படுவது பற்றிய குற்றச் சாட்டுக்களை ஆராய்வோர்க்குத் தன்னாட்சி அதிகாரமுள்ள அமெரிக்க நடுவணரசு நிறுவனமான இசுமித்சோனியன் நிறுவனமே அமெரிக்கக் கடற் பகுதியில் அகழ்வாய்வு நடத்தி கண்டறியப்பட்ட புதிய உண்மைகளை அந்நிறுவனமே இருட்டடிப்பு செய்வது வருந்தத்தக்கது*

என்று கருத்து வெளியிட்டது.

வாடிகன் நிர்வாகத்தின் மீதே பன்நெடுங்காலமாக வெளியுலகு அறியவிடாமல் ஏராளமான ஆவணங்களைப் பதுக்கி வைத்து இருக்கின்றது என்ற குற்றச்சாட்டு உண்டு.

வரலாறு மற்றும் மதஞ்சார் பழம்நூல்கள் அப்படி மறைக்கப் பட்டுள்ளன. அவை வெளிவருமாயின் இன்று புழக்கத்தில் உள்ள நூல்கள் புகலும் உண்மைகளைப் பொய் என்று ஆக்கக்கூடும்.

www.t.me/DigitalNoolagam

மதக்கருத்துக்களை மறு ஆய்வுக்கு உட்படுத்தக் கூடும். எனவே அதுபோன்ற இருட்டடிப்பில், வரலாற்று மறைப்பில் இசுமித்சோனியன் நிறுவனம் ஈடுபடுவதாகவே தோன்றுகிறது என உலக ஆய்வாளர் மன்றம் கருத்து வெளியிட்டது.

இந்த இருட்டடிப்பு வேலைகள் 1909 இல் அல்ல 1881 முதலே தொடங்கி விட்டன என்று அம்மன்றம் குற்றம் சாட்டியது. பெரும் கடற்பள்ளத்தாக்கை ஆய்வு செய்த நிலவியல் அறிஞர் ழான் வெசுலி பஃவெல் அவர்கள் இசுமித்சோனிய நிறுவன நிலவியல் துறையின் கிழக்குப் பிரிவுக்குச் சைரசு தாமசு என்பவரை இயக்குநராக நியமித்ததுமுதலே இச்சிக்கல் உருவாகத் தொடங்கியது.

இனவியல் துறைக்கு இயக்குநராகச் சைரசு தாமசு வந்தபோதே அமெரிக்க இந்தியர்களிடமிருந்து மாறுபட்ட பெரிய கட்டடங்களைக் கட்டக்கூடிய வேறோர் இனம் வாழ்ந்திருக்கக் கூடும் என்ற கருத்துடையவராகவே பொறுப்பு ஏற்றார். ஆனால் ழான் வெசுலி பஃவெல்

> *அமெரிக்க இந்தியர்கள் பழங்குடிகளோ, காட்டு மிராண்டிகளோ அல்ல அவ்வாறு அவர்களைத் தவறாகச் சித்தரிக்கிறார்கள்.*

என்ற எண்ணமுடையவராகவே இருந்தார். உள்நாட்டுப் போரில் அமெரிக்க இந்தியர்கள் கொல்லப்பட்டனர். அந்த ஆறாத புண்ணுக்கு மருந்திடுவதாக நினைத்துக் கொண்டு இசுமித்சோனியன் நிறுவனம் அமெரிக்க இந்தியர்கள் வெகுவாக முன்னேறிய நாகரிகத்தின் வழித்தோன்றல்களே என்ற கருத்தை அரசியல் காரணங்களுக்காக முன் மொழிந்தது.

அந்தக் காலத்தில் கடல் வழித் தொடர்புகளாலும் வணிகத் தொடர்புகளாலும் பல்வேறு பண்பாடுகளுக்கிடையே தொடர்புகளும் கொடுக்கல் வாங்கல் பரிமாற்றமும் கலப்பும் ஏற்படுவதாகச் சொன்ன அறிஞர்களும் இருந்தனர். இவர்களின் கொள்கைக்கு அரண்சேர்க்கும் ஆதாரங்களை அழிப்பது, மறைப்பது, இருட்டிப்புச் செய்வது என எதிர்த்தரப்பு அறிஞர்கள் செயல்பட்டனர். அந்தத் தரப்புக்காக இசுமித்சோனியன் நிறுவனம் பயன்பட்டது.

கடல்கள் பிரிந்து நிற்பதால் ஒவ்வொரு நாகரிகமும் அந்தந்த நிலத்திலேயே முளைத்தன, கிளைத்தன, தழைத்தன. அடுத்துள்ள பண்பாடுகளுடன் தொடர்பற்று, தனித்தே கருவாகி உருவாகித் திருவாகியது என இத்தரப்பு வாதிட்டது. இதை விரித்தால் பெருகும். ஈண்டுக் கொள்ளத்தகுவன வரலாற்றுக் கட்டமைப்பில் உண்மைகளின் இருட்டடிப்பு நிகழ்ந்தே வந்துள்ளது என்பதே ஆகும்.

www.t.me/DigitalNoolagam

The cherished gem of Arizona, the Grand Canyon one of the seven natural wonders of the world, contains a legacy and a link to a history known only by a few, suppressed not only by greed and politics but by a forgotten code hidden right beneath our very feet. It has all beginning to come to light now

என இரு அறிஞர்கள் கருத்து வெளியிட்டனர்.

*அரிசோனா மாநிலத்தின் வைரமென வருணிக்கப் படும் பெரும் கடற்பள்ளத்தாக்கானது உலகில் இயற்கையாக விளைந்த ஏழு அதிசயங்களுள் ஒன்றாகும். அங்கே நம் பாரம்பரியத்தை அறிய, நம் வரலாற்றை அறிய முற்பட்டால் வெகு சிலரே அறிந்த உண்மைகளை நாமும் அறிய வாய்ப்புள்ளது. நம் காலடியில் மறைந்திருக்கும் ஒரு குறியீட்டு மொழியின் வரி வடிவத்தைக் கண்டறிய முடியும். இப்போது அவை யாவும் வெளிச்சத்திற்கு வரத் துவங்கிவிட்டன.*

எனப் பார்சி மெக்வன் மற்றும் மைக்கேல் இலாரன்சு மோர்டன் ஆகியோர் 6 தொகுதிகளில்

*எகிப்திய தொன்மைக் கருவூலங்கள் பெரும் கடற் பள்ளத்தாக்கில் உள்ளனவா?*

என்ற தலைப்பில் எழுதினார்கள்.

ஃபோனிக்சு பொது நூலகத்தில் நுண்படச் சுருள்களும் சில புகைப்படங்களும் இக்கண்டுபிடிப்புப் பற்றி உள்ளன. கணிதவியல் உண்மைகளும் புலப்படுவதாக அவ்விரு அறிஞர்களும் கூறி உள்ளனர்.

எனவே வரலாறு தொடர்பான நம் பழந்தமிழகத்தின் புதிர்களுக்கு விடை அரிசோனாவின் கடற்பள்ளத்தாக்கில்கூடக் கிடைக்காமல் போகலாம். ஆயின் ஏன் அது பற்றி நான் இந்த நூலில் பதிவு செய்கிறேன்? காரணமின்றி நான் அரிசோனாவின் கடற்பள்ளத்தாக்குப் பற்றிக் கூறவில்லை.

இணைய வழியில் எனக்கு அறிமுகமானார் ஒரு நொது மலர். ஆம் நண்பருமில்லை, பகைவருமில்லை. எனவே அவரை நொது மலர் என்று சொன்னேன். இந்தச் சொல்லை "மன்றம்" ஏட்டின்

www.t.me/DigitalNoolagam



வழி எனக்குக் கற்பித்தவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆவார். அவர் சொன்ன தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது. புதுச்சேரி கடற்கரையில் இருந்து நேர் எதிரே உள்ள கடற்பள்ளத்தாக்குப் பற்றி நொதுமலர் ஒரிசா பாலசுப்பிரமணியன் 2009 இல் எனக்குச் சொன்னார். அதற்கும் முன்பாகவே 2004 இல் கோவாவில் உள்ள தேசியக் கடற் பொறியியல் நிறுவன அறிஞர்கள் நிலநடுக்க ஆபத்துள்ள பகுதி என இந்தப் புதுவைக் கடற்பகுதி பற்றிக் கூறி இருந்ததை நியு இந்தியன் எக்சுபிரசு ஏட்டில் நான் எழுதி இருந்தேன்.

அரிசோனாவின் "கிராண்ட் கான்யன்" எனப்படும் கடற்பள்ளத்தாக்கை மேலை நாட்டவர் ஆராயும்போது வங்க விரிகுடாக் கடலில் உள்ள கடற்பள்ளத்தாக்கை நாம் ஆராய வேண்டாமா? ஆராய்ந்தால் அன்றி நம் பழம் வரலாற்றை மீட்டெடுப்பது எப்படி? புதிய உண்மைகள் புலப்படுவது எப்படி?

இந்திய அறிவியல் கழகம் 2008 இல் வெளியிட்ட நூலில் திரு. வீ. சுப்பிரமணியன், திரு. கே. எசு. கிருட்டினா, திரு. எம்.வி. இரமணா, திரு எசு. ஆர். மூர்த்தி ஆகிய ஆய்வாளர்கள் கூட்டாக எழுதிய கட்டுரையில் (*Marine geophysical investigations across the submarine canyon, northern Bay of Bengal*) ஓரளவு வடபகுதி வங்காள விரிகுடாவில் ஆய்வு நடந்தது பதிவு ஆகியுள்ளது.

> *புவி ஈர்ப்பு, பொருண்மை, காந்தவியல் தன்மை பற்றிய ஆய்வுகள் வடக்கு வங்க விரிகுடாவில் வடக்கு/ வடகிழக்கு, தெற்கு/ தென்மேற்குத் திசையில் 300 மீட்டர் ஆழமும் 18 கிலோ மீட்டர் விரிவும் கொண்டு படிப்படியாக இறங்கும் சரிவுகளுடன் கடற்பள்ளத்தாக்கு இருப்பதாகச் சொல்லியுள்ளனர். கடற் கரையின் ஆழம் சில இடங்களில் 900 மீட்டரில் இருந்து 1459 மீட்டர்களாக வங்கக் கடலில் உள்ளது. கடற்பள்ளத்தாக்கின் இருபுறமும் 100-150 மீட்டர் கனமுள்ள இயற்கைக் கழிவுகளும் தாதுக்களும்*

www.t.me/DigitalNoolagam

*மூடியுள்ளன. 10 முதல் 20 மீட்டர் வரை கொப்புளம் போலக் கடற்கரை மேல் எழும்புவதால் இவ்வாறு பள்ளத்தாக்கில் இருபுறமும் 100 மீட்டர் முதல் 150 மீட்டர் வரை துகள்களோ / வேறு எதுவோ மூடியுள்ளது.*

அறிவியல் அறிஞர்கள் கடற்பள்ளத்தாக்கைக் கண்டறிந்தனர். அதை விளக்கியும் விட்டனர். மூடப்பட்ட பகுதிகளையும் முன்மொழிந்துவிட்டனர். இயற்கை விளைவித்த மாற்றத்தை அறிவியல் கண்டறிந்து சொல்கிறது. இலக்கியம் சொல்லும் வரலாற்றை மூடப்பட்ட பகுதிகளில் தேடிக் கண்டுபிடிப்பது தமிழகத் தொல்லியல் வரலாற்றுக்கட்டமைப்புக்கு இன்றிய மையாப் பணியென ஓங்கிச் சொல்வேன்!

ஆற்று நீரோட்டத்தின் போக்கினாலும் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தாலும் வங்கக் கடல் அடியில் உள்ள நீரின் ஓட்டப் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தாலும் மூடப்பட்ட இடங்களில் மூழ்கியுள்ளது பழந்தமிழர் நாடு!

இதைத் தேசியக் கடற்பொறியியல் நிறுவனம் வெளியிட்ட அறிவியல் கட்டுரைகள் புலப்படுத்தும். அறிவியல் உண்மைகளுக்கு உள்ளே புதைந்துள்ள வரலாறு பற்றி நாம் சிந்திக்கச் சிந்திக்கக் கடலடி ஆய்வு கட்டாயம் என்ற தெளிவு பிறக்கிறது.

வங்காள விரிகுடா 2,172,000 கி.மீட்டர் பரப்புடைய கடலாகும். கண்டங்களின் இடப்பெயர்வுக் கோட்பாடு கூறுகிற படி இந்தியாவையும் ஆசுதிரேலியாவையும் உள்ளடக்கிய பெருந்தட்டு வங்காள விரிகுடாக் கடலுக்குக் கீழே இருக்கிறது.




www.t.me/DigitalNoolagam

அதில் இந்தியத் தட்டு வடகிழக்கு நோக்கி மெள்ள நகர்கிறது. சுந்தா பள்ளம் என்று சொல்லப்படும் கடற்பள்ளம் உள்ள இடத்தில் இந்தியத் தட்டும் மயன்மார் தட்டும் ஒன்றொடொன்று மோதும் போது இந்தியத் தட்டு தாழ்ந்து மயன்மார்தட்டு உயர்கிறது. மயன்மார் தட்டு மேலேறி உட்காருவதால் ஏற்படும் அழுத்தம் காரணமாக இந்தியத் தட்டு கீழே போகிறது.

இந்த உரசல்கள் காரணமாக எரிமலைகள் வெடிப்பதும் சுனாமி எனும் ஆழிப்பேரலையும் ஏற்படுகின்றன. கடற் பள்ளங்களும் பள்ளத்தாக்குகளும் உருவாகின்றன. இந்தியத் தட்டு வடகிழக்காக நகர்வதால் கடற்கரை மாறுகிறது. கடலரிப்பு நேரிடுகிறது. கடலில் கண்முன்னேயே பல பகுதிகள் மறைகின்றன. காலங்காலமாக நம் ஆறுகள் கொண்டுவந்து கொட்டும் வண்டல் மண் கடலடியில் மறையும் நம் நகரங்களையும் நாகரிகத்தையும் மூடுகின்றன. மூடிய இடங்களில் புதையுண்ட வரலாற்றை மீட்டெடுப்பதுவே நம் முன்னுள்ள பெரிய சவாலாகும்.

நம் வங்க விரிகுடாக் கடல் பற்றி ஆயும் நிறுவனங்கள்

*Centre for Trophical Marine Ecology, Fehrenheistrasse 6 D-28359, Berman, Germany*

*Bundesanstalt Geowiss enschaften und Rohstoffe (BGR) Stilleweg - 2, D-30655, Hanover, Germany*

*Nils Bohar Institute of Geofysish Afdeling Danosh centre for Earth Sciencies, Jullan Marics Veg 302010. Copenhagen, Denmark.*

இந்த நிறுவனங்கள் ஆய்வில் வெளிவந்துள்ள *Deep Sea Research Part II : Topical studies in Oceanography* என்ற நூல் நம் வங்கக் கடல் பற்றிய அறிவியல் உண்மைகளைக் கூறும். அதிலிருந்து எங்கு அகழாய்வது என்று முடிவெடுத்து, கடலடியில் அகழாய்வில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபட்டால் ஒழியக் கடற்கோள்கள் விழுங்கிய பழந்தமிழ் நாடுகளையும் நாகரிகத்தையும் பற்றிய புதிய உண்மைகள் புலப்படப் போவதில்லை.

www.t.me/DigitalNoolagam

# தமிழகக் கடலடியில் கிடைத்ததும் தேட வேண்டிய பணிகளும்

தென் தமிழகத்தின் கடற்கரையில் இருந்து 5 கி.மீட்டர் தூரத்தில் 23 அடி ஆழத்தில் கடலடியில் மனிதனால் கட்டப்பட்ட கற்சுவர் ஒன்று கண்டறியப்பட்டது. ஆங்கில எழுத்தான யூ வடிவில் பெரியதொரு குதிரையின் இலாடம் போன்ற வடிவில் 85 மீட்டர் நீளமும் 2 மீட்டர் உயரமும் கொண்ட அந்த மதிற்சுவரின் பருமன் 1 மீட்டராகும்.



கிரகாம் ஆன்காக்

இந்திய அரசு நிறுவனமான கடலியலுக்கான தேசிய நிறுவனம் 1991 மார்ச்சுத் திங்களில் தமிழ்நாட்டின் நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடிக்கும் பூம்புகாருக்கும் இடையே கடலடியில் ஆய்வில் ஈடுபட்டது. அந்த ஆய்வில் அவர்கள் சென்ற கப்பலின் பின்புறம் கடலில் துல்லியமாகப் படம் பிடிக்கும் ஆய்வுக் கருவி மிதக்க விடப்பட்டது. இக்கருவி ஒலி எழுப்ப வல்லது. அந்த ஒலி 1000 மீட்டர் தூரம் எதிரொலித்துத் திரும்பும். இந்த ஒலி அதிர்வுகள் மூலம் கடலடியில் மூழ்கிய கப்பல் முதல் கட்டுமானம் வரை எது இருப்பினும் அக்கருவி கண்டுபிடிக்கும். அதனைத் துல்லியமாகப் படம் பிடிக்கும். 1991 மார்ச்சு 7 ஆம் நாளில் கடலில் 19 மீட்டர் ஆழத்தில் மூழ்கிய கப்பல் ஒன்றை அக்கருவி

www.t.me/DigitalNoolagam

கண்டுபிடித்தது. மார்ச்சு 8 மற்றும் 9 ஆம் நாள்களில் கடலில் மூழ்கிடும் வித்தை அறிந்தோர் மூழ்கித் தேடினர். இரும்பிலான பீரங்கி ஒன்றும் ஈயத்தாலான குண்டுகளும் அகப்பட்டன. திரு. டி. சி.எசு. இராவ் தலைமையில் சின்ன வானகிரி மீனவக் கிராமத்துக்கு அருகில் உள்ள கடலில் 5 கி.மீ. தூரத்தில் 40' × 10' அளவில் கப்பல் போன்ற வடிவில் ஒரு பொருளைச் "சோனோகிராப்" என்ற அந்தக் கருவி கண்டுபிடித்தது. உடன் அங்குச்சென்ற திரு. பண்டாத்கர் நீச்சல் திறன் பெற்றிருந்த மானவி, சின்னி என்ற மீனவ இளைஞர்களைத் தேடச் சொன்னார். இடம் மாறி வேறு இடத்தில் கடலில் மூழ்கித் தேடியதால் எதையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மாலையில் மீண்டும் "சோனாகிராப்" கருவியைக் கடலில் தேடச் செய்தார்கள். சோனாகிராப் என்ற ஆங்கிலப் பெயரையே அக்கருவிக்கு நான் வழங்குவது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். 4.8.2010 டெக்கான் கிரானிகல், ஆங்கில நாளேட்டின் மதுரைச் செய்தியாளர் ஏ.வி. மெய்யம்மை பல்லாங்குழி என்பதை அப்படியே ஆங்கிலத்தில் எழுதி ஆங்கில அகராதிக்குப் புதுச் சொல்லைத் தந்தார். அடடா! என்ற நம் தமிழ்ச் சொல்லும் ஆங்கில அகராதிகளில் அப்படியே இடம்பிடித்துள்ளது. நம் மீனவரின் கட்டுமரம் ஆங்கிலத்தில் Catamaran ஆனதும் நாவாய் Navy ஆனதும் பழங்கதை. நம் உணவில் முக்கிய இடம்பிடித்த சட்டினி ஆங்கிலத்தில் Chutnification என்றும் வழங்குகின்றது. எனவே புதுச்சொல் புனையப்படும் வரை சோனாகிராப் கருவியை அதே பெயரில் வழங்குவது தவறில்லை.

கோழி முட்டை வடிவிலான கிழக்கும் மேற்கும் 30 35 மீட்டர் நீளமும் வடக்குத் தெற்காகப் பத்து மீட்டர் நீளமும் ஒரு பக்கம் திறந்தும் இருந்த ஒரு கட்டுமானத்தைச் சோனாகிராப் படம் பிடித்தது. இப்படியாக அன்றாடம் நடந்த கண்டுபிடிப்புகள் - ஆய்வுகளைப் படிப்படியாக விவரிக்கும் ஆய்வறிக்கை மார்ச்சுத் திங்கள் 1991 திங்கள் 23 ஆம் நாளில் மூன்று பேர் மூழ்கி ஆய்வு செய்தபோது குதிரை இலாடத்தின் வடிவிலான ஒரு சுவரை கண்டுபிடித்ததைப் பதிவு செய்தது. அது ஒன்று அல்லது இரண்டு மீட்டர் உயரம் கொண்டது. இரண்டு முனைகளுக்கும் இடையே 20 மீட்டர் தூரம் இருக்கும். இது கோயிலா? கோட்டையின் மதிற்சுவரா? என்பதை அடுத்த முறை ஆய்வு செய்வது என்று முடிவு எடுத்துத் திரும்பினார்கள்.

பூம்புகார் பற்றிய கடல் ஆய்வில் கிட்டிய முதல் தடயம் இதுவே! கடலியலுக்கான தேசிய நிறுவனம் மீனவ இளைஞர்கள்

www.t.me/DigitalNoolagam

துணையுடன் மீட்டெடுத்த வரலாற்றின் சிறுகுறிப்பு இந்நிகழ்வு எனலாம்.

1993 இல் அடுத்த ஆய்வு தொடங்கியது. இந்த முறை கடலியலுக்கான தேசிய நிறுவனத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் அக்கட்டுமானத்தை அளந்தார்கள். 23 மீட்டர் ஆழத்தில் ஆங்கில எழுத்தான U வடிவிலான அந்த அமைப்பு 85 மீட்டர் நீளமுடையது. அதிக அளவு உயரம் 2 மீட்டராகும். ஒரு முனைக்கும் மற்றொரு முனைக்குமான இடைவெளி 13 மீட்டராகும். அக்கட்டுமானத்தின் நடுப்பகுதி கால ஓட்டத்தில் சேறு புழுதிகளால் மூடப்பட்டு இருந்தது. ஆயினும் ஆங்காங்கே இடையே பாறைகள் இருப்பது தெரிய வந்தது. கைகளால் சகதியையும் புழுதியையும் நீக்கித் தேடியபோது 10-15 சென்டிமீட்டர் அளவில் கற்கள் பொருத்தப்பட்ட கட்டுமானம் வெளிப்பட்டது. மனிதனால் கட்டப்பட்ட கட்டுமானம் எனவும் சிற்சில இடங்கள் உறுதி செய்தன.

1993 முதல் போதிய நிதி ஆதாரம் இல்லாமையால் பூம்புகார் கடலடி ஆய்வுப்பணிகள் தடைப்பட்டன. அகழாய்வு தொடர்பான வரலாற்றுப் பதிவுகளில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கட்டுமானம் எதுவும் இல்லை என்ற கருத்து திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

> *கடற்கரையை ஒட்டி 2 மீட்டர் ஆழத்தில் தாழ்வலைகள் வெளிப்படுத்திய கட்டுமானங்கள் வேண்டுமானால் கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தவைகளாக இருக்கலாம். ஆனால் 23 மீட்டர் ஆழத்தில் அதாவது 76 அடி ஆழத்தில் புதையுண்ட ஒரு கட்டுமானம் 3ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டது என முடிவு செய்யக்கூடாது*

என்று கருதினார் கிரகாம் ஆன்காக்.

கடந்த 19000 ஆண்டுகளாகக் கடல் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் கடலோரங்களில் இயற்கை ஏற்படுத்திய மாற்றங்களாலும் 70 அடி ஆழத்தில் புதையுண்ட ஒரு கோட்டை மிகப் பழங்காலத்தைச் சார்ந்ததாகவே இருக்குமென நம்பிய கிரகாம் ஆன்காக் 2001 பிப்ரவரி அன்று பெங்களூர்க்கு வந்தார்.

முதன்முதலில் 1991 இல் பூம்புகாரை ஆய்வு செய்துள்ள எசு. ஆர். இராவ் கடலியலுக்கான தேசிய நிறுவனத்தில் கடல் அகழாய்வு நடுவத்தை முதன்முதலில் நிறுவியவர். 2001 இல் அவர் வயது 70. இருந்தும் இளைஞன் போன்ற உற்சாகமுடன் தேடி வந்த கிரகாம் ஆன்காக்கிடம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்.

www.t.me/DigitalNoolagam

திரு. எசு. ஆர். இராவ் அவர்களிடம் கிரகாம் ஆன்காக் கேட்டார். பூம்புகாரில் நீங்கள் 23 மீட்டர் ஆழத்தில் கடலடியில் கண்டு எடுத்த U வடிவ அமைப்பு எனக்குப் புரியாத புதிராக உள்ளது. அது மிகப் பழங்காலத்து அமைப்பாக இருக்க முடியுமா?

> *சரியான கேள்வி. உறுதியாகச் சொல்கிறேன். அது மிகமிகப் பழங்காலத்ததே*

என்றார் இராவ்.

> *கடல் அரிப்பு காரணமாக அக்கட்டடம் உள்ளே மூழ்கியதா? அதன் பளு தாங்காமல் கால ஓட்டத்தில் கடலில் அமுங்கிப் போனதா? என்று அறிவதற்காக ஒரு கடற்பொறிஞரை அழைத்து ஆய்வு நடத்தினோம். இது நீருக்குள் மூழ்கும் முன் நிலத்தில் தான் கட்டப்பட்டு இருக்க வேண்டும். அது கட்டப்பட்டபோது கடல் வெகுதூரத்தில் இருந்திருக்க வேண்டும். ஈராயிரமாண்டுகள் என்பது குறுகிய காலமே! அதற்குள் கடல் மட்டம் 23 அடி உயர்ந்திருக்க முடியுமா என்பது ஐயமே*

என எசு. ஆர். இராவ் பதில் அளித்தார்.




> *பன்நெடுங்காலம் முன்பாகவே இது கட்டப்பட்டு இருக்க வேண்டும். பூம்புகாரின் அழிவுகள் என்பவை ஈராயிரமாண்டுக்கும் முற்பட்டவையே! ஏனெனில் பனியூழிக்காலத்தில் இறுதியில் தான் கடல் மட்டம் இவ்வளவு உயர்ந்திருக்கக் கூடும்*

என்றார் கிரகாம் ஆன்காக்.

www.t.me/DigitalNoolagam

*ஆம்! சரியாகக் சொன்னீர்கள்*

என்றார் இராவ்.

*பனி ஊழிக்காலத்தில் மூன்று பெருவெள்ளப் பெருக்குகள் நிகழ்ந்தன. இவற்றுள் கடைசியாக நிகழ்ந்த வெள்ளப்பெருக்கு 8000 ஆண்டுகள் முன் நிகழ்ந்தது. யூ வடிவ அமைப்பு அக்காலத்திய கட்டுமானமாக இருக்க முடியுமா?*

எனக் கேள்வி எழுப்பினார் கிரகாம் ஆன்காக்.

*எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குக் கிடைத்த பொருட்களைக் "கார்பன் 14"அளவுகோல்படி கணக்கீடு செய்ததில் ஈராயிரம் ஆண்டளவில் என்ற கணக்குக்கு வந்தோம்! மட்பாண்டங்கள் கிடைக்காமல் போகவே அவை கொண்டும் காலக் கணக்கீடு செய்ய முடியவில்லை. கற்களே கிடைத்தன. அவை கொண்டு கணக்கீடு செய்தல் இயலாத பணி.*

என்றார் இராவ்.

*ஒரே ஒரு கேள்விதான் புதிராக உள்ளது. ஒரு கட்டடம் 23 மீட்டர் ஆழத்தில் கடலில் புதையுண்டு போயுள்ளது. அதன் காலத்தைக் கண்டறியக் கடல் மட்டம் உயர்ந்துள்ளதை அறிதல் வேண்டும். அதைத் தவிர வேறு வழி தெரியவில்லை*

என்றார் இராவ்.




www.t.me/DigitalNoolagam

கி.மு. 7500 ஆம் ஆண்டில் கடலில் மூழ்கிய நகரம் கூச்சர நாட்டின் கட்சு வளைகுடாவில் கண்டெடுக்கப்பட்டதெனத் தி இந்தியா டுடே வார ஏடு பிப்ரவரி 11 2002இல் வெளியிட்ட படம். திராவிட நாகரிகத்தின் தொட்டிலான சிந்துச் சமவெளி நாகரிகம் கி.மு. 2500 ஆண்டு எனவும் அதைப் பின்னுக்குத் தள்ளி, கூச்சரத்தில் கி.மு. 7500 ஆண்டு கடலடி நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டதாக மட்டுமே இந்த ஏடு செய்தி வெளியிட்டது. கூச்சரத்தில் கண்டுபிடித்த குழுவே பூம்புகாரை ஆய்வு செய்து கி.மு. 9500 ஆண்டு என்று சொன்னபோது எந்த ஏடும் வெளியிடவில்லை தினமணியைத் தவிர என்பதும் வரலாறு.

> *கட்சு வளைகுடாவில், குசராத் மாநிலத்தில் கடலாய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்துறை வல்லுநர்கள் கி.மு. 10,000 ஆண்டில் இன்றுள்ள கடல் மட்டத்தைவிட அன்று கடல் மட்டம் 60 மீட்டர் தாழ்ந்திருந்தது என்றனர். இந்தியாவில் வடமேற்கில் இது கண்டறியப்பட்டது. தென்னிந்தியாவில் இத்தகு கடலாய்வு (Oceanographic Study) நடைபெறவில்லை. ஆயினும் குசராத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் தமிழகத்திற்கும் ஓரளவு பொருந்தும்*

என்று சொன்னார் கிரகாம் ஆன்காக்.

> *நாமறியாத பழம்பண்பாட்டின் எச்சங்களாக நினைவுச் சின்னமாகப் பூம்புகாரின் கடலடி ஆய்வில் கண்டெடுக்கப்பட்டவை இருக்கக் கூடும்*

என்றார் அவர்.




இவ்வாறு பூம்புகாரில் முதன்முதலில் கடலடி அகழாய்வு செய்த எசு.ஆர். இராவ் அவர்களும் அவரை 2001 பிப்ரவரி 1 பெங்களூரில் சந்தித்த ஆன்காக்கும் உரையாடுவதை *Underworld: The mysterious origin of Civilization* நூலில் கிரகாம் ஆன்காக்கே பதிவு செய்கிறார்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன?

தமிழாய்வு சொற்பிறப்பியல் ஆய்வாகத் தொடருதல் வேண்டும். சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளி

www.t.me/DigitalNoolagam

வருதல் வேண்டும். அவை குறுந்தகடுகளில் பதிவாகி, தமிழ்நாட்டின் அனைத்து மாணவ மாணவியர்க்கும் வழங்கப்படல் வேண்டும்.

நிலத்தடி அகழாய்வுகள் நீடித்தல் வேண்டும். அருகன் மேடு அகழாய்வு செய்த எகோல் பிரான்சே எக்சுடிரீம் ஓரியண்ட் என்ற பிரெஞ்சு அரசு நிறுவன நூல்கள் தமிழாக்கம் செய்யப்படல் வேண்டும். கண்டறியப்பட்டும் படி எடுக்கப்படாமல் கருநாடகத்தில் சிறைப்பட்ட கல்வெட்டுகளை மீட்டெடுத்து அதில் புதைந்துள்ள வரலாற்றை வெளிக்கொணர்தல் வேண்டும். அண்மையில் இதற்காக இந்தியத் தொல்லியல் துறைக்கும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் ஏற்பட்டுள்ள உடன்பாடு மூலம் வரலாற்றில் புதிய ஒளிபாயும்.

இன்றிருக்கும் இடத்தில் உலக வரைபடத்தில் இருக்கும் இந்தியாவிற்குள்ளேயும் தமிழகத்தை ஒட்டியும் நமக்குக் கிடைக்கும் சான்றுகள் போதுமா? ஆயின் பழந்தமிழகம் இன்றுள்ள தமிழகமா? அல்லது தமிழகம் இந்துமாக்கடலிலா இருந்தது? கடலுள் மூழ்கிய தமிழக வரலாற்றைக் கடலியல் அறிஞர் துணையின்றி மொழி நூல் வல்லுநர் துணையுடன் மட்டுமா நாம் தேட முடியும்?

கடலடி ஆய்வும் தமிழாய்வுக்குத் துணைபுரியும். கடற்பொறிஞர்க்குக் கவிதைத் தமிழ் வராது. ஆயின் கடல் மட்ட உயர்வை, கடற்கரைகள் அடைந்த மாற்றங்களை அவர்கள் கணக்கீடு செய்ய முடியும். அக்கணக்கு இலக்கியச் சான்றுக்கு அரணாக அமையும். தமிழக வரலாற்றுக் கணக்கைத் துல்லியமாகக் கணக்கிட இதுவும் துணை புரியும்.

கிரகாம் ஆன்காக் - எசு. ஆர். இராவ் உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

> *இந்துமாக் கடலில் 10,000 ஆண்டுகள் முன்பு பெரு நிலப்பரப்பு ஒன்று மூழ்கியதாக மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. நாங்கள் தீவிரமான ஆராய்ச்சி செய்யவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். போதிய நிதி இல்லை. இருந்தால் பூம்புகார் கடலடியில் இன்னும் நிறையக் கட்டுமானங்களைக் கண்டெடுத்து இருப்போம்*

என்றார் இராவ்.

> *11,000 ஆண்டுகள் முன்பு கன்னியாகுமரிக்குத் தெற்கே இந்துப் பெருங்கடலில் மூழ்கிய குமரிக் கண்டம் பற்றிய செய்திகளை நான் அறிவேன். உயர்ந்த நாகரிகத்தின் தாயகமாகவும் சங்கம் அமைத்துத் தத்துவங்களையும் இலக்கியங்களையும்*

www.t.me/DigitalNoolagam

*வளர்த்து எடுத்த பழனமாகவும் (நிலமாகவும்)*
*அப்பெருங்கண்டம் திகழ்ந்தது*

என்று நம் குமரிக் கண்டப் பெருமையைப் பேசுகிறார் கிரகாம் ஆன்காக். இப்படி தமிழகக் கடலடி ஆய்வில் மிகுந்த அக்கறை கொண்ட கிரகாம் ஆன்காக் 6 ஏப்ரல் 2002 இல் மீண்டும் தமிழகம் வந்தார்.

தமிழகத்தில் பூம்புகாரையும் மாமல்லபுரத்தையும் கடலடி ஆய்வு செய்யப் பிரிட்டனில் உள்ள அறிவியல் தேடுதல் சங்கத்தின் முதல்நிலைத் தகுதியும் தேர்ச்சியும் பெற்ற 10 கடலில் மூழ்கித் தேடுநர்களையும் அழைத்துக் கொண்டு வந்தார். இந்தியக் கடலியல் தேசிய நிறுவனத்தின் அணியினர் திரு. கமலேசு ஓரா தலைமையில் அவர்களோடு இணைந்து கொண்டனர். மோசமான வானிலை, கடல் சீற்றம் இவைகளை எதிர்கொண்டு பூம்புகாரில் கடலடி ஆய்வு செய்தவர்களால் ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை. எப்படி முடியும்? ஈராயிரம் ஆண்டுகள் என்பதை மூளைக்குள் ஆணி அடித்து வைத்துள்ள இந்திய நிபுணர்கள் கடல் மட்ட உயர்வைக் கணக்கிடும் கடலியல் ஆய்வுப்படி கி.மு. 9500 ஆண்டுகள் பழமையானது பூம்புகார் என்றால் ஏற்பார்களா?

தினமணி நாளேடு மட்டுமே கிரகாம் ஆன்காக் செய்தியை வெளியிட்டது.


பூம்புகார் அருகே 9,500 ஆண்டுகளுக்கு முன் கடலில் மூழ்கிய நகரம்: விஞ்ஞானி தகவல்

www.t.me/DigitalNoolagam

பூம்புகாரை அடுத்து மாமல்லபுரத்தில் கடலடி ஆய்வுகள் நடந்தன. இதே கூட்டணி தான் ஆய்வு நடத்தியது. ஆனால் ஆய்வு முடிவுகளை 10 ஏப்ரல் 2002 இல் இலண்டன் நகரில் 8 ஆம் எண் தெற்கு ஆட்லித் தெருவில் உள்ள நேரு நடுவத்தில் கிரகாம் ஆன்காக் அறிவிக்கிறார்.

> *மாமல்லபுரம் அருகே கடலடியில் கண்டு பிடிப்புகள் கிடைக்கக் காரணமாக இருந்தவர்கள் உள்ளூர் மீனவர்களே*

என்று பெருமிதமுடன் இலண்டன் செய்தியாளர் சந்திப்பில் கிரகாம் ஆன்காக் பதிவு செய்கிறார்.

தமிழ்நாட்டின் மாமல்லபுரம் அருகே கடற்கரையில் இருந்து 5-7 மீட்டர் தூரத்தில் தொடங்கிக் கடலடியில் ஒருமைல் தூரம் வரை, பல சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவில் புதையுண்ட நகரத்தின் அழிவுகள் காணப்படுகின்றன. இலண்டனில் உள்ள அறிவியல் தேடுதல் சங்கத்தினரும் இந்தியக் கடலியல் ஆய்வு நடுவத்தினரும் கூட்டாக இணைந்து 25 பேர் கடலில் மூழ்கித் தேடும் நிபுணர்களைக் கொண்டு நடத்திய ஆய்வில் இது அறியப்பட்டது.



**மாமல்லபுரம் கடலடியில் ஆய்வு**

(இக்கண்டுபிடிப்புகளின் ஒளிப்படக் காட்சியை *www.india.atlantis.org* இணையத்தில் காணலாம்)

பிரிட்டனில் உள்ள சானல் 4 தொலைக்காட்சி 2002 பிப்ரவரி 11,18,25 அன்று *Flooded kingdoms of Ice Age* என்ற தலைப்பில் ஒளிப்பரப்பியது.

பென்குவின் நிறுவனம் 7 பிப்ரவரி 2002 இல் *Underworld : The Mysterious Origins of Civilization* என்ற தலைப்பில் நூல் வெளியிட்டது. அமேசான். காம் இணைய நூலங்காடியில் புதிய புத்தகம் 14 டாலருக்கும் பழைய புத்தகம் 6 டாலருக்கும் கிடைக்கிறது.

www.t.me/DigitalNoolagam

கிரகாம் ஆன்காக் 2002 இல் கண்டுபிடிக்கும் முன்பே 1999 இல் *Gondwana Geological Magazine (Vol 4 P 225-33)* இல் ஜி.பி. மல்கோத்ராவும் எம்.எச். பிரசாத்தும் கூட்டாக *Shoreline changes and their impact on the Archaeological structures at Mahabalipuram* என்ற கட்டுரையில் கடலுள் புதையுண்ட நகரம் இருக்கக்கூடும் என்று இவ்விரு இந்திய வல்லுநர்களும் கூறியுள்ளதையும் நாம் பதிவு செய்தாகல் வேண்டும்.

மாமல்லபுரம் அருகில் கடலுள் புதையுண்ட நகரம் எப்போது மூழ்கி இருக்கக்கூடும்? என்று எவ்வாறு கிரகாம் ஆன்காக் முடிவுக்கு வருகிறார்? பார்ப்போம்.

புகழ்மிகு டர்காம் பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் துறைப் பேராசியர் டாக்டர் கிரளன் மில்ன் உயரிய தொழில்நுட்பம் செறிந்த கணினித் திட்டங்கள் மூலம் எந்தெந்தக் காலங்களில் எந்தவொரு நாட்டின் கடற்கரை எவ்வாறு இருந்தது என்று காட்டக்கூடிய வரைபடங்களை வரைந்து படியிறக்கம் செய்யவும் நகல் அச்சு எடுக்கவும் உதவுபவர்.

கிரகாம் ஆன்காக் மாமல்லபுரத்தில் கிடைத்த சான்றுகளை ஒளிப்படங்களையும் அவரிடம் காட்டிக் கருத்துக் கேட்டபோது 6000 ஆண்டுகள் முன் ஏற்பட்ட கடல் மட்ட உயர்வால் மாமல்லபுரம் கடலில் மூழ்கியது என்று உறுதிபடச் சொன்னார். புவியியல் மாற்றம் எதுவும் அப்போது ஏற்படவில்லை. மாமல்லபுரம் அருகே கடல் மட்டம் உயர்ந்ததே அந்நகரம் கடலுள் மூழ்கக் காரணம் என்றார் டாக்டர் கிரளன் மில்ன்.

எனவே கடலுள் மூழ்கிய தமிழர் நாகரிகத்தைக் கண்டறியக் கடலியல் நிபுணர்களும் இருத்தல் வேண்டும். கரையில் இருந்து கொண்டு மீனவர்களை மூழ்கச் செய்து நுனிப்புல் மேயும் போதே நம் வரலாறு மெள்ள மெள்ள மேலே எழும்பி வருகிறதே! தகுந்த கருவி கொண்டும் நீர்மூழ்கிக் கலங்கள் கொண்டும் தேடுவோமே யானால் புதைந்த புகழ்மிகு வரலாறு மீட்டெடுக்கப்படும். மேதினி நம் புகழை ஒப்பும்!

சென்னையில் உள்ள கடலியல் தொழில்நுட்பத்திற்கான தேசிய நிறுவன இயக்குநர் டாக்டர் எசு. கே. தாசு ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் தொலையுணர்வு மூலம் கடலடியில் 6 கி.மீ. தூரம் வரை சென்று ஆய்வு நடத்தக் கூடிய வாகனம் உருசிய அரசு நிறுவன நிபுணர்களுடன் கூட்டாக இணைந்து உருவாக்கி யுள்ளதாகக் கடந்த ஆண்டு அறிவித்தார். கடலடியில் பித்தளை, மங்கனீசு, கோபால்ட், நிக்கல் எனக் கனிமங்களைக் கண்டுபிடிக்க உருவான கருவியைக் கடலடியில் தமிழர் நாகரிகத்தைத் தேடுமாறு வடிவமைப்பில் மாற்றம் செய்து வேலை வாங்கிட வேண்டியது தமிழக மக்களின், அரசுகளின் கடமையாகும்.

www.t.me/DigitalNoolagam

# குமரிக்கண்டம் பற்றிய வரைபடங்களும் குற்றம் சுமத்தும் கூட்டமும்

*Fabulous Geographies, Catastropic Histories : The lost Land of Lemuria* என்ற தலைப்பில் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை இணைப்பேராசிரியை சுமதி இராமசாமி எழுதிய நூல் கடலுள் மூழ்கிய தமிழர்களின் தாயகம் ஒரு மாயை, வெறும் கற்பனை, இட்டுக்கட்டிய கட்டுக்கதை என்று எப்படியாவது நிறுவிவிட வேண்டும் என்ற நோக்கத்தை முன் வைத்து அதற்கான வாதங்களைத் தொடுப்பதைக் கடமையாகக் கொண்ட நூலாகும்.



**அறிவியலார் கூற்றுப்படி இன்றுள்ள நிலம் கருமையாகவும் மூழ்கிய பரப்பு வெள்ளையாகவும் படத்தில் காட்டப்படுவதை இவர் போல்வார் ஏற்கமாட்டார்கள்**

குமரிக் கண்டம் பற்றிய குறும்படம் 1981 இல் நடந்த உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டித் தயாரிக்கப்பட்டது. தமிழக அரசின் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக விளங்கும் முனைவர் இரா. மதிவாணன் கருத்துருவாக்கத்திலும் இயக்குநர் ப. நீலகண்டனின் இயக்கத்திலும் எடுக்கப்பட்ட படம் சுமதி இராமசாமியை உறுத்துகிறது. தெளிதமிழ் இதழில் 17.9.2006 இல் "குமரிக்கண்டம் பற்றிய குறும்படம் சிறைமீட்டுச் செந்தமிழ் மக்களுக்கும் காட்டுக" என நான் எழுதியுள்ளேன். தமிழர் வரலாற்றுச் சிறப்பை இருட்டடிப்புக்கு ஆளாக்க நினைத்த கூட்டமே குறும்படத்தைக் காணாமற் போகுமாறு செய்திருத்தல் வேண்டும் என்பதும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

www.t.me/DigitalNoolagam



தெளி தமிழ்

17 - 9 - 2004

குமரிக் கண்டம் பற்றிய குறும்படம்

FABULOUS GEOGRAPHIES, CATASTROPHIC HISTORIES



உருசிய ஆய்வறிஞர் அலைக்சாண்டர் கொந்திராதோவ் எழுதிய *The Riddle of Three Oceans* (1974) நூலின் தமிழாக்கம் 1981 இல் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது. தமிழின் தாயகம் கடல் கொண்ட குமரிக்கண்டமே என மொழி நூலறிஞர் தேவநேயப் பாவாணர் முழங்கினார். பொள்ளாச்சி நா. மகாலிங்கம் பேருரை ஆற்றினார். சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கே. கே. பிள்ளையும் உலகின் மூத்தகுடி தமிழன் என்பது இனவெறியால் எழுந்த வாதமல்ல. கடலியல் நிபுணர்களும் இனவியலாரும் இலெமூரியாக் கோட்பாட்டை முன் வைத்துள்ளதால் அது பொருள் பொதிந்த வாதமே! என்றும் பேசினார்.

குமரிக்கண்டம் எவ்வாறு இருந்திருத்தல் கூடும் என யூகித்துத் தமிழ் அறிஞர் பெருமக்கள் வரைந்து வெளியிட்ட வரைபடங்கள் மீது சுமதி இராமசாமியின் கவனம் பாய்கிறது. இவற்றைப் பட்டியலிடுகிறார்.

முதன்முதலாகத் தமிழிலக்கிய இதழான செந்தமிழில் 1916 இல் சுப்பிரமணிய சாத்திரி என்பவர் குமரிக்கண்டம் பற்றிய கருத்தியலைக் கேலி செய்ய ஒரு வரைபடத்தை வெளியிட்டார் என்று சுமதி இராமசாமி சொல்கிறார். அரசன் சண்முகனார் (1868-1915) அடியார்க்கு நல்லாரின் சொல்லோவியத்துக்குக் கற்பனை வடிவம் தந்தாராம். அதை வரைபடமாக்கிய சுப்பிரமணிய சாத்திரி 49 நாடுகளோ 700 காததூரமோ கொண்ட பெரு நிலப்பரப்பு

www.t.me/DigitalNoolagam

கடலில் மூழ்கி இருக்க முடியாது. ஒரு வட்டம் (தாலுக்கா) என்ற அளவில்தான் நிலம் கடலால் கொள்ளப்பட்டு இருக்கும் என்று கருதுவதாகச் சுமதி இராமசாமி பதிவு செய்கிறார்.

அய்ரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இலெமூரியா பற்றிய வரைபடங்கள் பெயரில்லாமல் இருந்தனவாம். தமிழ் இலக்கியங்கள் கூறிய இழந்த நாடுகளின் பெயரைப் பெயரில்லா அந்த வரை படங்கள் மீது பொருத்திக் கட்டுக் கதைகள் கட்டிவிட்டனராம் தமிழ் அறிஞர்கள்.

1927 இல் கடற்கோளுக்கு முந்தைய புராணக்கால இந்தியா, கடற்கோளுக்குப் பிந்தைய புராணக்கால இந்தியா என இரு வரை படங்கள் வெளிவந்தனவாம். 1946 இல் இராவாண காவியம் எழுதிய புலவர் குழந்தை பழைய தமிழகம் பற்றிய வரைபடத்தை வெளியிட்டார். பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் 1981இல் வெளியிட்ட வரைபடம் கி.மு. 30,000இல் இந்தியா என்று ஆங்கிலத்தில் சொல்லியதாம். கடல் கொண்ட குமரி நாடு பற்றிய வரைபடத்தை முனைவர் இரா. மதிவாணன் 1977இல் வெளியிட்டார். இப்படி பல வரைபடங்கள் பற்றிக் கூறும் சுமதி இராமசாமி ஆங்கிலத்தில் 1993 இல் *Lemuria - or the lost Kumari Continent or Navalam Island* என்ற தலைப்பிட்ட படத்தைப் பார்த்ததும் கிண்டல் செய்ய எண்ணம் ஏற்படுகிறது எனச் சொல்கிறார். அய்ரோப்பியரின் அறிவியல் கண்டுபிடிப்பு இலெமூரியா, தமிழர்களின் இலக்கியமும் நிகண்டுகளும் கூறும் பெயர் நாவலந்தீவு. வடமொழிப் புராணங்கள் கூறும் ஜம்புத்தீவு மூன்றையும் மூலமாகக் கொண்டு குமரிக் கண்டம் பற்றிக் கற்பனையில் ஓவியம் தீட்டி விட்டார்கள் என்று சாடுகிறார்.




இப்படி பலர் திருப்பாற்கடல் எங்கிருந்தது என்று தேடாமல் கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தைத் தேடுவது சுமதி இராமசாமிக்குச் சோகத்தை தருகிறது.

www.t.me/DigitalNoolagam

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை (1907 - 1989) முதலில் 1941 இல் குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு என்ற நூலை வெளியிட்டு அதில் குமரிக் கண்டம் பற்றிய படத்தை வெளியிட்டார்.

*Lemuria : Ancient State, Lemuria : Shrunken State* என 1904 இல் ஸ்காட் எலியட் இலெமூரியாக் கண்டம் ஏறக்குறைய உலகம் முழுவதும் பரவிய கண்டமாக வெளியிட்ட வரைபடத்தில் பெயரிடாமல் விட்டுவிட்ட இடத்துக்குத் தமிழ் இடந்தேடிகள் குமரிக்கண்டம் என்று பெயரிட்டுவிட்டதாகச் சுமதி இராமசாமிக்கு ஆழ்ந்த வருத்தம். அதை நூலாக்கிப் பதிவு செய்துள்ளார். ஆய்வறிஞர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள் மீது தமிழிலக்கியங்கள் கூறும் கடற்கோளை, தமிழர் இழந்த நிலப்பரப்பைச் சுமத்தித் தமிழ் வரலாற்றுக்கு இடந்தேடியவர்கள் கட்டமைத்துவிட்டார்கள் எனச் சுமதி இராமசாமிக்குத் தாங்க முடியாத எரிச்சல். அதை எழுத்தாக்கி விட்டார்.

ஸ்காட் எலியட் வரைந்த பெயரிடாத கண்டத்துக்கு குமரிக்கண்டம் என்று பெயர் புனைந்து பன்மொழிப்புலவர் அப்பாத்துரை 1940 இல் உருவாக்கிய வரைபடம் தமிழ்ப்பாட நூல்களில் இடம்பெற்றுவிட்டது. 1975இல் கல்லூரிப் பாடப் புத்தகத்திலும் இடம்பெற்றுவிட்டது. தமிழக அரசு இப்படி வரலாற்றுக் கற்பனையை மாணவர்கள் மனதில் விதைக்கிறதே என அம்மையார் வருத்தப்படுகிறார்.

கடற்கோள் நிகழவில்லை, அதில் குமரிக்கண்டம், அமிழ்ந்து விடவில்லை என்று சொல்லவில்லை, சுமதி இராமசாமி. கடற்கரை ஓரங்களைக் கடல் கொண்டது. ஒரு தாலுக்கா அளவே தமிழ் நிலத்தைக் கடல் ஏப்பமிட்டது என்ற சுப்பிரமணிய சாத்திரி 1916 இல் எந்த ஆய்வுக் கருவியும் இன்றி யோக நிலையில் ஆழ்ந்து சொன்னாரோ என்னவோ அதையே வேதவாக்காக எண்ணி வழி மொழிகிறார் சுமதி இராமசாமி.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் புவி அறிவியல் பள்ளியின் ஆய்வுகளை இனிப் பார்ப்போம்.

சோழர்களின் புகழ்பெற்ற பூம்புகார் துறைமுகம் தற்போது கடலடியில் உள்ளது. அதே சமயத்தில் முன்னொரு காலத்தில் கடற்கரை ஓரம் இருந்த சீர்காழி நகரம் தற்போது கடற்கரையில் இருந்து பல மைல் தூரம் உட்தள்ளி உள்ளது. இவை தமிழகக் கடற்கரை ஓரத்தில் ஏற்பட்ட கடல்மட்ட மாறுதல்கள் பற்றிய சரித்திரப் பூர்வமான ஆதாரங்களாகும்.

www.t.me/DigitalNoolagam

1. *சென்னையில் இருந்து சத்தியவடு வரை காணப் படும் கடலால் உருவாக்கப்பட்ட மணல் திட்டுகள்*
2. *நேராகப் பாயும் பாலாறு ஆற்றில் செங்கல்பட்டுக்கு அருகில் காணப்படும் திடீர் வளைவு*
3. *கடலைச் சந்திக்காமல் திருவெண்ணெய் நல்லாறு அருகே புதையுறும் மலட்டாறு நதி*
4. *வேதாரணியம் பகுதியில் திருத்துறைப் பூண்டி வரை காணப்படும் கடலால் ஏற்படுத்தப்பட்ட மணல் திட்டுகள்*
5. *வைகை நதியில் காணப்படும் மூன்று கழிமுகங்கள்*

என்றுள்ள இயற்கை மாற்றங்கள் மூலம் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பு கடல் சென்னை, செங்கல்பட்டு, திருச்சி, மதுரை வரை பரவி இருந்தது என்பது தெளிவாக விளங்குவதாகத் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் புவி அறிவியல் பள்ளி சொல்கிறது.

இப்போதுள்ள தமிழகத்தில் கிடைக்கும் இயற்கைச் சான்றுகள் கொண்டு புவி அறிவியல் பள்ளி இம்முடிவுக்கு வருவதை உணர வேண்டும்.

> *தமிழகக் கடற்கரை ஓரம் காணப்படும் கோண்டுவானாப் பாறைகளும் (290 மில்லியன் ஆண்டுகள்) கிரிடேசியசுப் பாறைகளும் (70 மில்லியன் ஆண்டுகள்) டெர்டியரிப் பாறைகளும் (7 மில்லியன் ஆண்டுகளும்) மேற்சொன்ன தகவல்களை உறுதி செய்வதோடு பல ஆண்டுக்கு முன்பிருந்தே கடல் மட்டம் இப்பகுதியில் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்து வந்துள்ளது உறுதியாகிறது*

எனத் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொலையுணர்வு மைய இயக்குநர் சோம. இராமசாமி 'கடல் மட்ட மாறுதல்களும் தமிழக கடலோரத்தின் எதிர்கால நிலையும்' என்ற கட்டுரையில் பதிவு செய்துள்ளார் (தமிழக அறிவியல் பேரவை 3வது கூட்டம் 1994 மலர்).

தமிழகக் கடற்கரையோரப் பாறைகள் பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் பழமையானவை. அவற்றுக்குப் பெயரிடும் முன்பு சுமதி இராமசாமியைக் கலந்து ஆலோசிக்காமல் கோண்டுவானாப் பாறைகள் என்று பெயரிட்டுவிட்டார்கள்.

ஆசுதிரிய நிலவியல் நிபுணர் எட்வர்டு சூயசு தென்னமெரிக்கா வையும் ஆப்ரிக்காவையும் இந்தியாவையும் ஆசுதிரேலியாவையும்

www.t.me/DigitalNoolagam

இணைக்கும் பாலம் இருந்தது என உணர்ந்தார். இத்துணைப் பகுதிகளையும் உள்ளடக்கிய மாபெரும் கண்டத்துக்குக் கோண்டுவானா என்று பெயரிட்டார்.

*Glossopteris* என்று *Botanical name* சூடிய செடி இந்தியாவெங்கும் காணப்பட்டது. இதே வகைச் செடி தென்னமெரிக்காவிலும் காணப்பட்டது. இந்தியாவில் கோண்டு இனப் பழங்குடிமக்கள் வாழும் மாவட்டங்களில் இச்செடி காணப்பட்டமையால் அதை ஒட்டி மாபெருங்கண்டத்துக்குக் கோண்டுவானா என்று பெயரிட்டார். கோண்டுவானாவே இலெமூரியா, இலெமூரியாவே குமரிக்கண்டம்.

கோண்டுவானாப் பாறைகளின் காலம் 290 மில்லியன் ஆண்டுகள் எனத் தமிழ் அறிஞர்களா வரையறை செய்தனர்? இல்லையே! "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி"யெனத் தமிழ் அறிஞர்கள் பெருமிதமுடன் முழங்கும் இலக்கிய வரிகள் பொய்யெனப் புகலும் கூட்டம் தமிழகப் பாறைகள் 290 மில்லியன் ஆண்டுப் பழமை வாய்ந்தவை என்ற அறிவியல் முடிவால் வாயடைத்து நிற்கும். புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல் அறிவியல் உண்மையைக் கவிதை நடையில் சொன்ன சிறப்புடையது என உலகுணரும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே உதித்த தமிழர்களிடம் கல்லைப் பற்றிய கலைக்களஞ்சியம் இல்லை. என்சைக்ளோபீடியா ஆஃப் ராக்சு அண்டு மினரல்சு என ஆங்கில மொழியில் உள்ளது. எனவே தமிழன் சொன்னது தவறு என ஆகிடுமா? காலம் மெய்ப்பித்தது. அறிவியல் கல்லின் காலத்தைக் கணக்கிட்டது. தமிழரின் பழமையைத் தமிழ் நாட்டுப் பாறைகளே உலகுக்கு மெய்ப்பிக்கின்றன.




சோம. இராமசாமி அவர்கள் கூற்றுப்படி சுமார் 1.4 மில்லியன் ஆண்டுகள் முன்பு கடல் மதுரை வரை பரவி இருந்தது. சுமார் 90,000 ஆண்டுகள் முன்பு சென்னை, வேதாரண்யம், புதுச்சேரி கடலால் சூழப்பட்டிருந்தன.

www.t.me/DigitalNoolagam

*ஏறத்தாழ 65000 ஆகஸ்டு முன்பு கடல் மட்டம் தாழ்ந்ததால் இந்தியாவும் இலங்கையும் சேர்ந்தன. 27000 ஆண்டு முன்பு கடல் மட்டம் உயர்ந்ததால் இலங்கையும் இந்தியாவும் பிரிந்தன. 17000 ஆண்டுகள் முன்பு கடல் மட்டம் தாழ்ந்ததால் இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து, பின் கடல் மட்டம் உயர்ந்ததால் மீண்டும் பிரிந்தன*

என்கிறார்.

இலக்கியச் சான்றுகள் அனைத்தையும் ஒதுக்கித் தள்ளுக என்பவர்கள் சிலருளர். தமிழன் இலக்கியத்தை அனைத்து உண்மைகளையும் பதிவு செய்யும் காலப்பெட்டகமாக்கி வைத்துள்ளவன்.

நீரின்றி அமையாது உலகு என்பது தமிழ்நெறி. தமிழரின் நீரியல் அறிவைக் கூறும் கூவ நூலைப் பார்ப்போம். 18 (அ) 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. நூலின் முகப்பில் காப்புச் செய்யுள் உள்ளது. ஒவ்வொரு பாட்டின் ஈற்றடி அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்து அந்தாதி முறையில் காணப்படும் இந்நூல் ச.வே. சுப்பிரமணியன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

என்னென்ன மரங்கள் இருக்குமிடத்திலும் புல்வகை இருக்குமிடத்திலும் புற்றுகள் இருக்குமிடத்திலும் நீர் கிடைக்கும் எனப் பைந்தமிழ்ப் பாவலன் தமிழரின் நீரியில் அறிவைப் பதிவு செய்துள்ளான்.

*பருமரக் கருஆல் அத்தி பாற்பொடி*
*மருதுடன் இலுப்பையும் வஞ்சிமாப் புளி*
*தருநொச்சி இத்தி ஏழ்பாளை புங்கோர்*
*கருமொய்த்த எறும்பு விளங்கு காணுமே*

என்று மரங்கள் இருக்குமிடத்தில் நீர் இருக்குமெனப் பதிவு செய்துள்ளது.

*காணும் வெண்புல் கரும்புல் கருஞ்சடை*
*தோறு செங்கோல் அணுகு குறுந்தொட்டி*
*தாணு + தெற்பை சிறுபீளை சாடிணை*
*வெங்கோரை பொருதலை வெள்ளமே*

என்று புல்வகைகள் இருக்குமிடத்தில் நீர் இருக்கும் என 19 ஆம் நூற்றாண்டுப் பாடல் சொல்கிறது.

www.t.me/DigitalNoolagam

குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் ஆகிய நிலங்களில் உள்ள மண்வகையினைக் குறிப்பிட்டு அத்தோடு நீர் எத்தனை ஆழத்தில் கிடைக்கும் என்பதையும் புலவர் கூறியுள்ளார். குறிஞ்சி நிலத்தில் 33 சாணில் நீர் தோன்றும். மண்கண்டம் எனில் 6 சாண், கரிசல் எனில் 2 சாண், வெள்ளைப்பார் எனில் 9 சாண், கொப்பரைக் கல்லில் 3 சாண், அப்புப்பாரில் 4 சாண் நராவணிக் கல்லில் 10 சாணில் நீர் கிடைக்குமாம். இயற்கையைகள் கூர்ந்து நோக்கிய தமிழர்கள் கண்டறிந்தன அனைத்தையும் கவிதையில் படைத்தார்கள். தமிழின் வளமை எந்தச் செய்தியையும் கவிதை வழியில் சொல்ல இடமளித்தது.

கடந்த நூற்றாண்டில் தான் அந்தக் கவிதையாற்றல் பட்டுப் போகத் துவங்கிற்று. யாப்பிலக்கணம் வழுவாமல் மரபுக்கவிதை வழியே நீரியல் அறிவு முதல் நிலத்தில் உள்ள அனைத்து அறிவியலையும் சொன்னவன் தமிழன்.

வேறெம்மொழியிலும் இல்லாத சித்திரக்கவி செந்தமிழனின் தனிச்சிறப்பு. ஓவியத்தையும் கவிதை மூலம் தீட்ட முடியுமெனத் தமிழினைத் தவிர உலகில் எந்தச் சமூகம் காட்டியுள்ளது?

*மாதா உதிரம் மலமிகில் மந்தனாம்*
*மாதா உதிரம் சலமிகில் மூங்கையாம்*
*மாதா உதிரம் இரண்டொக்கில் கண்ணில்லை*
*மாதா உதிரத்தில் வைத்த குழவிக்கே*

என்ற திருமந்திரப்பாடல் வழி, தாயின் உதிரத்தில் மலம் இருந்தால் பிறக்கும் குழந்தை மந்த புத்தி உடையதாகப் பிறக்கும். நீர் மிகுதியாக இருந்தால் ஊமையாகப் பிறக்கும். மலம், நீர் இரண்டும் மிகுதியாக இருந்தால் பிறக்கும் குழந்தை குருடாகப் பிறக்கும். Blood/Urine test எல்லாமே அந்நாளிலும் நடந்தன. பாடலிலும் பதிவாகி உள்ளன. தமிழிலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள் என்ற கட்டுரைத் தொகுப்பு நூலில் மேற்சொன்ன தகவல்கள் பதிவாகி உள்ளன.

மாற்றுறுப்பு பொருத்தும் சிகிச்சை நடந்ததற்குப் பொற்கைப் பாண்டியனையும் கண் மாற்று அறுவை சிகிச்சைக்குக் கண்ணப்ப நாயனாரையும் முனைவர் செந்தமிழ்ப் பாவை அந்நூலில் சாட்சி களாக்குவார்.

கவியரசு வைரமுத்து இக்காலத்தில் புவியீர்ப்பு மையம் பற்றி எழுதுகையில்

*ஒருபொருள் அணுக்களில்*
*நிறையெலாம் ஒன்றாய்ச்*

www.t.me/DigitalNoolagam

*சேர்ந்தொரு புள்ளியின் மூலமாய்த் தாக்க*
*பொருளைப் பூமியை நோக்கி இழுப்பதாம்*
*எண்ணும் புள்ளியே ஒண்மை யாமே*

என எழுதுவார்.

"முக்கோணவியலின்" அடிப்படைத் தத்துவத்தைக் கண்டு பிடித்ததாகக் கூறப்படும் பித்தகரசு கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர். இவர் இந்தியப் பண்டிதர்களிடம் வந்து அறிவுரை பெற்றதாக அப்போலாலியசு குறிப்பிடுகிறார். பித்தகரசு தோற்றத்தை நம் பழம்பாடல் முன்பே கூறிவிடுகிறது.

*ஓடிய நீளந்தன்னை ஓரெட்டு கூறாக்கி*
*கூறதில் ஒன்றைத் தள்ளி*
*குன்றத்தில் பாதி சேர்த்தால்*
*நீடிய கர்ணந் தானே*

என்பது பழம் பாடல்.

பித்தகரசு தேற்றப்படி,

$AB^2 + AC^2 = BC^2$
$4^2+3^2=16+9 : 25 = 5^2$
$BC = 5$

என்பது தெளிவாகிறது.

கணக்கதிகாரம் என்ற நூலில்,

*வட்டத்தரை கொண்டு விட்ட தரைதாக்கச்*
*சட்டெனத் தோன்றும் குழி (கணக்கதிகாரம் 46)*

*வட்டத்தரை = சுற்றளவு / 2 = z / rr = rr*

*விட்டத்தரை = விட்டம் / 2 = $a^2 = r$*

*குழி (Area) வட்டத்தரை x விட்டத்தரை = rr x r 2 $rr^2$*

என்று இக்காலக் கணிதவியலோடு கணக்கதிகாரப் பாடல் பொருந்துகிறது. இவ்வாறு பேராசிரியர் ம. அருள்தளபதி கூறுவார். ஆக அக்காலம் முதல் இக்காலம் வரை கவிதை வழியே அனைத்து வரலாற்றையும் பதிவு செய்த தமிழர்கள், வரலாற்றையும் கவிதையிலேயே பதிந்து வைத்தனர். இலக்கியம் என்றால் ஏளனமா? அதில் உண்மைகள் உறைய முடியாதா? என்பதைத் தமிழ்ப்பகைக் கூட்டம் எண்ணிப்பார்க்கட்டும்.

புராணங்களில் ஒளிந்துள்ள உண்மைகளை அறிஞர்கள் தேடுகிறார்கள். தொன்மங்களில் பழம்வரலாறு தென்படுகிறதா

www.t.me/DigitalNoolagam

என்று பார்க்கிறார்கள். சுமதி இராமசாமி அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆய்வை இங்கு முன் வைக்கிறேன்.

சஞ்சீவி பர்வதத்தினின்று இலக்குவனைக் காக்கக்கூடிய மூலிகை எடுத்துக் கொண்டு எவ்வளவு வேகத்தில் அனுமன் பறந்து சென்றிருக்கக் கூடும் என்ற ஆய்வில் பெர்க்கிலி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆர்.பி. கோல்டுமென் ஈடுபட்டார். அவரது ஆய்வு முடிவில் மணிக்கு 660 கி.மீட்டர் வேகத்தில் அனுமன் பறந்து வந்து மூலிகை எடுத்துச் சென்றான் என்கிறார் அவர். இந்த ஆய்வு முடிவுகளை அம்மையார் ஏற்பார். ஆனால் கடலில் கண்டெடுக்கப்பட்ட இலெமூரியாவே குமரிக்கண்டம் என்ற இலக்கிய வாணர் கருத்தை ஏற்க மறுப்பார்.

ஆல்பிரட் வெக்கனர் 1912 இல் உலக வரைபடத்தை எடுத்து வைத்துக் கொண்டு வெட்டியும் ஒட்டியும் ஒன்றோடொன்று பொருத்திப் பார்த்து ஒன்றாக இருந்தன உலகின் கண்டங்கள், பிறகு இடப்பெயர்வு நேர்ந்தது என யூகித்தார். அந்த யூகமே மெய்யெனப் பின்னாளில் மெய்ப்பிக்கப்பட்டது. தமிழறிஞர்கள் யூகம் மட்டும் தவறாகிடுமா? ஆகவில்லையே! கிட்டிய ஆதாரத்திற்குப் பெயரிடா நிலத்திற்கு இலக்கியப் பதிவு காரணமாகப் பொருத்தமான பெயரைச் சூட்டினார்கள். தமிழர் வரலாற்றை அதன் மீது ஏற்றுவது என இடந்தேடியவர்கள் இலெமூரியாக் கண்டமே குமரிக் கண்டமென உறுதிசெய்து கொண்டதாக அவர் கவலைப்படுகிறார்.






பாற்கடலும் அதன் மீது மிதக்கும் பாம்புப் படுக்கையும் பாற்கடலை மத்தாகக் கடைய மேருமலையும் எங்குள்ளன என அத்தகு கூட்டத்தார் தேடிக் கண்டுபிடிக்கட்டும், தொன்மங்கள் உண்மையென நிறுவட்டும்! அதற்காக இலக்கியச் சான்றுகள் பொய்யெனப் புகலும் புன்மனம் வேண்டாம்.




**இந்திய ஆசுதிரேலியத் தட்டு உடைந்து கன்னியாகுமரிக்குத் தெற்கே கருப்பாகக் காட்டப்படும் இடத்தில் மீண்டும் குமரிக்கண்டம் எழுவதைத் தொலைஉணர்வு உத்தி மூலம் எடுக்கப் பட்ட செயற்கைக் கோள் படங்கள் காட்டுகின்றன.**

**மூழ்கிய கண்டமே மேலெழுந்து வந்து மூக்குடைத்தால்தான் இத்தகு இயல்பினர் உண்மையை ஏற்பார்களோ?**

www.t.me/DigitalNoolagam

# உலகத் தொன்மங்களில் பெருவெள்ளக் கதைகள்

*ஞாலநிலப்பாகம் இன்றுள்ளவாறு ஐந்து கண்டங்களாகவும் ஆயிரக்கணக்கான தீவுகளாகவும் தொன்று தொட்டு இருந்தது இல்லை. ஒரு காலத்தில் அது காண்டவனம் (Gondwana) அங்காரம் (Angara) பாலதிக்கம் (Baltica) அமசோனியம் (Amazonia) என்ற நாற்பெரு நிலப்பரப்புகளாகவும் ஒரு சில தீவுகளாகவும் பகுத்திருந்தது. காண்டவனம் ஆப்பிரிக்காவையும் கடகத்திருப்பத்திற்குத் (Trophic of Cancer) தெற்கில் உள்ள இந்தியாவையும் ஆத்திரேலியாவையும், அங்காரம் ஆசியாவின் வடகீழ்ப் பகுதியையும் பாலதிக்கம் வட அமெரிக்காவின் வடகீழ்ப்பகுதியையும் கீரின்லாந்து என்றும் பைந்தீவையும் ஐரோப்பியாவின் தென் பகுதியையும் அமசோனியம் தென்னமெரிக்காவையும் தன்னுட் கொண்டிருந்தன.*

*அரபிக்கடலும் வங்கக் கடலும் அன்றில்லை. இந்துமாவாரியின் பெரும்பகுதியும் அத்திலாந்திக்க மாவாரியின் வடபகுதியும் நிலமாயிருந்தன. நண்ணிலக் கடல் ஆசியாவை ஊடறுத்துச் சென்றது. சென்று அமைதி மாவாரியோடு சேர்ந்திருந்தது. அதனால் பனிமலைத் தொடர் (இமயம்) அன்று கடலுள் மூழ்கி இருந்தது*

என வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ''வரலாற்று முன்னைத் தென்னிந்தியா'' நூலில் பதிவு செய்வார்.

எனவே அன்று நிலமாக இருந்த அரபிக்கடலில் தமிழர் வரலாற்றுத் தடயங்களைத் தேடியாக வேண்டும். வங்காள விரிகுடாவை அங்குலம் அங்குலமாக அலசியாக வேண்டும். இந்துப் பெருங்கடலில் தமிழர் தொன்மையைத் தேடியாக வேண்டும்.

கடலில் மூழ்கி முத்தெடுப்போம்! அதற்காக மூச்சடக்கிப் பழகுவோம். வரலாற்றைத் தேடுவது எவ்வாறு? இயலுமா? என்று தயக்கம் வேண்டாம்.

www.t.me/DigitalNoolagam

சென்னையைச் சார்ந்த தேசியக் கடற்பொறியியல் நிறுவனம் கடலடியில் 6 கி.மீ. ஆழம்வரை தானியங்கியாகச் சென்று கப்பலில் இருந்து பிறப்பிக்கும் கட்டளைகளை ஏற்றுத் தேடக் கூடிய வாகனம் ஒன்றை வடிவமைத்துள்ளது.

(Rosub *6000*) உரோசப்பு *6000* என்ற பெயர் சூட்டப்பெற்ற அந்த ஊர்தியை உருசிய அறிவியல் அகாதெமி கூட்டுறவுடன் தேசியக் கடற்பொறியியல் ஆய்வு நிறுவனம் வடிவமைத்தது. கடலடியில் எரிவாயு கண்டுபிடிக்க இந்த ஊர்தியைப் பயன்படுத்து கிறார்கள். கடலடியில் கனிமங்களைக் கண்டறிய இதை ஈடுபடுத்து கிறார்கள்.

இதே கருவியைச் சற்று மாற்றம் செய்து நமது புதையுண்ட நாடுகளை, நாகரிகத்தை, வரலாற்றை மீட்டெடுக்க முடியாதா? முனைந்தால் முடியும்! முயற்சி திருவினையாக்கும், அம்முயற்சியில் தமிழரின் அகப்பகைவர் மூக்கை நுழைக்காமல் பார்த்துக் கொண்டாலே நம் வரலாறு மீட்டெடுக்கப்பட்டு விடும்.

*முந்நீர் விழவின் நெடியோன்*
*நன்னீர்ப் பஃறுளி* (புறம். 9)

என்று நெட்டிமையார் பாடினார்.

“பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும்” பற்றி இளங்கோவடிகள் பாடியிருப்பதால் குமரிக் கண்டமும் அதன் தென்கோடியின் மேலைப்பகுதியில் இருந்த குமரிமலைத் தொடரும் அதனின்று பாய்ந்தோடிய பஃறுளியாறும் கட்டுச் செய்திகள் அல்ல என்பதும் உண்மையாயிருந்தவை என்று அறியலாம்.

‘‘தொடியோள் பௌவமும்’’ என்றும் சிலப்பதிகாரத் தொடரின் உரையில்,

*தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும் ஏழ்முன்பாலை நாடும் ஏழ்பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ் குணகாரை நாடும் ஏழ் குறும்பனைநாடும் என்னும் இந்த 49 நாடும் குமரி, கொல்லம் முதலில் பன்மலைநாடும் காடும் பதியும்*

என்று அடியார்க்கு நல்லார் பட்டியல் இடுவார்.

www.t.me/DigitalNoolagam

*"செங்கோன் தரைச் செலவு" என்னும் நூலில் அங்கிருந்த மணிமலை, பேராறு என்னும் சில மலைகள் இடங்களின் பெயர்களும் அறிய வருகின்றன. செங்கோன் தரைச் செலவு என்பது குமரி நாட்டின் கண் இருந்த பெருவள நாட்டரசனாகிய செங்கோன் மீது பாடப்பட்ட தமிழ் நூல். அதன் சில பாடல்களே வெளிவந்துள்ளன. செங்கோன் தரைச் செலவு மிகப் பழைய நூல்*

என்பதாக இன்னொரு இலக்கியச் சான்றை ஈழ அறிஞர் ந.சி. கந்தையா பதிவு செய்துள்ளார்.

கடற்கோள்கள் பற்றியும் பெருவெள்ளம் பற்றியும் நம் இலக்கியச் சான்றுகள் மட்டுமல்ல, உலகளாவிய பதிவுகள் உள்ளன.

1. Roger D. Abrahams 1983 இல் எழுதி நியு யார்க்கில் உள்ள Random House வெளியிட்ட நூல்: African Folk Tales.
2. இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் Prince Ilango Adigal's The Ankle Bracelet: Alain Danielou மொழிபெயர்த்து New Directions பதிப்பகம் நியு யார்க்கில் 1965 இல் வெளியிட்ட நூல்.
3. பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை: Kumarikandam: கழக வெளியீடு 1940.
4. Ansen Balikci எழுதிய The Netsilik Eskimo, Natural History Press நியு யார்க் வெளியீடு 1970.
5. Victor Barnouw எழுதிய Wisconsin chippewa Myths and Tales, Wisconsin University Press, 1977.
6. B. Dorothy Barrere எழுதிய The Kumuhonua Legends: A study of Late 19th Century Hawaiian Stories of Geatilonseations and Origins: Pacific Anthropological Research Number 3, Bishop Musuem, Honolulu 1969.
7. Rosemarg Bell: Yurok Tales: Bell Books, Etna California 1992.
8. M. Ronald Bermdt and Catherine Bermdt எழுதிய The Speaking Land, Inner Traditions International, Rochester, Vermont 1994.
9. John Bierhorst எழுதிய The Mythology of South America. William Marrow வெளியீடு நியூயார்க் 1988.
10. John Bierrorst எழுதிய The Mythology of Lenope, University of Arizona Press, Tuscon 1995.

www.t.me/DigitalNoolagam

11. G. Daniel Brinton எழுதிய The Myths of the New World, Greenwood Press, நியுயார்க் 1876, 1969.

12. Tona Wilson and Maria Christiona Brusca எழுதிய When Jaguars Ate Moon and other Stories about Animals and plants of America, Holt, Newyork 1995.

13. Kenneth Maddock and R. Ira Buchler The Rainbow serpent, A Chromatic Piece, Mouton Publishers, The Hague 1978.

14. William Buck எழுதிய Mahabharatha, University of California Press, Berkeley 1973.

15. E.A. Wallin Budge எழுதிய The Book of the Dead, Arkana, London 1923, 1989.

16. A Napolean Chagnon எழுதிய Yanomamo, The Fierce People, Holt, inehart and Winston 1977.

17. E. Ella Clark எழுதிய Indian Legends of the Pacific Northwest University of California Press 1953.

18. Stephanie Dailey எழுதிய Myths from Mesopotomia Oxford University Press, Oxford 1989.

19. Marc de Civrieux எழுதிய Watuna, An Aruoco Creation Cycle David M. Guss மொழிபெயர்த்தவர் 1980.

20. Francisco Demetrio 1968 ல் எழுதிய The Flood Motif and Symbolism of Rebirth in Filipino mythology.

21. M. J. Dresden எழுதிய Mythology of Iran 1961.

22. Alan Dundes எழுதிய The Flood Myth, University of California Press, Berkeley and London 1988.

23. Ella E Clark, Margot Edmonds எழுதிய Voices of Winds Facts on File INC. நியுயார்க் 1989.

24. Hertha D. Wong and John Elder : The Family of Earth and Sky: Indegenos Tales of Nature from Around the world 1994.

25. Alexander Elicitt எழுதிய Universal Myths, நியூயார்க் 1976.

26. Alfanso Ortiz and Richard Erdoes எழுதிய Amercian Indian Myths and Legends. Pantheon Books Newyork 1984.

27. Max Fauconntet 1968 எழுதிய Mythology of Black Africa and Felix in Guerand (ed) New Larousse Encyclopediaof Mythology, London.

www.t.me/DigitalNoolagam

28. Raymond Faulkner மொழி பெயர்த்த The Egyptian Book of the Dead, the Book of going forth by Day: Chronicle books, San Francisco 1994.

29. Susam Feldman எழுதிய African Myths and Tales Dell publising, Newyork 1963.

30. Josephine flood எழுதிய Archaeology of the Dream Time, University of Hawaii Press Honolulu 1983.

31. Sir G. James Fraser எழுதிய Folklore in Old Testament Macnillan & Co Londan 1919.

32. Sir J. James Fraser எழுதிய The Golden Bough, Wordsworth Editions Ltd., Hertfordstive 1993.

33. Theodor H Gaster எழுதிய Myth, Legend and Custom in Old Testament 1969.

34. Ruth Warner Giddings எழுதிய Yaguimyths and Legends, University of Arizona Press Tuscon 1959.

35. Douglas Gilford எழுதிய Warrior, Gods, Sprits from Central and South Amarican Mythology, William Collins, Glasgow 1983.

36. Edward Gilford and Block, Hariss Gwendolise எழுதிய California Indian wights, University of Nebraska Press, Landon 1930, 1990.

37. The Legends of the Jews, Jeuwish Publications society of America 1909.

38. L.H. Gray எழுதிய "The mythology of all Races", Marshall Jones and co., Boston 1916-1920.

39. Grimms எழுதிய The Complete Grimms Fairy Tales Panthen Books, New York 1944.

40. Bird Garge Grinnell: Pawee Hero Stories and Folk Tales, University of Nebrassco Press, Lincoln 1961.

41. Dupey Hammerly and Daniel எழுதிய Some Observations on the Assryo Babylonian and Sumerian Flood Stories 1968.

42. Fernando Horcasitas : An Analysis of the Deluge Myth in Meso-america: 1953.

43. M.Oldfield Houry : The encircled serpent : Arthur Richmond Company; New York : 1955.

44. B.Katherine Judson : Myths and Legends of Mississippi Valley and the Great Lake : 1914.


www.t.me/DigitalNoolagam

45. Emmi Keyler- Meyer :Myths Motifs in Flood stories from Grasslands of Cameroon:1971.

46. David Kalakauc : The Legends and Myths of Hawaii: 1972.

47. Erich Colig :Noah's Ark Revisited : On the Myth of Land Connection in Traditional Australian Aboriginal Thought 1980.

48. Samuel Noah Kramer : Mythologies of Ancient World : Anchor Books: New York : 1961.

49. Tim and Morris , Lattaye : The Ark on Ararat 1976.

50. G.Charles Lelend : Algonquin Legends : 1978.

51. Damrong Tayanin, Jam Ojvind Swahn, Kristina Lindell : The Flood : Three Northern Kammu Versions of the Story of Creation :1976.

52. Miquel Leon-Portilla : Mythology of Ancient Mexico.

53. Malcolm Margolin : The Ehlone Way : 1978.

54. Malcolm Margolin : The Way we lived : 1961.

55. Peter T.Markmau & Roberts H.Markmau : The Flayed God :1992.

56. C.Hart Merriam : The Dawn of the World : University of Nebraska Press, London 1910, 1993.

57. Hugh Miller : The Testimony of the Rocks or Geology and its bearings on the Two theologies Natural and Revealed : 1857.

58. Lucien Miller [ed] : South of the Clouds : Tales from Yunnan : University of Washington Press : 1994.

59. Charles P.Mounford : The Rainbow Serpent Myth of Australia.

60. Howard Norman : Northern Tales of Jicarilla Apache Indians : 1938, 1994.

61. Ovid : The Metamorphosis : Translated by Horace Gregory : 1958.

62. Geoffrey Parunder : African Mythology.

63. Plato : The Dialogues of Plato : Vol2 : 1892, 1920.

64. Junior H. Rutherland Platt : The Forgotten Books of Eden : 1927.

65. Creiza Roheim : The Flood Myth as Vertical Dream : 1952.

66. George Urostle and Frank Solomon : The Huarochiri Manuscript : University of Texas Press : 1991.

67. Rosylin Poignant : Oceanic Mythology : 1967.

www.t.me/DigitalNoolagam

68. Anne Marie Shaw : Pima Indian Legends : University of Arizona Press : 1968.

69. George Smith : The Chaldean Account of the Deluge : 1873.

70. Ramsay William Smith : Aborigine Myths and Legends : 1930, 1996.

71. C.Barbara Sproul : Primal Myths : 1979.

72. Snouri Struluson : The Prose Edda : 1985.

73. Dennis Ted Lock : {Translated } Popul Vuh : 1985.

74. B.Dorothy Vitaliano : Legends of the Earth : Indiana University Press : 1973.

75. Marie- Louise- von Franz : Patterns of Creativity Mirrored in Creation Myths :1986.

76. Yerrone Walls and John Walls : Classical Chinese Myths :1984.

77. Frank Waters : Book of the Hopi : 1963.

78. ETC Werner : Myths and Legends of China : 1922, 1964.

79. W.D.Westervell : Myths and Legends of Hawaii : 1987.

80. Norman E. Jr. Whitten : Sacha Runa : 1976.

81. Johannes Wilbert : Fold Literature of the Yamana Indians 1977.

82. Zong- in- Sob : Folk Tales from Korea : 1952.

என்று இத்துணை நூல்களும் உலகின் பல நாடுகளில் பல மொழிகளில் வழங்கும் தொன்மங்களில் உள்ள கடற்கோள் பற்றிப் பதிவு செய்கின்றன. தமிழிலக்கியப் பதிவுகளைப் பொய்யிலே பிறந்தவை என்று புறந்தள்ளுவோர் உலக இலக்கியங்களும் உண்மைக்கு மாறாகப் பேசுவதாகப் பிதற்றப் போகிறார்களா? பெரியதோர் கண்டம் மூழ்கவில்லை, ஒரு தாலுக்கா அளவு நிலமே கடல் மட்டம் உயர்ந்ததால் நீரில் மூழ்கிற்று என்று வரலாற்றுப் பேராசிரியை சுமதி இராமசாமி இட்டுக் கட்டும் கட்டுக்கதை தவிடு பொடியாக வில்லையா? தமிழகத்தில் ஒரு தாலுக்காஅளவு நிலம் நீரில் மூழ்கியதற்கா உலகின் ஒவ்வொரு நாட்டுத் தொன்மமும் ஓலமிடுகின்றன? தமிழர் வரலாற்றின் மீதுள்ள காழ்ப்பால் உண்மைகளைத் தேடும் இயல்பை இவர் போல் சிலர் இழந்து விட்டனர்.

தமிழில் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் உலக இலக்கியங்களில் கடற்கோள் என்ற தலைப்பில் ஆய்வு செய்யலாம். எல்லா நாட்டுத் தொன்மங்களுக்குள்ளும் ஒப்பீடு செய்யலாம்.

www.t.me/DigitalNoolagam

விவிலியத்தில் நோவாவின் படகும் திருப்பாற்கடலில் பாம்புப் படுக்கை மீது மிதக்கும் திருமாலும் ஏன் கடற்கோளில் இருந்து தப்பிய கதைக்குக் குறியீடுகளாக இருக்கக்கூடாது?

உலகத் தொன்மங்களில் உள்ள கதைகள் சிலவற்றை மேற்கொண்டு ஆய்வுகளில் நீங்கள் ஈடுபடத் துணையாக நூற்பட்டியல் தந்தேன். கதைச் சுருக்கமும் இனித் தருவேன்.

**தெற்குப் பிரேசிலில்** (Coroado) கொரோடாவில் வழங்கும் கதை. ஒரு காலத்தில் பெருவெள்ளம் உலகை மூழ்கடித்தது. மலைச் சிகரங்களைத் தவிர்த்து எல்லா நிலமும் நீரில் மூழ்கியது. கொரோடா,கய்யூருக்கிரசு, கேம்சு என்ற மூன்று பழங்குடிகள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பற்களில் தீப்பந்தங்களைக் கவ்விக் கொண்டுசெர்ரா டோ மார் மலைநோக்கி நீந்திச் சென்றனர். கய்யூருக்கிரசு, கேம்சு ஆகிய இரு பழங்குடியின மக்கள் நீந்த முடியாமல் களைத்து நீரில் மூழ்கினார்கள். அவர்களின் ஆவி மலையில் குடிபுகுந்தது. கொரடோக் குழு தப்பிக் கரை சேர்ந்து மலையுச்சியை அடைந்தது. சிலர் மலை மீதும் சிலர் ஆங்கிருந்த மரங்கள் மீதும் தொற்றிக் கொண்டு கிடந்தனர். தண்ணீர் வற்றிய பாடில்லை. பல நாள்கள் உணவுமில்லை. சில நீர்ப்பறவைகள் மண்ணைக் கூடைகளில் சுமந்து பறந்து வந்தன. தண்ணீரில் அம்மண்ணை அப்பறவைகள் கொட்டக் கொட்டத் தண்ணீர் வடிந்தது. பழங்குடிகள் விரைந்து மண் கொட்டுமாறு வேண்டினர். உடனே பறவைகள் வாத்துகளைத் துணைக்கு அழைத்தன. நீர் வடிந்ததும் மலை உச்சியில் இருந்த கொரடோக் குழுவினர் அனைவரும் கீழிறங்கி வந்தனர். மரங்களில் தொற்றிக் கிடந்தோர் குரங்காயினர். மலைக்குள் புகுந்த உயிர் நீத்த கய்யூருக்கிரசு கேம்சு பழங்குடிகள் ஆவி நெருப்பை மூட்டிற்று என்பதாக இலத்தீன் அமெரிக்க நாடான பிரேசிலில் பழங்குடிகளிடையே ஒரு கதை உலவுகிறது.

**கடலோரச் சிலி** பகுதியில் இரண்டு பாம்புகளுக்கிடையே போட்டி. தங்களில் யாரால் கடல் அலைகளை உயரமாக எழும்பச் செய்ய முடியும்? அதற்காக மந்திர வித்தை யாருக்குத் தெரியும் என்று எழுந்தது சண்டை! அப்போது கடுமையான நிலநடுக்கமும் எரிமலையின் வெடிப்பும் நிகழ்ந்தன. தெக்தெக் (Theg theg) என்ற மலையில் சிலி மக்கள் தஞ்சம் புகுந்தனர். அந்த மலை சூரியனுக்கு மிக அண்மையில் இருந்தது. எனவே தப்பி மலை மீது ஏறுமுன் சூரியனின் வெப்பத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தட்டுக்கள் ஏந்திச் சென்றனர்.

www.t.me/DigitalNoolagam

**வடக்கு அர்ஜெண்டினாவில் டோபா பகுதியில் வழங்கும் கதை:** வீட்டுக்குத் தூரமான பெண்கள் நீர் நிலைகளில் இறங்கிக் குளிப்பதோ தண்ணீர் குடிப்பதோ வான வில்லுக்குப் பிடிக்காது. ஒரு பெண்ணின் தாயும் சகோதரியும் வெளியே போகும் போது வீட்டில் குடிப்பதற்குத் தண்ணீர் வைக்காமலே சென்று விட்டனர். தாகம் தாங்காமல் அருகில் உள்ள நீர் நிலைக்குச் சென்று நீரருந்தித் திரும்பினாள்! வந்ததே கோபம் வானவில்லுக்கு! சூறாவளிக் காற்றும் பெரு மழையும் ஏற்பட்டன. அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அனைவரும் உயிர் துறந்தனர்.

**தெற்கு அர்ஜென்டினாவில் செல்க் நாம்அருகில் ஒரு கதை :** ஒரு காலத்தில் மனிதர்கள் யாருமே சாகவில்லை. படுத்துத் தூங்குவார்கள். புத்துணர்ச்சியுடன் விழித் தெழுவார்கள். இப்படி பல ஆண்டுகள் வாழ்ந்து வெறுத்துப்போய் மனிதப் பிறவியாக இருப்பதை விடக் கற்களாக மாறுவோம் என மாறினார்கள். மேகமாக மாறினார்கள். விலங்குகளாக வடிவம் எடுத்தார்கள். இச்சமயத்தில் உலகை மூழ்கடித்த பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தின் குளிர் நீரில் சிக்கித் தத்தளித்தார்கள். சிலர் பெங்குயின்கள் போலப் பனிப்பாறைகள் மீதேறித் தப்பித்தார்கள். பெங்குயின்களுடன் விளையாடிக் கொண்டும் மீன் உண்டும் பொழுது போக்கினார்கள். இதனால் அவர்கள் பெரிய வடிவப் பெங்குயின்களாக உருமாறிப் போனார்கள். வெள்ள நீர் வடிந்ததும் சிலர் மனிதர்களாக வாழப் போனார்கள். மற்றையோர் பெங்குயின்களுக்கு அரசர்களாகத் திகழ்ந்தார்கள்.

***அர்காடியன் :*** (Arcadian) அர்காடியாவின் முதல் அரசன் தார்தனுசு. பெருவெள்ளம் அவன் நாட்டை மூழ்கடித்து வேளாண்மைக்குத் தகுதியற்றதாக்கியதால் மலை மீதேறித் தப்பிக்கப் பார்த்தான். அவ்வளவு பெரிய மக்கட்திரள் மலைமீது தங்கப்போதிய இடமில்லை. தார்தனுசுவிரின் மகன் திமாசை அரசனாக்கி அந்த மலை மீது விட்டு விட்டு சாமத்ரோசு தீவு நோக்கித் தார்தனுசு மன்னனும் அவன் குடிகளில் சிலரும் புறப்பட்டனர்.

நண்ணிலக் கடல் வெடிப்புக்கும் கருங்கடலுக்கும் இடையே வெளிப்பட்ட கருங்கடல் வெள்ளப் பெருக்கு ஆசியாவின் கரையோரங்களை மூழ்கடித்தது. சாமுத்ரோசு தீவின் தாழ்வான பகுதிகளை விழுங்கியது. சாமுத்ரோசு தீவில் தப்பிப் பிழைத்தோர் மலை மீதேறி உயிர் தப்பினார்கள். பிரார்த்தனை செய்தார்கள். காப்பாற்றப்பட்ட அம்மக்கள் இந்நினைவாக நினைவுச் சின்னங்களை அமைத்தார்கள். பலி பீடங்களையும் அமைத்தார்கள்.

www.t.me/DigitalNoolagam

அங்குள்ள மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும்போது கடலுள் மூழ்கிய கட்டுமானங்களில் அவர்கள் வலைகள் சிக்குவதுண்டு.

**ரோமன்:** மனித குலத்தில் தீவினைகள் மல்கின. இதனால் சினங்கொண்ட சூபிடர் உலகையே கொளுத்தி எரித்து விட முடிவு எடுத்தது. அவ்வாறு உலகை எரியூட்ட வேண்டுமாயின் சொர்க்க லோகமும் தீப்பற்றி எரிந்து சாம்பலாகி விடுமென அஞ்சி அந்த எண்ணத்தைக் கைவிட்டது. அதற்குப் பதில் உலகை வெள்ளத்தில் மூழ்கடிக்க முடிவு செய்தது. நெப்டியூன் கிரகத்தின் துணையோடு பெரும் புயலையும் வெள்ளத்தையும் நிலநடுக்கத்தையும் ஏற்படுத்தியது. அதிலிருந்து தப்பிப் படகிலேறி டியூகாலயனும் அவர் மனைவி பைராவும் வந்து பர்னாசசு மலையுச்சியில் தங்கினர். அவர்கள் பக்தி கண்டு மெச்சி உயிர் பிழைக்குமாறு விட்டு விட்டு ஜூபிடர் வெள்ளத்தை வடியச் செய்தது. கடவுள் தன் மீது வந்திறங்கிப் பேசுவதாகச் சொல்லும் ஒருவன் அறிவுரை கேட்டு, ஜூபிடர் கற்களை வீசி எறிந்தார். ஒவ்வொரு கல்லும் உயிருள்ள மனிதனாகியது.

சூபிடரும் மெர்க்குரியும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் பிரைசியாவில் பிச்சை எடுத்தபோது எல்லா வீட்டுக் கதவுகளும் மூடிக் கொண்டன. பிலமோன் - பௌசிசு தம்பதியரின் விருந்துபசரிப்பு மட்டுமே கிடைத்தது. மகிழ்ந்த கடவுளிருவரும் தம்மை அடையாளங் காட்டிக் கொண்டு அத்தம்பதிகளை மலை மீது நடத்திச் சென்று அவர்கள் முன்பு வாழ்ந்த பள்ளத்தாக்கு முழுவதும் வெள்ளக் காடாகக் மாறிவிட்டதைக் காட்டினர். அத்தம்பதிகள் வீடு மட்டுமே அழிவினின்று தப்பி இருந்தது. அதைப் பளிங்காலான கோயிலாக உருமாற்றிய கடவுளர் மூப்பு அடையும் வரை அக்கோயிலில் பூசாரிகளாக இருக்குமாறு தம்பதிகளைப் பணித்தனர். பின்னர் அவ்விருவரும் மரமாகி விட்டனர்.

ஓடன், வில்லி, வீ ஆகியோர் மிகப் பிரமாண்டமான எமீர் என்ற பனிப் பூதம் ஒன்றை வெட்டிச் சாய்த்தனர். அந்தப் பூதத்தின் வெட்டுக் காயங்களில் இருந்து வெளியேறிய பனி நீரில் ரைம் பூதங்கள் அனைத்தும் மூழ்கி இறந்தன. பெர்கெல்மீர் என்ற பூதம் நடுவே துளையிடப்பட்ட அடி மரத்தினின்று செய்த படகிலேறி மனைவி மக்களுடன் தப்பிப் பிழைத்தது. எமீர் என்ற அந்தப் பனிப்பூதத்தின் உடலே நாம் வாழும் உலகாகவும் அதன் குருதியே கடல்களாகவும் மாறிற்று என்பது **இசுகாண்டிநேவியக் கதையாகும்.**

www.t.me/DigitalNoolagam

மனித உடலில் மேயும் கொசு போன்றதோரு உயிரும் ஈ போன்ற உயிரும் முட்டை ஓட்டில் "பீர்" தயாரித்தன. கொசு கீழே விழுந்து எரிந்து சாம்பலாயிற்று. இதனால் ஈ அழுதது. அப்போது அவை இருந்த வீட்டுக் கதவு விரிசல் கண்டது. துடைப்பம் தானாகப் பெருக்கியது. அந்த வீட்டிலிருந்த வண்டி தானாக ஓடிற்று. அங்குக் கொட்டியிருந்த சாம்பல் மேடு தானாகப் பற்றி எறிந்தது. இதனால் மரங்கள் அசைந்தாடின. தண்ணீர்க் குடமேந்தி வந்த பெண்ணொருத்தி அதிர்ச்சியுற்றுக் குடத்தைக் கீழே போட்டாள். இதனால் நீரூற்றுப் பொங்கி அங்கிருந்து பெருகியது. அந்த வெள்ளத்தில் எல்லாம் மூழ்கியது. **செருமானியத் தொன்மம் இது.**

**செல்திக் தொன்மப்படி** சொர்க்கமும் பூமியும் இரண்டு பூதங்கள். சொர்க்கம் பூமியில் பிள்ளைகள் பிறந்திடுமாறு செய்தது. பிள்ளைகளால் பூமி நிரம்பி வழிந்தது. பூமியின் இருட்டில் வாழ்வது பிள்ளைகளுக்கும் அதன் தாய்க்கும் பிடிக்கவில்லை. அவர்களுள் துணிச்சல் மிகுந்த பிள்ளை தன் உடன்பிறப்புகளை அழைத்துச் சென்று சொர்க்கத்தை வெட்டி வீழ்த்தினான். அந்தக் குருதிப் பெருக்கில் பெரு வெள்ளம் ஏற்பட்டு ஒரேயொரு தம்பதி தவிர அனைவரும் மூழ்கி இறந்து போயினர். ஒரு வலிமை மிகு மனிதன் தயாரித்த கப்பலில் அவ்விணையர் தப்பினர். அந்த வெள்ளம் வடிந்து பள்ளங்களை நிரப்பியதால் கடல்கள் உருவாயின. சொர்க்கத்தைச் சாய்த்த அந்த மனிதன் வலிமைமிகு அரசனானான். ஆனால் வலிமைமிகு மனிதனுக்கும் கடவுளருக்கும் ஒருவர் மீதொருவர் கடும் வெறுப்பு இருந்தது. அரசாள வந்த டைட்டனை அவன் மகனே ஆட்சிப் பொறுப்பில் இருந்து விரட்டி அடித்தான். இந்த மகன் கடவுளாகப் பிறந்த மகனாவான். தோற்ற டைட்டன் இறந்தவர் உலகு ஏகினான். இது செல்திக் கதையாகும்.

**வேல்சுப் பகுதியில் வழங்கும் தொன்மம்;** சிங்க ஏரி வெடித்துச் சிதறி எல்லா நிலத்தையும் நீரில் மூழ்கடித்ததாகச் சொல்லும். பாய்மரம் இல்லாக் கப்பலில் ஏறி டைட்டானும் டைஃபாச்சும் எல்லா உயிரினங்களின் இணைகளையும் காப்பாற்றி (பிரிட்டனில்) வந்திறங்கினர். அவர்கள் மீண்டும் உலகில் உயிரின உற்பத்தியைப் பெருக்கினார்கள்.

மேலுலகில் இருந்த சாளரம் மூலம் மிக உயரிய கடவுளான பிராம்ழி மாசு உலகை வேடிக்கை பார்க்கிறார். மனித குலத்தில் போரும் பூசலும் அநீதியும் அக்கிரமமும் தலைவிரித்தாடுகின்றன. அதை அடக்க இரண்டு அடியாட்களைப் பூமிக்கு அனுப்புகிறார். தண்ணீரும் காற்றுமே அவ்விரு அடியாட்கள். (Wandu) வான்டு என்பது தண்ணீரின் பெயர். வேசாசு (Wejas) என்பது காற்றின்

www.t.me/DigitalNoolagam

பெயர். உலகை அழித்தொழிக்குமாறு கடவுள் இட்ட கட்டளையை இந்த இரண்டு அடியாட்களும் நிறைவேற்றுகின்றார்கள். இருபது நாட்களில் ஏறக்குறைய எல்லாமும் அழிக்கப்படுகின்றன. கொஞ்சமே மிஞ்சியுள்ளது. அப்போது ஏதோ ஒரு கொட்டையைக் கடவுள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அதன் தோலை வீசி எறிகிறார். அது மிக உயர்ந்த மலையின் உச்சி மீது விழுகின்றது. அங்குத் தான் சில மனிதர்களும் மிருகங்களும் தஞ்சம் புகுந்துள்ளன. அந்த கொட்டையின் தோலில் ஏறி அது மிதப்பதால் அனைவரும் தப்பினர். கடவுளின் கோபம் தணிந்தது. நீர் வடிந்தது. சூறைக் காற்று நின்றது. மக்கள் கலைந்து சென்றார்கள். ஒரேயொரு மூப்படைந்த இணையர் மட்டும் அங்கிருந்தார்கள். அவர்களுக்கு ஆறுதல் நவிலக் கடவுள் வானவில்லை அனுப்பி வைத்தார். உலகில் உள்ள எலும்புக் குவியல்கள் மீது ஒன்பது முறை குதிக்குமாறு கடவுள் சொன்னதை வானவில் கூறியது. அவ்வாறே குதித்தார்கள். ஒன்பது இணையர் அதில் உருவானார்கள். அவர்கள் வழியில் தான் ஒன்பது லிதுனியப்பழங்குடிகள் பிறந்தனர் என்பது லிதுனியக் கதை.

**டிரான்சில்வேனியன்** நாடோடிகளிடம் ஒரு கதை வழங்குகிறது. உலகில் மனிதர்கள் எந்தச் சிக்கலுமின்றி வாழ்ந்தார்கள். நற்கனிகள் விளைந்தன. மரங்களில் மாமிசம் உருவானது. பல ஆறுகளில் பாலும் ஒயினும் ஓடின. ஒரு நாளிரவு அந்த நாட்டுக்குக் கிழவன் ஒருவன் வந்தான். இரவு தங்குமிடம் தேடினான். ஒரு இணையர் தங்கள் வீட்டில் தங்க வைத்தனர். மறுநாள் அக்கிழவன் விடைபெற்ற போது ஒரு சிறிய கிண்ணத்தில் மீன் ஒன்றைப் போட்டுத் தான் திரும்பி வரும் வரை அதைப் புசிக்காமல் இருந்தால், அதைத் திருப்பி அவனிடமே அளித்தால் பரிசு ஒன்று அளிப்பதாகப் பகர்ந்து விடை பெற்றான். மனைவிக்கு நாக்கு ஊறியது. கணவனோ வாக்களித்தபடி கிழவன் திரும்பும் வரை மீனைப் புசிக்காமலிருக்கும்படி மனைவியைக் கேட்டுக் கொண்டான்.

இரண்டு நாள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மனைவி மீனைச் சுட்டுச் சாப்பிட்டாள். உடனே அவளை மின்னல் தாக்கியது. அவள் இறந்தாள். பெருமழை கொட்டத் தொடங்கியது. அந்நாட்டு ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்தன. ஒன்பது நாள் கழித்து வந்த அந்தக் கிழவன் எல்லாரும் வெள்ளத்தில் மூழ்கி இறப்பர் என்றான். வாக்கைக் காப்பாற்றிய அந்தக் கணவன் காப்பாற்றப்படுவான். இன்னொரு மனைவியோடும் பிள்ளை குட்டிகளோடும் ஒரு படகைச் செய்து அதில் ஏறித் தப்பிக்குமாறு

www.t.me/DigitalNoolagam

சொன்னான். விதைகள், வேர்கள், செடிகள், விலங்குகள் உட்பட முடிந்ததைக் கப்பலில் ஏற்றிக் காப்பாற்றச் சொன்னான். ஓராண்டு மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. ஓராண்டுக்குப் பிறகு நீர் வடிந்தது. கப்பலில் தத்தளித்த விலங்குகளும் தம்பதிகளும் கரை சேர்ந்தனர். கடுமையாக உழைத்தார்கள். நோயும் மூப்பும் வந்து சேர்ந்தன. இறந்தார்கள். பல்லாயிரமாண்டுக்குப் பிறகே பெருவெள்ளம் ஏற்படுமுன் இருந்த மக்கள் திரள் மீண்டும் உருவாயிற்று.

**துருக்கித் தொன்மங்களில்** மாவீரன் அலெக்சாந்தருக்கு வேறு பெயர். இசுகந்தர் இலல்காமி என்பது அப்பெயர். அவர் படையெடுப்புகளில் ஒன்றில் இசுமைமா அரசி தனக்குக் கப்பம் கட்ட வேண்டுமென அலெக்சாந்தர் ஆணையிட்டார். கப்பம் கட்ட மறுத்ததோடு ஏளனமாகவும் பேசி அலெக்சாந்தரையே மூழ்கடிப்பேன் என்று அந்த அரசி பேசினாள். இதனால் வெகுண்டெழுந்த மாவீரன் அலெக்சாந்தர் அரசியையே பெருவெள்ளத்தில் மூழ்கடிப்பதென முடிவு எடுத்தார். அதற்காகப் பாசுபரசு நீரிணையை வெட்டுவிக்க இசுலாமியத் தொழிலாளர் களையும் கடவுள் நம்பிக்கையற்ற தொழிலாளர்களையும் பணிக்கு அமர்த்தினார். இசுலாமியத் தொழிலாளர்க்கு வழங்கிய கூலியில் ஐந்திலொரு பங்கையே கடவுள் நம்பிக்கையற்ற தொழிலாளர் களுக்குக் கொடுத்தார். கால்வாய் வெட்டப்பட்டு முடிவடையும் நிலையில் கூலி தொடர்பாகக் கொடுத்த வாக்குறுதியை மீறினார். இருதரப்புக்கும் ஐந்திலொரு பங்கே கூலியாகத் தந்தார். இதனால் ஏமாற்றப்பட்ட இசுலாமியத் தொழிலாளர்கள் வேலையை விட்டு அகன்றனர்.கடவுள் நம்பிக்கையற்றோர் தொடர்ந்தனர். அப்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கருங்கடல் பொங்கி வழிந்தது. வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் நீரில் மூழ்கினர். கடைசிக் கட்டுமானம் அடித்துச் செல்லப்பட்டது. வெள்ளம் அந்த அரசியையும் அவர் நகரையும் மட்டுமல்ல, ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியை மூழ்கடித்தது. உலகம் முழுவதுமே வெள்ளத்தால் சூழப்பட்டிருக்கும். நல்ல வேளையாக இசுகந்தர் இல்காமிக்குப் புத்திமதி சொன்னவர்கள் மத்தியதரைக்கடல் தப்பிச் சென்று கிப்ரால்டர் நீரிணை வழியாகக் கடலில் கலக்க விடுமாறு அறிவுறுத்தினார்கள். இன்றும் ஆப்பிரிக்கக் கடற்கரை ஒட்டி மூழ்கிய நகரங்கள் உள்ளன என்பது துருக்கியரிடை வழங்கும் கதை.

## கிழக்கில் கிடைக்கும் கதைகள்

சுமேரியக் கடவுள்கள் மனித குலத்தை அழிக்க முடிவெடுத்தனர். பூசாரியாகவும் அரசனாகவும் விளங்கிய

www.t.me/DigitalNoolagam

ழியூசூத்ராவிடம் கடவுளால் ஏற்படப் போகும் வெள்ள அபாயம் பற்றி முன் கூட்டியே எச்சரித்தார். பெரியதோர் கப்பலைக் கட்டுமாறும் அதில் விலங்குகளையும் பறவைகளையும் ஏற்றிச் செல்லுமாறும் கடவுள் ஆணையிட்டார். சூறாவளிக் காற்றும் புயலும் வீசத் தொடங்கின. ஏழு நாள் இரவு பகலாக மழை கொட்டியது. கப்பலில் தப்பிச் சென்ற ழியூசூத்ரா அக்கப்பலில் இருந்த சாளரம் ஒன்றைத் திறந்தார். உதயசூரியனின் ஒளி வெள்ளம் கப்பலில் பாயந்தது. கதிரவக் கடவுளான உல்டு முன் மண்டியிட்டு வணங்கினார். கரை சேர்ந்தடைந்ததும் ஆட்டையும் எருதையும் பலியிட்டுக் கடவுள் என்லில் கடவுளச்சி அனு முன் வணங்கினார். விதைகளையும் விலங்கினத்தையும் மனித குலத்தையும் பாதுகாக்கச் ச்சாகாவரம் தரப்பட்டார். ஞாயிறு உதிக்கும் நாடான தில்மன்னுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

எகிப்தில் ஓலைகளில் எழுதப்பட்டு, சிதலமடைந்த சுவடிகளில் அரைகுறையாக ஒரு கதை உள்ளது. மக்கள் புரட்சி மனப்பான்மையினராக மாறியது அலம் என்ற கடவுளுக்குப் பிடிக்கவில்லை. முதலில் எங்கும் தண்ணீரே இருந்தது. தான் உருவாக்கிய எல்லாவற்றையும் அழித்து உலகைத் தண்ணீரிடமே திருப்பித் தர முடிவெடுத்தார். அலம் என்ற கடவுள் அவர் துணைவி ஓசிரிசுடன் நாகப் பாம்பு வடிவமெடுத்து எந்நாளும் வாழ்ந்தார்.

ஒவ்வொரு *1200* ஆண்டிலும் மூன்று முறை கடவுள்களுக்குச் சினம் மூளும். அளவுக்கதிகமான மக்கட் தொகைப் பெருக்கத்தால் இக்கோபம் ஏற்படும். முதலில் பிளேக் போன்ற கொள்ளை நோயை அனுப்புவார்கள். அடுத்து, பஞ்சத்தை மக்கள் மீது ஏவுவார்கள். இரண்டு முறையும் இத்தகு கொடுஞ்செயல்களில் ஈடுபடும் கடவுள்களுக்கு இலஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டுமாறு என்கி என்ற கடவுள் மனிதர்களுக்கு யோசனை சொல்லிப் பார்த்தார். மூன்றாவது முறை மற்ற கடவுள்களுக்குச் சினம் மூண்ட பொழுது என்கி எதுவும் தடுக்கவில்லை. மனித குலத்தையே வெள்ளத்தில் மூழ்கடித்து அழித்து விடுமாறு கூறிவிட்டார். அவர் மட்டும் பாதுகாப்பாகத் தப்பித்துச் செல்ல அட்டிராக சிசு மூலம் ஒரு படகைக் கமுக்கமாகக் கட்டுமாறு செய்திருந்தார். அப்படகில் ஆடுமாடுகள், காட்டு விலங்குகள், பறவைகளும் அட்டிராக சிசுவின் குடும்பமும் இருந்தன. அட்டிராகசிசு படகை மூடிச் சீல் வைத்தார். படகு கட்டியிருந்த கயிற்றை வெட்டி விட்டார். புயற்கடவுளான அடாடுக்குக் கடுக்கோபம் மூண்டது.

பகலை இருட்டாக்கி விட்டார். ஏழு நாள்கள் வெள்ளப் பெருக்குக்குப்பின் கடவுள்கள் தாங்கள் செய்த தவறுகளை

www.t.me/DigitalNoolagam

உணர்ந்தார்கள். அட்டிராபசிசு கடவுள்களுக்குக் காணிக்கை செலுத்தினார். ஈக்கள் கூட்டம் போல் கடவுள்கள் திரண்டார்கள். சிக்கலுக்குத் தீர்வாக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த மலடிப் பெண்களை என்கி என்ற கடவுள் உருவாக்கினார்.

**அசீரியத் தொன்மக் கதை:** என்லில் என்ற கடவுள் தலைமையில் இயங்கிய கடவுள் கூட்டம் மக்கள் தொகை மிகுந்து விட்டதால் மிகுந்ததைத் துடைத்தெறிய முடிவெடுத்தனர். ஆனால் ஈஆ என்ற கடவுள் உட்நாபிசுடிம் கனவில் தோன்றி நேரவுள்ள அபாயம் பற்றி முன் எச்சரிக்கை செய்தார். அவரும் சில தொழில் வினைஞரும் ஏழு அடுக்குப் படகு ஒன்றை மிகப் பிரமாண்டமாக ஒரு ஏக்கர் அளவு பரந்தும் விரிந்தும் இருக்குமாறு ஒரே கிழமைக்குள் கட்டி முடித்தார்கள். அவரும் அவர் குடும்பத்தாரும், கட்டுமான வினைஞரும் உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தின் விதையையும் அப்படகில் ஏற்றிக் கொண்டு பயணித்தனர். ஆறு நாள்கள் புயல் வீசியது. வெள்ளப் பெருக்கின் வீச்சு கண்டு கடவுளரே அஞ்சி நடுங்கினர். எல்லா மக்களும் இறந்தொழிந்து போகக்கண்ட கடவுள்கள் செய்த தவறுக்கு வருந்தினர். கண்ணீர் சிந்தினர். நிசூர் மலைச் சிகரம் தவிர எல்லாமும் நீரில் மூழ்கி இருந்தன. படகு அங்குப் போய்ச் சேர்ந்தது. ஏழு நாள்களுக்குப் பிறகு உட்நாபிசுடிம் புறா ஒன்றைப் பறக்க விட்டார். எங்குமே தரையிறங்க முடியாமல் அந்தப் புறா திரும்பி வந்தது. வேறொரு பறவைக்கும் இதே கதி. கடைசியாகப் போன காகம் திரும்பவில்லை. தண்ணீர் வற்றி வருகிறது, வடிந்து வருகிறது என உணர்ந்து கொண்டு மக்கள் மீண்டும் தோன்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டதை அறிந்து கொண்டார். அட்நாபிசுடிம் கடவுள்களுக்குக் காணிக்கை செலுத்தினார். கடவுள்கள் அவருக்கும் அவர் மனைவிக்கும் சாகா வரம் அளித்தார்கள் உலகு முடியும் வரை அவர்கள் வாழ்ந்தார்கள்.

**கல்தேயக் கதை!** பாபிலோன் நகரை ஆண்ட பத்தாவது அரசன் ழித்துரசு கனவில் தோன்றிய கடவுள் குரோனாசு தெய்சுஅசு மாதத்தின் 15 ஆவது நாள் பெருவெள்ளம் ஏற்படுமென முன்னெச்சரிக்கை செய்தார்.

அந்நாட்டு வரலாற்றை எழுதிச் சிப்பாரா மலையில் புதைத்து வைக்குமாறு கடவுள் குரோனோசு அறிவுரை செய்தார். வரலாற்று உணர்ச்சிமிக்க ஒரே கடவுளாக உலகத் தொன்மங்களில் இவர் தென்படுகிறார். மிகப் பெரிய கப்பல் ஒன்றைக் கட்டுமாறும் அக்கடவுள் யோசனை சொன்னார். அவனும் அவன் நண்பர்களும் உறவினர்களும் எல்லா வகை விலங்கினமும் அக்கப்பல் ஏறிச்

www.t.me/DigitalNoolagam

செல்லுமாறு கடவுள் சொன்னார். ழித்துரசு எங்குச் செல்வது என்று கேட்டான். "கடவுளிடம் செல். அதற்கு முன்னால் எல்லா மனிதர்க்கும் நன்மையே விளைக" என்று வேண்டுதல் செய் என்றாராம் அக்கடவுள்.

5×2 நீளக் கப்பலில் பயணித்தவர்கள் வெள்ளம் வடிந்ததும் பறவைகளை வெளியே பறக்க விட்டனர். அவற்றின் காலில் சேறும் சகதியுமாக அவை திரும்பி வரவே கரை அருகிருக்கிறது என அறிந்தனர். அர்மேனியாவில் உள்ள கேலர்சைரியன் மலை அருகே கப்பலைக் கொண்டு நிறுத்தினர். மனைவி மக்கள் மாலுமியுடன் கப்பலில் இருந்து கரையிறங்கி கடவுள்களுக்கு நன்றி கூறினார். பலி கொடுத்தார். அந்நால்வரும் கடவுளிடம் இட்டுச் செல்லப் பட்டனர். மற்றவர்களுக்கு அவர் குரல் கேட்டது. பயபக்தியோடு நடந்து கொள்ளுங்கள். என் கட்டளைகளைச் சிப்பாரா மலைக் குன்றில் கல்வெட்டுகளில் படித்திடுங்கள் என்று கூறி மாயமாய் மறைந்தனராம்.

ஃபொரேராசசு கூற்றுப்படி கடற்கோளுக்கு முற்பட்ட மூதாதையர்கள் முரடர்களாகவும், பக்தியற்றவர்களாகவும் இருந்தனர். இதில் ஒருவர் மட்டுமே விதிவிலக்காக விளங்கினார். அறிவாளியாகவும் கடவுள் மீது மிகுந்த பக்தியுடையவராகவும் விளங்கினார். அவர் பெயர் நோவா. சிரியாவில் அவர் வாழ்ந்தார். அவருடைய மூன்று மகன்களான செம், ழாபெட், இச்செம் மற்றும் அவர்களின் மனைவியர் திடியா, பண்டோரா, நோயிலாச மற்றும் நோயிஜிலா, நட்சத்திரங்கள் மூலம் வரப்போகும் பேரிடரை அவர்கள் அறிந்து கொண்டனர். ஒரு கலம் கட்டத் துவங்கினர். அது கட்டத்துவங்கி 78 ஆண்டுகள் கடந்த பிறகு கடல்களும் ஆறுகளும் அடியிலிருந்து வெடித்துப் பொங்கிப் பெருகின.

இடைவிடாப் பேய்மழை பன்னாள் பெய்தது. எல்லா மலைகளையும் நீர் மூழ்கடித்தது. ஒட்டுமொத்த மனித இனமே மூழ்கிப் போயிற்று. அந்தக் கப்பலில் ஏறித் தப்பித்த நோவாவும் அவர் குடும்பம் மட்டுமே மிஞ்சியது. அக்கப்பல் கென்டாயி மலையில் வந்து சேர்ந்தது. இன்றும் அக்கப்பலின் உடைந்த துகள்களைத் தீவினைகளிலிருந்து காப்பாற்றும் தாயத்து போல எடுத்துச் செல்கிறார்கள்.

**ஈப்ரூ!** மனித இனத்தின் கொடூரம் கண்டு அவ்வினத்தைப் பூண்டோடு அழிக்கக் கடவுள் உறுதி பூண்டார். நோவா நன்னெறி பிறழாமல் ஒழுக்கமுடன் வாழ்ந்தமையால் அவர் மீது கடவுளுக்கு அன்பு இருந்தது. 450×75×75 அடி நீள அகல உயரமுடைய கப்பல்

www.t.me/DigitalNoolagam

ஒன்றைக் கட்டுவிக்குமாறு நோவாவைக் கடவுள் பணித்தார். நோவா தன் குடும்பத்தவர் எண்மரையும் எல்லா வகை விலங்கினத்தையும் கப்பலில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்! நாற்பது நாள்கள் இரவும் பகலும் வெள்ளம் சொர்க்கத்திலிருந்து வந்தது. பாதாளத்தில் இருந்து பீறிட்டுக் கிளம்பியது. எல்லா உயர்ந்த மலைச் சிகரங்களும் மூழ்கும் வரை வெள்ளம் உயர்ந்து கொண்டே போனது. ஒவ்வொரு வாரம் ஒரு பறவையாகக் கப்பலில் இருந்து அனுப்பிப் பார்த்தார். மூன்றாவது வாரம் வெளியே பறந்த புறா ஆலிவ் இலையோடு திரும்பி வந்தது. வெள்ளம் ஏற்பட்டு ஓராண்டு 10 நாட்களுக்குப் பிறகு கப்பலில் இருந்த அனைவரும், அனைத்தும் வெளி வந்தனர். சில பறவைகளையும் விலங்குகளையும் கடவுளுக்குக் காணிக்கையாக நோவா அளித்தார். இதனால் மகிழ்ந்த கடவுள் இனி வெள்ளம் ஏற்படுத்தவோ எல்லா உயிர்களை அழிக்கவோ மாட்டேன் என்று சாசனமாக வானவில் மூலம் உலகுக்கு அறிவித்தார். விலங்குகள் கட்டுக் கடங்காமல் போயின. அதனால் உணவாகின. நோவாவும் அவர் குடும்பமும் உலகில் மக்களினம் பெருகுமாறு செய்யப் பணிக்கப்பட்டனர். நோவா ஒரு திராட்சைத் தோட்டம் பயிரிட்டார். அதிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒயினைப் பருகி அவரது கூடாரத்தில் நிர்வாணமாகப் படுத்துக் கிடந்தார். அவரது மகன் ஹாம் இதைக் கண்டு அவருடலை மூடுமாறு தம்பியரான செம் மற்றும் ஜாபெத்திடம் கூறினார். முகத்தைத் திருப்பிக் கொண்டு அவர்கள் உடலை மூடினர். விழித்தெழுந்த நோவாவுக்குக் கோபம் பீறிட்டது. ஹாம் மற்றும் அவனது சந்ததிகள் மீது சாபமிட்டார். மற்ற மகன்களை வாழ்த்தினார்.

பெருவெள்ளம் ஏற்படும் முன் ஒருமுறை அறுவடை செய்தாலே நாற்பது ஆண்டுகளுக்கு உணவு கிட்டியது. பிள்ளைகள் பிறக்க ஒன்பது மாதங்கள் காத்திருக்கத் தேவையில்லை. சில நாள்களிலேயே பிறந்தார்கள். பேசினார்கள். நடந்தார்கள். ஞாயிறையும் திங்களையும் மக்கள் ஆணையிட்டு வேலை வாங்கினார்கள். இதில் சில மனிதர்கள் பாவஞ்செய்யலானார்கள். அவர்களைத் தண்டிக்கும் முன் எச்சரிக்கை செய்ய விரும்பிய கடவுள் கருணையுடன் நோவா மூலம் பெருவெள்ளம் வருமுன் தீவழி துறந்து நல்வழி நாடுக என அறிவுரைத்துப் பார்த்தார். 120 ஆண்டுகள் நோவா நற்போதனை செய்தும் பயனில்லை. இறுதி எச்சரிக்கையாகக் கடவுள் ஒருவார கால அவகாசம் தந்தார். சூரியன் அந்த வாரம் தன் போக்கை மாற்றிக் கொண்டது. தீய மனிதர்கள் திருந்தவில்லை. நோவாவை எள்ளி நகையாடினார்கள். கப்பல் கட்டுவதைக் கிண்டலடித்தார்கள். ஒரு நூலில் இருந்து கப்பல்

www.t.me/DigitalNoolagam

கட்டும் கலையை நோவா அறிந்து கொண்டிருந்தார். இரசியேல் என்ற தேவதை உலக அறிவு அத்தனையுமடங்கிய நூல் ஒன்றை ஆதாமுக்கு அளித்திருந்தது. அதைப் படித்து விட்டுத்தான் நோவா கப்பல் கட்டும் வித்தையைக் கற்றுக் கொண்டார்.

நீலக்கற்களால் ஆன அந்நூலைத் தங்கப் பேழையில் வைத்துப் பாதுகாத்தார்.சூரியனும் நிலவும் அப்போது ஒளிதரவில்லை. வானிலிருந்து ஆண் நீரானது தரையிலிருந்த பெண் நீரைத்தேடி வந்ததால் பெருவெள்ளம் ஏற்பட்டது. வானிலிருந்து 2 நட்சத்திரங்களை நீக்கிவிட்டுக் கடவுள் ஏற்படுத்திய ஓட்டையால் மழை கொட்டியது. எல்லா விலங்குகளும் நோவாவின் படகிலேற முயன்றன. கதவருகே அவற்றை நிறுத்தி வரிசையாக ஏற்ற முயன்றார். 365 உயிரினங்களும் 32 வகைப் பறவையினமும் படகில் ஏற்றிக் கொள்ளப்பட்டன. நோவாவும் அவர் மனைவி நாமாவும் பிள்ளைகளும் படகில்ஏறிக் கொண்டனர். இணை இன்றிப் பொய்மை படகில் ஏற முயன்று திருப்பி அனுப்பப்பட்டது. பிறகு துரதிஷ்டம் அதற்கு இணையாக வர ஏற்றிக் கொள்ளப்பட்டது.

வெள்ளம் பெருகப் பெருகப் பாவிகள் அனைவரும் கப்பலின் கதவைத் தட்டலாயினர். ஆனால் கப்பலில் இருந்த காட்டு விலங்குகள் அவர்களை ஏற விடாமல் தடுத்தன. ஓராண்டுக்காலம் நோவாவின் படகு கடலில் தத்தளித்தது. விலங்குகளுக்கு உணவளிக்க நோவா பெரிதும் சிரமப்பட்டார். சிங்கம் ஒன்றுக்கு உணவூட்டுகையில் அதனால் தாக்கப்பட்டு அவர் முடமானார். இதனால் வாழ்நாள் முழுவதும் அவர் பாதிரியாராக முடியவில்லை. நோவாவின் படகு கடைசியாகப் புறா ஒன்றை அனுப்பி ஆழம் பார்த்தது. பறந்து சென்ற புறா ஜெருசலேம் மலையிலிருந்த ஆலிவ் இலைகளுடன் திரும்பி வந்தது. வெள்ளம் அந்தப் புனித நிலத்தை ஏதுஞ் செய்யாமல் விட்டு வைத்திருந்தது.

இசுலாமியக் கதைகளில் அல்லா நோவாவை அனுப்பி அல்லாவைத் தவிர வேறு யாருக்கும் பணிபுரிய வேண்டாமென அறிவுறுத்தச் சொன்னார். அவர்கள் செவி மடுக்கவில்லை. நோவாவைக் கிண்டல் செய்தார்கள். அல்லாவின் ஆணைப்படி நோவா ஒரு கப்பலைக் கட்டினார். தவறிழைத்தவர்களுக்காகத் தன்னிடம் நோவா வாதாடத் தேவையில்லை என்றார் அல்லா. காலப்போக்கில் வானிலிருந்து பொழியும் மழையிலும் நிலத்தடியில் இருந்து பீறிட்டு எழுகிற நீரிலும் அவர்கள் மூழ்கிப் போனார்கள். எல்லா வகை உயிரினங்களையும் இணைஇணையாகக் கப்பலில் நோவா ஏற்றினார். அவரது குடும்பத்தவர்களையும் அல்லா மீது

www.t.me/DigitalNoolagam

நம்பிக்கை வைத்தவர்களையும் ஏற்றிக் கொண்டார். பெரு வெள்ளம் ஏற்பட்டு நிலவுலகம் ஆள் உயரத்திற்கு நீரால் சூழப் பட்டது. நோவாவின் மகன் ஒருவன் தந்தை சொல்லை நம்பவில்லை. மலை மீதேறித் தப்பிப்பேன் என்று சென்றவன் மூழ்கிப் போனான். கப்பல் தத்தளித்துப் பேரலைகள் நடுவே நீந்திச் சென்றது. பூமி தண்ணீரை விழுங்குமாறும், வானம் தெளிவாகும் படியும் அல்லா ஆணையிட்டார். கப்பல் அல்ஜூதி துறைமுகத்தை அடைந்தது. தன் மகனுக்காக நோவா முறையிட்டார். அவன் தீயவன் உங்கள் குடும்பத்தவன் அல்லன் என்றார் அல்லா. நோவா மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அல்லா நோவாவை ஆசீர்வதித்து மீண்டெழும் நாடுகளுக்குச் செல்லப் பணித்தார்.

**பாரசீகக் கதை**

தொன்முதுகாலத்தில் தீமைகளின் பிறப்பிடமான அகிரிமன் என்ற துர்தேவதையால் படைக்கப்பட்ட கொடிய மிருகங்கள் உலகில் இருந்தன. திசுடார் எனப்படும் நட்சத்திர தேவதை மூன்று முறை பூமிக்கு வந்தாள். மனித உருவில், குதிரை வடிவில், காளை உருவில் வந்த அத்தேவதை ஒவ்வொரு முறையும் பத்து நாள் பகலிரவு இடையிடா மழை கொட்டச் செய்தாள். ஒரு சொட்டு நீர் ஒரு பெரிய பாத்திரத்தை நிரப்பியது. ஆளுயர வெள்ளம் உலகையே மூழ்கடித்தது. முதல் வெள்ளம் அந்தக் கொடிய மிருகங்களை அழித்தது. ஆனால் சில மிருகங்கள் பூமியிலிருந்து ஓட்டைகளில் சந்து பொந்துகளில் புகுந்து தப்பிக் கொண்டன.

திசுடார் தேவதை வெள்ளைக் குதிரை வடிவமெடுத்துக் கரும் புரவியாக உருமாற்றிக் கொண்டிருந்த அபோசா என்னும் தீயசக்தியுடன் போரிட்டாள். ஓமட்சு என்றும் கடவுள் மின்னலை ஏவி அந்த அரக்கனை வெடித்துச் சிதறுமாறு செய்தார். அப்போது அந்த அரக்கன் எழுப்பிய மரண ஓலம் இன்றும் புயலுடன் இடியாக ஒலித்துக் கொண்டுள்ளது. திசுடார் தேவதை நதிகளைப் பாய விட்டு அந்நீரால் பூமி மீது படிந்த கறையைக் கழுவி விட்டாள். இரண்டாவது பெருவெள்ளம் பூமியின் கறைகளைக் கழுவிய நீர் கடலுக்குச் சென்றதால் கடல் நீர் உப்பாயிற்று. பெருங்காற்று வீசி அந்தத் தண்ணீரைப் பூமியின் எல்லைக்கே தள்ளிச் சென்று சேர்த்தது. அதுவே "வோன்காசா" எனும் பெருங்கடலாகும்.

**சோராசுதிரியன்:** தெய்வீக வழிகாட்டுதலோடு யிமா என்னும் அரசன் உலகை 900 ஆண்டுகள் ஆண்டான். நோயில்லை, இறப்புமில்லை என்பதால் மக்கள் தொகை பெருகியது. எனவே 300 ஆண்டுகளுக்குப் பிறகு உலகை விரிவடையச் செய்ய வேண்டி வந்தது. படைப்புக் கடவுளான அகுரா மசுடா அளித்த தங்க

www.t.me/DigitalNoolagam

மோதிரமும் தங்க மூலாம் பூசிய கத்தியும் வைத்துக் கொண்டு உலகை விரிவடையச் செய்தான் யிமா. அடுத்த 600 ஆண்டுகள் கழித்து மீண்டும் உலகை விரிவடையச் செய்ய வேண்டி வந்தது. நேரவுள்ள அபாயம் பற்றி முன் எச்சரிக்கையைப் படைப்புக் கடவுள் யிமா என்ற அரசனுக்கு விடுத்தார். பனிப்பாறைகள் உருகும். பெரு வெள்ளம் பெருக்கெடுக்கும். ஒரு பெரிய கட்டடம் கட்டி அதில் பாதுகாப்பாக உலகமுழுதுமிருந்த உயிரினங்களில், ஆடுமாடுகளில், மனிதரில், நாய்களில், பறவைகளில் தாவரங்களில், உணவுத் தானியங்களில் சிறந்தவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கடவுளிட்ட எச்சரிக்கை ஏற்று அரசன் கோட்டை கட்டி அதனுள் அனைத்தையும் சேமித்துக் கோட்டையை மூடிக் கொண்டு மகிழ்ச்சியாக மக்களுடன் வாழ்ந்தார். ஒரு ஆண்டு ஒருநாள் போல அங்குக் கழிந்தது. இத்தனை வெள்ளக் கதைகளும் தமிழிலக்கியக் கடற்கோளும் ஆய்வுக்குரியவை.

www.t.me/DigitalNoolagam

# ஆப்பிரிக்கக் கண்டத்தில் வெள்ளக் கதைகள்

**காமரூன்:** பெண்ணொருத்தி மாவாட்டிக் கொண்டிருந்தாள். ஆடு ஒன்று அதனை நக்க வந்தது. விரட்டி அடித்தாள். திரும்பவும் அந்த ஆடு வந்தது. அதன் பசியடங்கும் வரை மாவைச் சாப்பிட விட்டாள். அதற்கு நன்றிக்கடனாக இன்று பெரு வெள்ளம் இவ்வூரைச் சூழும், நீயும் உன் உடன்பிறப்பும் எங்கேனும் ஓடிச் சென்று தப்பிப் பிழைத்துக் கொள்க என வருவது முன் உரைத்தது அந்த ஆடு. தங்களிடமிருந்த உடைமைகளுடன் உயிர் தப்பிய இருவரும் திரும்பிப் பார்க்கும் போது அவர்கள் வாழ்ந்த கிராமத்தையே வெள்ளம் சூழ்ந்துவிட்டிருந்தது. வெள்ளம் வடிந்த பிறகு அந்தப் பெண்ணும் அவள் சகோதரனும் பல ஆண்டுகள் வாழ்ந்தனர். திருமணம் செய்து கொள்ள வேற்று மனிதர் எவருமே இல்லை. அப்போது அந்த ஆடு மீண்டும் வந்தது. அவர்களிருவருமே திருமணம் செய்து கொள்ளலாம் என்று யோசனை கூறியது அந்த ஆடு! ஆயின் ஒரு நிபந்தனை விதித்தது. அவர்கள் வீட்டுக் கூரை மீது அடிப்பாகம் உடைந்த சட்டியை எப்பொழுதும் பிறர் பார்க்குமாறு வைத்திருக்கச் சொன்னது. இதன் மூலம் இவ்விருவரும் உறவினர்கள் எனப் பிறர் அறிய முடியுமாம்.

**கிழக்கு ஆப்பிரிக்கா:** நேர்மையும் ஒழுக்கமும் நன்னடத்தையும் கொண்ட தும்பைநாட்டு என்னும் மனிதன் நெபாண்டே என்ற மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தான். ஒசோமா, பர்டினரோ, பார்மா என்பது அந்த மூன்று பிள்ளைகளின் பெயராகும்.

அவன் சகோதரனான லென்ஞ்சமி இறந்தான். அப்போதைய வழக்கப்படி தும்பைநாட்டு விதவையான சகோதரன் மனைவி நகாபா - லொகுன்சாவை மணந்து கொண்டான். அவள் மூலமாகவும் அவனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அன்றாடம் மாலை வேளைகளில் அவளுக்குப் பிறந்த மூன்று குழந்தைகளுக்குப் பால் குடிக்கத் தருவது ஒரு சிக்கலாக வளரவே, அவள் தனிக் குடித்தனம் துவக்கினாள்.

அக்காலத்தில் உலகில் மக்கட் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருந்தது. மக்கள் பாவஞ்செய்தனர். கடவுளைப் பற்றிக் கவலைப்

www.t.me/DigitalNoolagam

படவில்லை. ஆனால் கொலை மட்டும் அவர்கள் செய்யாமல் இருந்தார்கள். கடைசியாக நம்பிசா என்பவன் சினங்கொண்டு சுவாஜ் என்பவன் தலை மீது அடிக்கவே முதல் கொலை நடந்து விட்டது. கடவுளுக்கு இதனால் சினம் பொங்கியது. ஒட்டு மொத்த மனித குலத்தை அழித்து விட உறுதி பூண்டார். தும்பைநாட்டு மீது மட்டும் கடவுள் கருணை காட்ட விரும்பினார்.

மரத்தாலான மூடிய மிதக்கும் படகு ஒன்றைக் கட்டுவிக்குமாறும் தும்பைநாட்டும் அவளிரு மனைவியரும் ஆறு குழந்தைகளும் ஒவ்வொரு வகையிலும் ஒரு மிருகத்துடனும் அந்தப் படகில் ஏறிக் கொள்ளக் கடவுள் ஆணையிட்டார். தேவைப்படும் உணவுகளுடன் அனைவரும் ஏறிக் கொண்டு மூடிக் கொண்டனர். அப்போது பெரு வெள்ளத்தைக் கடவுள் ஏற்படுத்தினார். மனித குலம் முழுவதும் நீரில் மூழ்கி இறந்தது. படகு நிலைதடுமாறிப் பல்வேறு திக்குகளில் அலைந்து திரிந்தது. உணவுப் பொருளும் தீர்ந்து போனது. அவ்வமயம் மழை ஓய்ந்தது. வெளியே நிலைமையை அறிந்து கொள்ளத் தும்பை நாட்டு புறா ஒன்றைப் பறக்க விட்டார். அது பறந்து திரிந்து களைத்துப் படகுக்கே திரும்பியது. சில கிழமைகளுக்குப் பிறகு கழுகு ஒன்றைப் பறக்க விட்டார். அதன் காலில் அம்பு ஒன்றைக் கட்டி அனுப்பினார். கழுகு திரும்பியது. அதன் காலில் அம்பு இல்லை. எங்காவது கழுகு தரையிறங்கி இருக்கக் கூடுமென யூகித்துக் கொண்டார். தண்ணீர் வடியத் தொடங்கியது. படகு தரை தட்டியது. மலைச்சரிவில் கரை இறங்கினார்கள். வானில் 4 வானவில்கள் தோன்றின. கடவுளின் சினம் தணிந்து விட்டதை அவை உறுதி செய்தன.

**கோமிலிலோ நந்தி:** மின்னல் தேவதை இலெட் மனித உருவில் பூமிக்கு வாழ வந்தாள். திந்தபெட் என்னும் மலையுச்சியில் இருந்த குகையில் தங்கினாள். அப்போது பெருமழை கொட்டத் தொடங்கியது. மலையை ஒட்டியுள்ள காடுகளில் வாழ்ந்த வேடுவர் நீரில் மூழ்கி இறக்கலாயினர். இம்மழை ஏற்பட்ட காரணத்தைத் தேடிய உயிர் பிழைத்திருந்த சில வேடர்கள் இலெட்டைக் கண்டு அவன் மீது நஞ்சு தடவிய அம்புகளை எய்தனர். அடிபட்டது ஆயின் இலெட் தப்பினார். அண்டை நாடொன்றுக்கு ஓடினார். அங்கு இறந்தார். உடனே பெருமழை ஓய்ந்தது.

### குவாயா (விக்டோரியா ஏரி)

ஒரு மனிதனும் அவன் மனைவியும் கடலைத் தங்கள் கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தனர். தங்கள் குடிசைக்குள் இருந்த மற்ற கொள்கலங்களில் நீர் நிரப்பவே இவ்வாறு செய்தனர்.

www.t.me/DigitalNoolagam

அந்தக் கமண்டலத்தில் தங்கள் மூதாதையர் இருப்பதாகவும் அதைத் தொடாமல் இருக்குமாறும் தங்கள் மருமகளுக்குச் சொல்லி வைத்தனர். ஆர்வம் மீதூரப் பெற்று அவள் அக்கமண்டலத்தைத் தொட்டாள். அது உடைந்து சிதறியது. பெருவெள்ளம் பெருக்கெடுத்து அனைத்தையும் மூழ்கடித்தது.

**தென்மேற்கு தான்சானியா (உருக்குவா பகுதி) :** ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்தன. இரு மனிதர்களிடம் அனைத்து வகை விதைகளையும் விலங்குகளையும் எடுத்துக் கொண்டு கப்பல் ஏறித் தப்பிக்குமாறு கடவுள் கூறினார். மலைகளையும் மூழ்கடித்து வெள்ளம் உயர்ந்தது. தண்ணீர் வடிந்து விட்டதா என்று அறியக் கப்பலில் இருந்து அனுப்பப்பட்ட புறா திரும்பி வந்தது. சில நாள் கழித்து அனுப்பப்பட்ட வல்லூறு திரும்பவில்லை. தண்ணீர் வடிந்து விட்டது அறிந்து விலங்குகளுடனும் விதைகளுடனும் அவ்விருவரும் கரை இறங்கினர்.

**பிக்மி:** நீர் ஓடும் ஓசையை ஒரு மரத்தின் மீதிருந்த பச்சோந்தி கேட்டது. அப்போது உலகில் எங்கும் தண்ணீர் இல்லை. மரத்தை அந்தப் பச்சோந்தி பிளந்தது. அதிலிருந்து பீச்சியடித்த பெருவெள்ளம் உலகெங்கும் பரவிற்று. தண்ணீரில் இருந்து உலகின் முதல் மனித இணை தோன்றியது.

**வடக்கு காங்கோ: அகாபுவா**

ஒரு கிழவி தண்ணீரைப் பதுக்கி வைத்தாள். தண்ணீர் கேட்டவர்களைக் கொன்று குவித்தாள். மபா என்ற வீரன் அக்கிழவியைக் கொன்று போட்டான். அவள் இறந்ததும் பெரு வெள்ளமாகப் பீறிட்டுக் கிளம்பிய தண்ணீர் எல்லாவற்றையும் அடித்துச் சென்றது. மபாவும் அடித்துச் செல்லப்பட்டான். எப்படியோ மரக்கிளை ஒன்றைப்பற்றி உச்சிக்குச் சென்று தப்பினான்.

**கென்யா (கிக்குயா)** ஒரு அழகான பெண். ஒரே ஒரு நிபந்தனையுடன் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டாள். அவள் குடும்பம் பற்றி எதுவுமே கேட்கக் கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. அவள் மணம் நடந்தது. மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். பிள்ளை பெற்றுக் கொண்டார்கள். மூத்த மகன் வயதடைந்ததும் நடக்கும் ஞானக் குளியல் நிகழ்ச்சியில் அவளது குடும்பத்தினர் ஏன் கலந்து கொள்ளவில்லை எனக் கணவன் கேட்டான். அதைக் கேட்டதும் அந்தப் பெண் வானில் தூக்கி யெறியப்பட்டாள். அவள் தொப்பென்று கீழே விழுந்ததும் பூமியில் 7 மைல் ஆழமுள்ள பள்ளம் ஏற்பட்டது. அவள் அலறிய அலறலில் ஆவிகளான அவன் மூதாதையர் கென்யா மலையிலிருந்து

www.t.me/DigitalNoolagam

வந்தனர். அவர்கள் வரவர இடியும் புயலும் மழையும் வலுத்தன. உணவு, ஆடுமாடுகள், பீர் என எல்லாமும் கொண்டு வந்தார்கள். அங்கிருந்த மனிதர்கள் மலைக்குகைகளில் பதுங்கிக் கொண்டார்கள். பீர் வெள்ளமாகப் பாய்ந்தது. ஏரியாகத் தேங்கிற்று. ஆவிகள் திரும்பும் போது தம்பதிகளையும் அவர்தம் பிள்ளைகளையும் கென்யா மலைக்கு இட்டுச் சென்று விட்டன.

**மேற்கு ஜாரே (Zaire) :** பகோங்கோ: உடம்பெங்கும் புண்களும் கொப்புளங்களும் உள்ள ஒரு மூதாட்டி சோனான்மென்சி நகருக்கு வந்து உணவுக்காக அலைந்தாள். எல்லாரும் உணவில்லை என்று துரத்திய நிலையில் கடைசியாக ஒரு வீட்டில் அவளுக்கு உணவு கிடைத்தது. உணவுண்டு பசியாறிய பின் அந்த வீட்டை விட்டுக் கிளம்புமுன் கிழவி இந்த ஊர் சபிக்கபட்ட ஊர். இவ்வூர் அழியும். இங்கு இருக்காதீர்கள் என்னுடன் வாருங்கள். நழாம்பி இந்த ஊரை அழித்து விடுவானெனச் சொன்னாள். அவர்கள் அனைவரும் அவ்வூர் விட்டகன்று சென்ற பின் இரவு பெருமழை கொட்டியது. அந்தப் பள்ளத்தாக்கே ஏரியாக நிரம்பியது. அவ்வூரின் மக்கள் அனைவரும் நீரில் அமிழ்ந்து இறந்து போனார்கள்.

**தென் ஜாரே (பச்சோச்குவி)** மொயினா மொனாங்கா என்ற தலைவி ஒரு கிராமத்தில் அடைக்கலமும் உணவும் நாடினாள். அவை அவளுக்கு மறுக்கப்பட்டன. கிராமத்தவர்களின் சுயநலப் போக்குக் கண்டு அவள் சபித்தாள். மெதுவாக அவள் மந்திரம் சொல்லத் துவங்கினாள். அவள் சொல்லி முடிக்குமுன் ஊரைப் பூமி விழுங்கியது. அங்கு உருவாகிய பள்ளத்தில் தண்ணீர் பாய்ந்து இப்போதுள்ள டிலோலோ ஏரி உருவாயிற்று.

**கீழ் காங்கோ:** சூரியன் ஒருமுறை நிலவைச் சந்தித்தது. நிலவின் ஒளியை மங்க வைக்க அதன் மீது கதிரவன் சேற்றை வீசியது. அப்போது பெருவெள்ளம் ஏற்பட்டிருந்த சமயம். அதில் எல்லா மனிதர்களும் குரங்குகளாக மாறிப் போனார்கள். இப்போதுள்ள மனித இனம் அதற்குப் பின்னர்ப் படைக்கப்பட்டது.

**பசோங்கே:** கடவுளின் பேத்தியான நகோல் காக்சேவை அடைய எல்லா மிருகங்களும் போட்டியிட்டன. வரிக்குதிரை மட்டுமே அவளை வயப்படுத்த முடிந்தது. அவளை வேலை செய்ய விட மாட்டேன் என அப்போது வரிக்குதிரை அளித்த வாக்குறுதியை மீறியது. அவள் கால் நீட்டி உட்கார்ந்தாள். அவள் கால்களில் இருந்து கிளம்பிய வெள்ளம் நிலத்தை மூழ்கடித்தது. அதில் நகோலும் மூழ்கி இறந்தாள்.

www.t.me/DigitalNoolagam

**தென்கிழக்கு ஜாரே (காங்கோ நதி) :** ஒரு மூதாட்டி அவள் உடலில் இருந்த புண்களை எவன் உறிஞ்சுகிறானோ அவனுக்கு மட்டுமே குடிநீர் கொடுப்பாள். ஒரு மனிதன் அவ்வாறு செய்ய முற்பட்டான். வெள்ளம் பெருக்கெடுத்தது. எல்லாரையும் ஏறக்குறைய மூழ்கடித்தது. தனக்கு இடப்பட்ட அருவெறுக்கத்தக்க பணியைத் தொடர்ந்து அவன் ஆற்றினான். வெள்ளம் நின்றது.

**தென்கிழக்கு நைசீரியா (யொருபா) :** இலா என்ற கடவுள் பூமியில் வாழ வெறுப்புற்று ஒபடாலா என்பவளை இட்டுக் கொண்டு சென்று விட்டது. அவள் மொழிபெயர்ப்பு வேலை செய்யாமல் போனதால் மற்ற கடவுளுக்கு மனித இனத்தின் தேவைகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. ஒலாகுன் என்ற கடவுளுக்கு இதனால் கோபம் வந்தது. பெரு வெள்ளம் ஏற்படுத்தி அனைவரையும் அழித்தார்.

**நைசீரியா (எஃபிக் கிபிபையோ):** கதிரவனும் நிலவும் கணவன் மனைவியர். அவர்களுக்கு நெருங்கிய நண்பன் வெள்ளம். அவ்விணையர் தங்களில்லம் வருமாறு வெள்ளத்தைப் பலமுறை அழைத்தனர். உங்கள் இல்லம் சிறியதாக உள்ளது என வெள்ளம் வர மறுத்தது. இதற்காகக் கதிரவனும் நிலாவும் மிகப்பெரிய வீட்டைக் கட்டினார்கள். இப்போது அவர்கள் அழைப்பை வெள்ளத்தால் தட்ட முடியவில்லை. வீட்டு வாயிலருகே வந்த வெள்ளம் உள்ளே வரலாமா? என்று கேட்டது. உள்ளே வந்தது வெள்ளம். வீடு முழங்கால் அளவு தண்ணீரால் நிரம்பியது. இதற்குப் பிறகும் தான் வர வேண்டுமா என வெள்ளம் கேட்டது. வருக! வருக என்றனர் கணவனும் மனைவியும். ஒவ்வொரு முறை வெள்ளம் வரும்போதும் புதிய உறவினர்களைக் கொண்டு வந்தது. மீனையும் கடல் விலங்குகளையும் அவ்வாறு கொண்டு வந்து சேர்த்தது. இதற்குள் வீட்டின் கூரையைத் தொடுமளவு வீட்டில் நீர் நிரம்பி இருந்தது. இதனால் கதிரவனும் நிலவும் கூரை மீதேறிக் கொண்டனர். வெள்ளம் உயர்ந்து கொண்டே போனது. வீட்டையும் மூழ்கடித்தது. இதனால் கதிரவனும் நிலவும் வான்வெளியில் வீடு கட்டிக் கொண்டு அங்குக் குடிபெயர்ந்தனர்.

**நைசீரியா (எகோய்):** முதல் மனிதனான எடிம் நீயும் அவன் மனைவி எசாவும் வானிலிருந்து மண்ணுலகு வந்தவர்கள். அப்போது நிலத்தில் நீரே இல்லை. எனவே ஒபாசி என்ற கடவுளிடம் நீர் தருக என வேண்டினார் எடிம்நீ. ஏழு கற்கள் அடங்கிய பெட்டியைக் கடவுள் அவரிடம் தந்தார். பூமியில் இருந்த சிறிய ஓட்டை ஒன்றில் ஒரு கல்லைப் போட்டதும் தண்ணீர் பீறிட்டுக் கிளம்பிப் பெரியதோர் ஏரியாக நிரம்பியது.

www.t.me/DigitalNoolagam

பிறகு ஏழு ஆண் பிள்ளைகளும் எட்டுப் பெண் பிள்ளைகளும் பிறந்தனர். பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் திருமணமாகி அவர்களுக்கும் பிள்ளைப் பேறு கிடைத்த பிறகு எடிம்நீ ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு ஆறு அல்லது ஏரியைப் பரிசாக வழங்கினார்.

சரியாக வேட்டையாடத் தெரியாத, வேட்டையில் கிடைக்கும் இறைச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் வாழ்ந்த மூன்று மகன்களுக்குக் கொடுத்த நதிகளைத் திரும்ப எடுத்துக்கொண்டார். மகன்கள் மன்றாடிக் கேட்கவே திரும்பவும் அவர்களுக்கே தந்தார். பேரப் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் அவர்கள் தங்களுக்கென வீடுகளைக் கட்டிக் கொண்டனர். எல்லாரையும் அழைத்த எடிம்நீ தன் பேரப்பிள்ளைகளைப் பார்த்து அவர்களின் பெற்றோர்களுக்குரிய பங்கான ஆறுகளில் இருந்து ஏழு கற்களை ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றைக் கொண்டு ஆறுகளுக்கிடையே ஆறு இல்லாத இடங்களில் அந்தக் கற்களை நட்டால் புதிய நீரோடைகள் புறப்படும் என்று அறிவுறுத்தினார். பேராசைக்காரனான ஒரு பேரன் கூடை நிறையக் கற்களைச் சேகரித்து ஒரே இடத்தில் கொட்டினான். தண்ணீர் பீச்சியடித்தது. அவனது பண்ணைகளை மூழ்கடித்து. உலகையே விழுங்க வேகம் கூட்டியது. அனைவரும் எடிம்நீயிடம் ஓடினார்கள். அவர் கடவுளான ஒபாசியிடம் மன்றாடினார். கடவுள் வெள்ளத்தை நிறுத்தினார். ஆனால் சொற்பிறழ்ந்த பேரனின் பண்ணை மட்டும் நீர் நிரம்பிய ஏரியாகவே இருக்கட்டும் என்றார். எல்லா நதிகளுக்கும் ஓடைகளுக்கும் எடிம்நீ பெயர் சூட்டினார். மண்ணுலகிற்குத் தண்ணீர் கொண்டு வந்த தன்னை மறவாதீர் என வேண்டினார். இரண்டு நாள் கழித்து அவர் இறந்து போனார்.

**ஐவரி கோகூட்: மண்டிங்கோ:** வள்ளல் குணமுடைய ஒருவன் தன்னிடமிருந்த அத்தனையும் விலங்குகளுக்காகச் செலவிட்டான். இதனால் அவன் குடும்பம் அவனை விட்டகன்றது. யாரென்று அடையாளம் தெரியாமலேயே தன்னிடமிருந்த கடைசி உணவைக் கடவுளான குவெண்டேவுக்கு அளித்தான். கடவுள் பதிலுக்கு மூன்று கைப்பிடி மாவு அவனுக்களித்தார். அது விளைச்சலைப் பெருக்கி அளவில்லாச் செல்வத்தை அளித்தது. அந்த இடத்தை விட்டு அகன்று வேறிடம் செல்லுமாறு கடவுள் அவனுக்கு அறிவுறுத்தினார். தன்னலமிக்க அவனுடைய அண்டை அயலாரை அழித்தொழிக்கப் பெருமழை பெய்யச் செய்தார். அச்செல்வந்தனின் பிறங்கடைகளே இன்றைய மனித குலத்தவராவர்.

www.t.me/DigitalNoolagam

## ஆசியாவில் பெருவெள்ளக் கதைகள்

**வோகுல்:** ஏழு ஆண்டுகள் கடும் வறட்சிக்குப் பின் மூதாட்டி கேட்டாள்: மழை வேறெங்கோ சென்று விட்டதே நாம் எவ்வாறு நம்மைக் காத்துக் கொள்ளப் போகிறோம் என்று! மூத்தோன் மற்ற அரசர்களிடம் படகு ஒன்றைக் கட்டுவித்துக் கொள்ளுங்கள். அதில் ஏழு நாள்களுக்குத் தேவையான உணவை ஏற்றிச் செல்லுங்கள் என்று சொன்னான். வெள்ளம் வந்தபோது அத்தகு முன்னேற்பாடு களைச் செய்யாதார் அழிந்து போயினர். ஏழு நாள்களுக்குப் பிறகு தண்ணீர் வடிந்தது. ஆனால் எல்லாத் தாவரமும் விலங்கினமும் மீனும் கூட முற்றிலும் அழிந்தன. பசியின் உச்சக் கட்டத்தை எட்டிய தப்பிப் பிழைத்தவர்கள் பெருங்கடவுளான நுமி தரோமிடம் வேண்டுதல் செய்தனர். அவர் எல்லா உயிர்களையும் மீண்டும் உயிர்ப்பித்தார்.

**வடக்கு சைபீரியா:** பெரு வெள்ளத்தில் ஒரு படகில் இருந்த ஏழு பேர் காப்பாற்றப்பட்டனர். வெள்ளம் வடிந்ததும் கடும் பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டன. பெரிய பள்ளம் வெட்டினார்கள். அதில் நீர் கிட்டியது. ஆயினும் ஒரு இளைஞனும் பெண்ணும் தவிர்த்து ஏனையோர் பசியால் இறந்தனர். பூமியின் பொந்துகளில் இருந்து வெளிவந்த எலியைப் பிடித்துத் தின்று பசியாறிக் கொண்டனர். இத்தம்பதியிடமிருந்தே மனித சமுதாயம் உற்பத்தி ஆயிற்று.

**வடக்கு மத்திய சைபீரியா:** ஏழு நாள்கள் வெள்ளம். நீர் உயர்ந்து கொண்டே போனது. மிதக்கும் மரக்கட்டைகள் மீதேறிச் சில மனிதர்களும் விலங்குகளும் தப்பினர். வடதிசையில் இருந்து வாடைக்காற்று பலமாக வீசியது. ஆளுக்கொரு திசையாக அடித்துச் செல்லப்பட்டனர். இதன் காரணமாகவே மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுவோராயினர்.

### காம்சாடாலே (வடகிழக்கு சைபீரியா)

உலகின் ஆரம்பக் காலக் கட்டத்தில் எல்லா நிலமும் மூழ்கின. மரங்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்ட கட்டுமரம் மீதேறிச் சிலர் உயிர் தப்பினர். பாறாங்கல்லைக் கயிறால் கட்டித் தண்ணீரில் தள்ளிக் கட்டுமரத்திற்கு நங்கூரம் போலப் பயன்படுத்தினார்கள். மலைமீது ஏறி வெள்ளம் வடிந்ததும் வாழலானார்கள்.

www.t.me/DigitalNoolagam

**மத்திய ஆசியா** (Altaic)

டெங்கை கடலே ஒரு காலத்தில் பூமியின் தலைவனாக இருந்தது. அதனை நாமா என்ற நல்லரசன் ஆண்டான். அவனுக்கு மூன்று பிள்ளைகள். சோகுன்-உல், சார்-உல், பாலிக்சு ஆகியோராவார். உல்கர் என்றும் கடவுள் ஒரு படகைக் கட்டுமாறு நாமாவுக்கு முன்னறிவிப்புச் செய்தது. கண் பார்வையில் பழுது காரணமாக அவர் தானே கட்டாமல், தன் மூன்று மகன்களைக் கொண்டு கட்டுவித்தார். ஒரு மலை உச்சியில் அந்தப் படகு கட்டப்பட்டது. படகின் பக்கவாட்டில் நீரின் ஆழத்தை அளந்தறிய 80 அடி நீளக் கம்பிகள் தொங்கவிடப்பட்டன. தண்ணீர் மட்டம் உயர உயர அதிலிருந்து தப்பிட வந்த விலங்கினங்களுடனும் தன் குடும்பத்தாருடனும் நாமா அந்தப் படகில் ஏறிக் கொண்டார். ஏழு நாட்களுக்குப் பிறகு மலை உச்சியில் படகின் பக்கவாட்டில் தொங்கவிட்டுத் பூமியில் புதைக்கப்பட்டிருந்த கம்பிகள் பிடுங்கிக் கொண்டன. தண்ணீரின் ஆழம் 80 அடியைத் தாண்டி விட்டதென நாமா உணர்ந்தார். ஏழு நாட்கள் மீண்டும் கழிந்தன. தன் மூத்த மகனை அழைத்து படகின் மூடிய சாளரங்களை திறந்து வெளியே பார்க்குமாறு சொன்னார். மலைச்சிகரங்கள் மட்டுமே தென்பட்டன. மீண்டும் சரியாகப் பார்க்கச் சொன்னார். இப்போது வானும் நீரும் தெரிந்தன. எட்டு மலைகள் அடங்கிய இடைவெளியில் படகு சென்று நின்றது. அடுத்தடுத்த நாட்களில் படகில் இருந்த பறவையினங்களில் இருந்து காகம், புறா உள்ளிட்டு ஒவ்வொன்றாக வெளியே பறக்க விட்டார். பறந்து சென்றவை படகுக்குத் திரும்பவில்லை. நான்காவது நாள் சென்ற புறா மட்டும் திரும்பி வந்து இதற்கு முன் பறந்து சென்ற பறவைகள் திரும்பாத மர்மத்தை உடைத்தது. ஆங்காங்கு இறந்து கிடக்கும் குதிரை, மான், நாய் போன்ற விலங்குகளின் மாமிசத்தைப் புசித்துப் பசியாறிடவே அப்பறவைகள் படகுக்குத் திரும்ப வரவில்லை. அவைகளை நாமா சபித்தார். நாமாவுக்கு மிகவும் வயதாகி விடவே அவன் மனைவி அதுகாறும் நாமா பாதுகாத்த மனிதர்களையும் விலங்குகளையும் கொன்று அவை வேறுலகம் செல்ல உதவுமாறு நாமாவை நச்சரித்தாள்.

இதனால் அடுத்த உலகும் நாமாவின் கட்டுப்பாட்டில் வரும் என்று அவர் மனைவி நினைத்தாள். நாமாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சோசன் - உல் தன் தாயை வெளிப்படையாக எதிர்க்க விரும்பவில்லை. மறைபொருளாகத் தந்தைக்குத் தான் கண்ட காட்சி ஒன்றைச் சொன்னான். கருமையும் நீலமும் கலந்த வண்ணங் கொண்ட மாடு ஒன்று மனிதனை மேய்ந்ததைத் தான் கண்டதாகவும் மனிதனின் கால்களை மட்டுமே

www.t.me/DigitalNoolagam

பார்க்க முடிந்ததாகவும் கதை விட்டான். உட்பொருள் உணர்ந்து கொண்ட நாமா வாளெடுத்து மனைவியை இருகூறாக வெட்டி வீழ்த்தினான். இறுதியாக நாமா சொர்க்கம் சென்றார். போகும் போது மகன் சோசன் உல்லையும் இட்டுச் சென்று வானில் மின்னும் ஐந்து நட்சத்திரங்களாக அவனை மாற்றி விட்டார்.

**வடக்கு மங்கோலியா: (துவினியன்)** உலகைத் தாங்கிக் கொண்டிருந்த இராட்சத தவளை (அ) முதலை இலேசாக அசைந்ததும் கடல்கள் நிலவுலகை நீரால் மூழ்கடித்தன. இப்படி நடக்குமென முன்கூட்டியே யூகித்திருந்த முதியவன் ஒருவன் இரும்பால் கட்டப்பட்ட மிதவைக்கலன் ஒன்று கட்டி வைத்திருந்தான். அதில் தன் குடும்பத்துடன் ஏறி உயிர் தப்பிப் பிழைத்தான். வெள்ளம் வடிந்ததும் நெடுமரங்கள் நிறைந்த பெருங்காடு ஒன்றருகே படகு நின்றது. இன்றும் அது அங்கேயே உள்ளது. வெள்ளத்திற்குப் பிறகு கடவுளான கெசர் - திசிங்கீசு- கெய்ரா- கான் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் படைத்தார். படைத்த மக்களுக்குப் பல திறமைகளைக் கற்பித்தார். அவற்றுள் முதன்மையானது நல்ல மது தயாரிக்கும் முறையாகும்.

**மங்கோலியா:** நல்ல மனமுள்ள வேட்டைக்காரனான ஹலியூ வல்லூறு ஒன்றிடமிருந்து வெண்ணிறப் பாம்பு ஒன்றைக் காப்பாற்றினார். அடுத்த நாள் அதே பாம்பைப் பெரும் பாம்புக் கூட்டத் திரளுடன் பார்த்தார். அசுர அரசனின் மகள் தான் என்றும் தன் உயிரைக் காத்த வேடனுக்கு வெகுமதி அளிக்க விரும்புவதாகவும் அப்பாம்பு கூறிற்று.

அசுர அரசன் என்ன வெகுமதி வேண்டுமெனக் கேட்டால் தன் தந்தையாகிய அவ்வரசனிடம் அவன் வாயில் வைத்திருக்கும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைக் கேட்குமாறு பாம்பு வேடனுக்கு ஆலோசனை வழங்கியது. அந்தக் கல் கைவசமிருந்தால் வேடனுக்கு விலங்குகள் பேசும்மொழியெல்லாம் விளங்கி விடும். ஆயின் அதைப் பற்றிக் கமுக்கமாக வைத்திராமல் பிறருக்குச் சொல்லி விட்டால் அவன் கல்லாக மாறி விடுவான் என அப்பாம்பு பகர்ந்தது. ஹலியூ அசுர அரசனிடம் சென்றான். அரசன் தருவதாகச் சொன்ன அனைத்துக் கருவூலங்களையும் வேண்டாமென மறுத்தான். இந்தக் கல்லே வேண்டுமென்று கேட்டுப் பெற்றான். சில ஆண்டுகள் கழித்து ஹலியூ பறவைகள் தமக்குள் பேசிக் கொண்டதை ஒட்டுக் கேட்டான். அடுத்தநாள் மலை வெடிக்கும் என்றும் அதிலிருந்து பீறிடும் பெருவெள்ளம் நிலவுலகை மூழ்கடிக்குமென அவை பேசிக் கொண்டன. தன் சுற்றமும் நட்பும் காப்பாற்றும் எண்ணமுடன் அவர்களை எச்சரிக்க விரைந்தான்.

www.t.me/DigitalNoolagam

ஆயினும் அவன் கூறியதை எவரும் நம்பவில்லை. அவர்களை நம்ப வைப்பதற்காக எப்படி வெள்ளம் வருமென எங்கிருந்து தான் அறிந்து கொண்டேன் என்பது முதல் முழுமையான கதையை சொல்லி விட்டான். கதை சொல்லி முடித்ததும் அவன் கல்லாக மாறிப் போனான். இதைக் கண்டு அஞ்சிய கிராம மக்கள் அங்கிருந்து ஓட்டமெடுத்தனர். அடுத்தநாள் இரவு முழுவதும் மழை கொட்டியது. மலை வெடித்தது. பெருவெள்ளமாக நீர் பெருக்கெடுத்தது. எல்லாம் ஓய்ந்து மக்கள் மீண்டும் அங்குத் திரும்பிய போது ஹலீயூவை கல்வடிவில் கண்டார்கள். அதை மலை உச்சியில் கொண்டுபோய் வைத்தார்கள். பல தலைமுறைகள் தங்களுக்காகத் தன்னையே தியாகஞ் செய்த ஹலியூவுக்கு நன்றிக் கடனாகப் பலிகொடுத்துப் பூசைகள் நடத்தினார்கள்.

**கிழக்கு சைபீரியா : (பரியாத்)** கடவுளான பர்க்கான் மிகப் பெரிய கப்பல் ஒன்றைக் கட்டுமாறு மனிதனிடம் கேட்டுக் கொண்டார். இதற்காகப் பல நாள்கள் காடுகளில் மனிதன் வேலை செய்தான். மனைவிக்குக் கூட உண்மை சொல்லாமல் காடுகளில் மரம் வெட்டுவதாகச் சொல்லி வைத்திருந்தான்.

தீய சக்தியான ஹிக்கூர், அவன் மனைவியிடம் கப்பல் கட்டப்படுவதையும் அது விரைவில் அணியமாகிடும் என்பதையும் உளறி விட்டது. கப்பல் தயாரானது. அவள் ஏறி வர மறுக்கவே, கணவன் அறைந்தான். என்னை ஏன் அறைந்தாய்? என ஹிக்கூரை எதிர்த்து அவள் கேள்வி கேட்டாள். தீய சக்தி சொல்லித் தந்தபடி அவள் நடந்து கொண்டதால் அவளுடன் கப்பலில் தீய சக்தியும் ஏறிக் கொண்டது. கடவுளான பர்க்கான் துணையுடன் அனைத்து விலங்கினத்திலும் ஒவ்வொரு மாதிரியை ஹிக் கூரால் சேகரிக்கவும் முடிந்தது. விலங்குகளின் அரசனான அர்காளன்- மூான் மட்டும் மிகப் பிரமாண்டமாக இருப்பதால் கப்பலில் ஏற்றிக் கொண்டால் மூழ்கிவிடும் என்று விடுபட்டது. பெருவெள்ளம் ஏற்பட்டு உலகில் மிச்சம் மீதி இருந்த அத்தனை விலங்குகளையும் அவற்றின் அரசனையும் அழித்தது. அவற்றின் எலும்புகள் இன்றும் ஆங்காங்கே அகப்படுகின்றன. கப்பலுக்குள் ஏறிக்கொண்ட தீய சக்தி எலி வடிவெடுத்து ஆங்காங்கு ஓட்டைகளைப் போடத் துவங்கியது. கடவுளான பர்க்கான் அதை அழிக்கப் பூனையை உருவாக்கினார்.

**கிழக்கு சைபீரியா: (சகாயி)**

ஒரு கப்பல் கட்டுமாறு கடவுள் நோஜ் என்பவரிடம் சொன்னார். அவன் காட்டில் என்ன கட்டிக் கொண்டிருக்கிறான் என்று கண்டுபிடிக்குமாறு அவன் மனைவியைத் தீய சக்தி கேட்டது. பகலெல்லாம் நோஜ் அரும்பாடுபட்டுக் கட்டியதைத் தெரிந்து

www.t.me/DigitalNoolagam

கொண்ட தீய சக்தி அதை நள்ளிரவில் அழித்து ஒழித்தது. எனவே வெள்ளம் வந்தபோது படகு தயாராகவில்லை. எனவே கடவுள் இரும்புக் கப்பல் ஒன்றை அனுப்பி நோஜையும் அவன் குடும்பத்தையும் எல்லா விலங்குகளையும் பாதுகாத்தார்.

**உருசியன்:** நோவா கட்டிக் கொண்டுள்ள கலம் பற்றித் தெரிந்துகொள்ளத் தீய சக்தி போதை யூட்டும் மதுவை அவனுக்குத் தருமாறு நோவாவின் மனைவியைக் கேட்டுக் கொண்டது. நோவா கடவுள் தன்னிடம் சொன்ன இரகசியத்தைக் குடிபோதையில் உளறிவிட்டான்.

தீயசக்தி முடிந்த மட்டும் நோவாவின் கட்டுமானப் பணியைத் தடுக்கப் பார்த்தது. அதையும் மீறிக் கலம் அணியமாகிடவே, அவன் மனைவி துணையுடன் உள்ளே புகுந்து கொண்டது. எலிவடிவம் எடுத்துக் கப்பலின் அடித்தளத்தில் ஓட்டைகளைப் போட்டது.

**இந்து :** முதல் மாந்தனான மனு அவன் வீட்டுக் கழிவு நீரில் மீன் ஒன்றைக் கண்டான். பெரிய மீன்கள் தன்னை விழுங்கி விடாத வாறு பாதுகாக்குமாறு சின்னமீன் மனுவிடம் மன்றாடியது. அப்படி செய்தால் நன்றிக்கடனாக மனுவைத் தன்னால் காப்பாற்ற முடியும் என்றது அந்த மீன். ஒவ்வொரு நீர் நிலையாகக் குளம், குட்டை, வாய்க்கால், ஏரி எனப் படிப்படியாக மீனை இடம்விட்டு இடம் மாற்றி வளரச் செய்த மனு இறுதியாக மீனைக் கடலில் விட்டான். பேரழிவும் பேரிடரும் நேர உள்ளன. அதற்கு முன் கப்பல் ஒன்றைக் கட்டிக் கொள்ளுமாறு மனுவிடம் அந்த மீன் கூறுகிறது. வெள்ளம் ஏற்பட்டதும் மீன் மீண்டும் தலை நீட்டியது. மனு தன் கப்பலை அந்த மீனின் கொம்பில் கட்டினார். வடபகுதி மலை ஒன்றுக்கு மனுவை இட்டுச் சென்ற அந்த மீன், கப்பல் அங்குமிங்கும் தடுமாறிச் செல்லாமல் இருக்க மரத்தில் அதைக் கட்டுமாறு மனுவுக்குச் சொன்னது. எல்லா உயிரினமும் அப்பேரழிவில் இறந்தாலும் மனு மட்டுமே மிச்சமிருந்தான். வெண்ணெய், பால், நெய், தயிர் எனக் கடவுளுக்கு அவர் காணிக்கை செலுத்தினார். அதிலிருந்து அழகிய பெண்ணொருத்தி உருவெடுத்தாள். தன்னை மனுவின் மகளெனச் சொன்னாள். அவள் மூலமாகத் தன்னிடம் யார் என்ன வரம் கேட்டாலும் அதை மனு நிறைவேற்றினார். அவள் மூலமாக ஒரு இனமே உருவாயிற்று.

விசுவாசுவத்தின் மகனான மனு அடக்கமானவர். மேலே கையை உயர்த்தியபடி ஒற்றைக்காலில் கண்ணிமைக்காமல் 10,000 ஆண்டுகள் அவர் தவமிருந்தார். சின்னி நதிக்கரையில் அவர் இவ்வாறு தவமிருந்த போது ஒரு சிறிய மீன் அவரை அணுகிப்

www.t.me/DigitalNoolagam

ஆயினும் அவன் கூறியதை எவரும் நம்பவில்லை. அவர்களை நம்ப வைப்பதற்காக எப்படி வெள்ளம் வருமென எங்கிருந்து தான் அறிந்து கொண்டேன் என்பது முதல் முழுமையான கதையை சொல்லி விட்டான். கதை சொல்லி முடித்ததும் அவன் கல்லாக மாறிப் போனான். இதைக் கண்டு அஞ்சிய கிராம மக்கள் அங்கிருந்து ஓட்டமெடுத்தனர். அடுத்தநாள் இரவு முழுவதும் மழை கொட்டியது. மலை வெடித்தது. பெருவெள்ளமாக நீர் பெருக்கெடுத்தது. எல்லாம் ஓய்ந்து மக்கள் மீண்டும் அங்குத் திரும்பிய போது ஹலீயூவை கல்வடிவில் கண்டார்கள். அதை மலை உச்சியில் கொண்டுபோய் வைத்தார்கள். பல தலைமுறைகள் தங்களுக்காகத் தன்னையே தியாகஞ் செய்த ஹலியூவுக்கு நன்றிக் கடனாகப் பலிகொடுத்துப் பூசைகள் நடத்தினார்கள்.

**கிழக்கு சைபீரியா : (பரியாத்)** கடவுளான பர்க்கான் மிகப் பெரிய கப்பல் ஒன்றைக் கட்டுமாறு மனிதனிடம் கேட்டுக் கொண்டார். இதற்காகப் பல நாள்கள் காடுகளில் மனிதன் வேலை செய்தான். மனைவிக்குக் கூட உண்மை சொல்லாமல் காடுகளில் மரம் வெட்டுவதாகச் சொல்லி வைத்திருந்தான்.

தீய சக்தியான ஹிக்கூர், அவன் மனைவியிடம் கப்பல் கட்டப்படுவதையும் அது விரைவில் அணியமாகிடும் என்பதையும் உளறி விட்டது. கப்பல் தயாரானது. அவள் ஏறி வர மறுக்கவே, கணவன் அறைந்தான். என்னை ஏன் அறைந்தாய்? என ஹிக்கூரை எதிர்த்து அவள் கேள்வி கேட்டாள். தீய சக்தி சொல்லித் தந்தபடி அவள் நடந்து கொண்டதால் அவளுடன் கப்பலில் தீய சக்தியும் ஏறிக் கொண்டது. கடவுளான பர்க்கான் துணையுடன் அனைத்து விலங்கினத்திலும் ஒவ்வொரு மாதிரியை ஹிக் கூரால் சேகரிக்கவும் முடிந்தது. விலங்குகளின் அரசனான அர்காளன்- மூான் மட்டும் மிகப் பிரமாண்டமாக இருப்பதால் கப்பலில் ஏற்றிக் கொண்டால் மூழ்கிவிடும் என்று விடுபட்டது. பெருவெள்ளம் ஏற்பட்டு உலகில் மிச்சம் மீதி இருந்த அத்தனை விலங்குகளையும் அவற்றின் அரசனையும் அழித்தது. அவற்றின் எலும்புகள் இன்றும் ஆங்காங்கே அகப்படுகின்றன. கப்பலுக்குள் ஏறிக்கொண்ட தீய சக்தி எலி வடிவெடுத்து ஆங்காங்கு ஓட்டைகளைப் போடத் துவங்கியது. கடவுளான பர்க்கான் அதை அழிக்கப் பூனையை உருவாக்கினார்.

**கிழக்கு சைபீரியா: (சகாயி)**

ஒரு கப்பல் கட்டுமாறு கடவுள் நோஜ் என்பவரிடம் சொன்னார். அவன் காட்டில் என்ன கட்டிக் கொண்டிருக்கிறான் என்று கண்டுபிடிக்குமாறு அவன் மனைவியைத் தீய சக்தி கேட்டது. பகலெல்லாம் நோஜ் அரும்பாடுபட்டுக் கட்டியதைத் தெரிந்து

www.t.me/DigitalNoolagam

கொண்ட தீய சக்தி அதை நள்ளிரவில் அழித்து ஒழித்தது. எனவே வெள்ளம் வந்தபோது படகு தயாராகவில்லை. எனவே கடவுள் இரும்புக் கப்பல் ஒன்றை அனுப்பி நோவாவையும் அவன் குடும்பத்தையும் எல்லா விலங்குகளையும் பாதுகாத்தார்.

**உருசியன்:** நோவா கட்டிக் கொண்டுள்ள கலம் பற்றித் தெரிந்துகொள்ளத் தீய சக்தி போதை யூட்டும் மதுவை அவனுக்குத் தருமாறு நோவாவின் மனைவியைக் கேட்டுக் கொண்டது. நோவா கடவுள் தன்னிடம் சொன்ன இரகசியத்தைக் குடிபோதையில் உளறிவிட்டான்.

தீயசக்தி முடிந்த மட்டும் நோவாவின் கட்டுமானப் பணியைத் தடுக்கப் பார்த்தது. அதையும் மீறிக் கலம் அணியமாகிடவே, அவன் மனைவி துணையுடன் உள்ளே புகுந்து கொண்டது. எலிவடிவம் எடுத்துக் கப்பலின் அடித்தளத்தில் ஓட்டைகளைப் போட்டது.

**இந்து :** முதல் மாந்தனான மனு அவன் வீட்டுக் கழிவு நீரில் மீன் ஒன்றைக் கண்டான். பெரிய மீன்கள் தன்னை விழுங்கி விடாத வாறு பாதுகாக்குமாறு சின்னமீன் மனுவிடம் மன்றாடியது. அப்படி செய்தால் நன்றிக்கடனாக மனுவைத் தன்னால் காப்பாற்ற முடியும் என்றது அந்த மீன். ஒவ்வொரு நீர் நிலையாகக் குளம், குட்டை, வாய்க்கால், ஏரி எனப் படிப்படியாக மீனை இடம்விட்டு இடம் மாற்றி வளரச் செய்த மனு இறுதியாக மீனைக் கடலில் விட்டான். பேரழிவும் பேரிடரும் நேர உள்ளன. அதற்கு முன் கப்பல் ஒன்றைக் கட்டிக் கொள்ளுமாறு மனுவிடம் அந்த மீன் கூறுகிறது. வெள்ளம் ஏற்பட்டதும் மீன் மீண்டும் தலை நீட்டியது. மனு தன் கப்பலை அந்த மீனின் கொம்பில் கட்டினார். வடபகுதி மலை ஒன்றுக்கு மனுவை இட்டுச் சென்ற அந்த மீன், கப்பல் அங்குமிங்கும் தடுமாறிச் செல்லாமல் இருக்க மரத்தில் அதைக் கட்டுமாறு மனுவுக்குச் சொன்னது. எல்லா உயிரினமும் அப்பேரழிவில் இறந்தாலும் மனு மட்டுமே மிச்சமிருந்தான். வெண்ணெய், பால், நெய், தயிர் எனக் கடவுளுக்கு அவர் காணிக்கை செலுத்தினார். அதிலிருந்து அழகிய பெண்ணொருத்தி உருவெடுத்தாள். தன்னை மனுவின் மகளெனச் சொன்னாள். அவள் மூலமாகத் தன்னிடம் யார் என்ன வரம் கேட்டாலும் அதை மனு நிறைவேற்றினார். அவள் மூலமாக ஒரு இனமே உருவாயிற்று.

விசுவாசுவத்தின் மகனான மனு அடக்கமானவர். மேலே கையை உயர்த்தியபடி ஒற்றைக்காலில் கண்ணிமைக்காமல் 10,000 ஆண்டுகள் அவர் தவமிருந்தார். சின்னி நதிக்கரையில் அவர் இவ்வாறு தவமிருந்த போது ஒரு சிறிய மீன் அவரை அணுகிப்

www.t.me/DigitalNoolagam

பெரிய மீனிடம் இருந்து தன்னைக் காக்குமாறு வேண்டியது. அந்த மீனை ஒரு பெரிய கலத்தில் வீட்டிலேயே வளர்த்தார். பெரியதாக வளரவே குளத்தில் விட்டார். அங்கிருந்து பின்னர்க் கங்கையாற்றில் விட்டார். பிறகு கடலில்விட்டார். பெரிதாக இருப்பினும் மீனைத் தூக்கி செல்வது இலகுவாக இருந்தது. கடலில் அதை மனு விடுவிக்கும் போது மனுவிடம் அந்த மீன் சொன்னது. "உலகில் உள்ள அனைத்தும் புனிதமாக்கும் நேரம் வரும் போது துடைத்தெறிப்படும். பெரியதோர் நாவாயைக் கட்டமைத்து நங்கூரமிட ஏந்து செய்து ஏழு முனிவர்களையும் சில இன்றியமையா விதைகளையும் ஏற்றிக் கெண்டு காத்திருக்கச் சொன்னது." மனு நினைத்த போது வழிகாட்டியாக அந்த மீன் வந்து சேர்ந்தது. அதன் கொம்பில் கப்பலைக் கட்டிக் கடலைக் கடந்து செல்ல முயன்றார். பல ஆண்டுகள் அந்தக் கலம் நீரில் உயர்ந்த இமயாத் மலைச்சிகரம் அருகே வந்தபோது கப்பலை வழி நடத்தி வந்த மீன் "நவபந்தனை" என்ற சிகரத்தில் அதைக் கட்டிப் போட்டு இறங்கச் சொன்னது. நவபந்தனா எனில் கப்பல் கட்டுமிடம் என்று பொருளாகும். அப்போதுதான் அந்த மீன்தான் யாரென மனுவுக்குப் புலப்படுத்தியது. பிரசாபதி பிரம்மா தானே என்று வெளிக் காட்டியது. எல்லா உயிர்களும் மனுவால் படைக்கப்படும். நகர்வன, ஊர்வன, பறப்பன, நிலைபெற்றன என எல்லாம் மனு படைப்பார் என்றார் பிரம்மா. தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள விரதமிருந்த மனு எல்லாவற்றையும் படைப்பதில் ஈடுபட்டார்.

சூரியனின் மகனான அரசன் மனு மலேயாவில் தவமிருந்து இறைவனோடு இரண்டறக் கலந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு பிரம்மா மனுவிடம் அவருக்கு என்ன வரம் வேண்டுமெனக் கேட்டார். உலகம் அழியும் போது எல்லாவற்றையும் பாதுகாக்கும் வரம் தனக்கு வேண்டுமென மனு கேட்டார். மனு இரந்து உணவு பெற்று வரும் போது மீன் ஒன்று அவருக்குப் போடப்பட்டது. அதை அவர் பாதுகாத்தார். அது வளர்ந்து பெரிதாகித் தன்னைக் காப்பாற்றுமாறு கேட்டது. மீனைப் பல பாத்திரங்களில் பாதுகாத்து இறுதியாகக் கங்கையிலும் கடலிலும் மனுவிட்டார். கடலில் விடும் போது தான் அது மீன் அல்ல. கடவுளான சனார்த்தனனே! பிரம்மனே என மனு அறிந்து கொண்டார்!

இந்த யுகத்தின் இறுதி வந்துவிட்டது என மனுவிடம் சனார்த்தனன் சொன்னார். உலகம் நீரால் மூழ்கடிக்கப்படும் என்றார். எல்லா உயிரினங்களையும் தாவரங்களையும் ஒரு கப்பலில் ஏற்றிப் பாதுகாக்கச் சொன்னார். நூறாண்டுகள் பசியும் பட்டினியும்

www.t.me/DigitalNoolagam

பஞ்சமும் தலை விரித்தாடும். பின்னர் வானில் சூரியனிடமிருந்து வரும் வெப்ப நெருப்பால் பூமியே கருகிப்போகும். பூமிக்குள்ளிருந்து வரும் வெப்ப நெருப்பால் பூமியையும் (ஈதரையும்), கடவுளரையும் எல்லாக் கோள்களையும் அழித்துவிடும் என்றது. நெருப்பு நீரோடையிலிருந்து வெளிப்படும் ஏழு மேகங்கள் உலகை மூடிக் கொள்ளும். மூன்று உலகங்கள் நொறுங்கிக் கடல்களாக மாற்றம் பெறும். மனுவின் கப்பல் மட்டுமே இருக்கும். ஒரு மீனின் கொம்பில் அது கட்டப்பட்டிருக்கும். இவ்வளவையும் வருவது முன்னுரைத்த பிரம்மா மறைந்து போயிற்று. சொன்னது போலவே பேரழிவுக் காலம் பிறந்தது. கொம்புள்ள மீன் வடிவில் சனாத்தனர் தலை நீட்டினார். ஆனந்தா என்ற பாம்புக் கயிறு போல வடிவு கொண்டு வந்தது. மனு எல்லா விலங்குகளையும் திரட்டிக் கப்பலில் ஏற்றினார். கடவுளான சனார்த்தனருக்கு நன்றி கூறிவிட்டு மீனின் கொம்பில் பாம்புக் கயிற்றால் கப்பலைக் கட்டினார்.

கடந்த கல்பத்தின் (யுகம்) இறுதியில் அசுரர் அரசனான அயக்கிரிவர் பிரம்மாவிடமிருந்த புனித நூல்களைத் திருடி விட்டார். ஒட்டுமொத்த மனித இனமும் ஏழு முனிவர்களைத் தவிர்த்துப் புனிதமிழந்து சீர்கெட்டு விட்டனர். கடல்பகுதிக்கான அரசன் சத்யவிரதனும் இவ்வாறு மாசடைந்து விட்டான். ஆறு ஒன்றில் அவன் நீராடிக் கொண்டிருந்த பொழுது மீன் ஒன்று அவனருகே வந்து தன்னைக் காக்குமாறு வேண்டியது. ஒவ்வொரு நீர் நிறை பாத்திரமாக மாற்றி அந்த மீனை வளாத்தான் சத்தியவிரதன். இறுதியாக அந்த மீன் வடிவே உலகனைத்துக்குமான கடவுள் திருமாலென அறிந்து கொண்டான்.

“இன்னும் ஏழு நாளில் பெரியதோர் வெள்ளம் வரும். அதில் சீர்கெட்ட உயிரினங்கள் அனைத்தும் அடித்துச் செல்லப்படுமென விட்டுனு சொன்னார். ஆனால் பெரியதோர் நாவாயில் சத்திய விரதன் காப்பாற்றப்படுவானெனக் கடவுள் சொன்னார். அந்த அதிசயக் கப்பலில் அனைத்து மருத்துவ மூலிகைகளையும் உணவுத் தானியங்களையும் ஏழு முனிவர்களையும் அவர்தம் மனைவியரையும் இணை இணையாகக் காட்டு விலங்குகளையும் ஏற்றிக் கொண்டு பேரழிவில் இருந்து தப்பினாராம். ஏழு நாள்களுக்குப் பிறகு கடல்கள் எல்லாம் பொங்கி வழியும் கடற்கோள் ஏற்பட்டது. கரையோரங்கள் கடல் நீரில் மூழ்கின. மழை வெள்ளம் மண்ணுலகை மூழ்கடித்தது. மேலெழும்பும் நீரில் கப்பலொன்று நீந்தியது. சத்திய விரதனும் முனிவர்களும் அவர்தம் மனைவியரும் அதில் ஏறிக் கொண்டனர். பெரிய திமிங்கல வடிவெடுத்த விட்டுனு கடற் பாம்பைக் கயிறாக்கிக் கப்பலைத் தன்னோடு கட்டிக் கொண்டார்.

www.t.me/DigitalNoolagam

வெள்ளம் வடிந்ததும் தன்னிடமிருந்த நூல்களைத் திருடிச் சென்ற கொடியவனைக் கொன்று அந்நூலின் உட்கருத்தைச் சத்தியவிரதனுக்கு விட்டுனு சொன்னார்.

புயல் வீசிய ஒரு நாளில் துறைமுக நகரான துவாரகையை மூழ்கடித்தது. கிருட்டிணரைத் தவிர அனைவரும் அழிந்தனர். அவர் கடவுளான விட்டுனுவின் அவதாரம் ஆவார். இரைவத்தாகா மலையில் காட்டில் அவரும் அவரின் உடன்பிறப்பு பலராமரும் நடந்து சென்றனர். கிருட்டிணர் தன் உடன்பிறப்பைத் தனித்து விட்டகன்றார். உலகைத் தாங்கிக் கொண்டுள்ள சேஷன்என்றும் பாம்பு பலராமன் உடலில் இருந்து சக்தியைத் திரும்ப எடுத்துக் கொண்டது. ஒளிவெள்ளமாக பலராமனின் ஆவி கடலில் புகுந்தது. அவன் உடல் உயிரற்று விழுந்தது. இதனால் சினங்கொண்ட கிருட்டிணர் அடுத்த நாள் தீமைகளின் பிறப்பிடமான உலகை அழித்து விடும் தீர்மானமுடன் துயிலச் சென்றார். ஒரு வேடன் துயில் கொண்டிருந்த கிருட்டிணரில் காலை மானின் முகமென மருண்டான். அதன் மீது கணை எய்தான். கிருட்டிணரின் காலில் ஏற்பட்ட காயம் சாதாரணமானதே. ஆயின் கிருட்டிணர் இறந்து பட்டார். காவியுடை அணிந்து நான்கு கரங்களுடன் மார்பில் நகையலங்காரமுடன் அவர் கிடந்தார். வெள்ளம் உயர்ந்து வேடனின் காலடியை மூழ்கச் செய்தது. செய்வதறியாது வெட்கித் தலை குனிந்தான் அவன்.

**மத்தியப் பிரதேசம்:** சலவைத் தொழிலாளி ஒருவன் மீனுக்கு உணவளித்தான். அதற்கு நன்றி காட்டும் விதமாகப் பேரழிவு நேர உள்ளது என அந்த மீன் சலவைத் தொழிலாளியிடம் தெரிவித்தது. இதனால் பெரியதோர் பெட்டி செய்து அவனும் அவன் வளர்த்த கோழியும் அவன் தங்கையும் உள்ளே ஒளிந்து கொண்டனர். வெள்ளம் ஓய்ந்தபின் உள்ள நிலையை நேரில் ஆய்வு செய்ய வந்த இராமனின் தூதர்கள் மூடிய பெட்டிக்குள்ளிருந்து கோழி கூவும் ஒலியைக் கேட்டார்கள். அந்தப் பெட்டியை இராமனிடம் எடுத்துச் சென்றார்கள். உள்ளிருந்த சலவைத் தொழிலாளியிடம் இராமன் விசாரணை நடத்தினான். வடக்கு, கிழக்கு, மேற்குத்திசை நோக்கி சத்தியம் செய்யும்போது பெட்டிக்குள் தன்னுடன் இருந்தவள் சகோதரி என்றான். தெற்குத் திசை நோக்கிச் சத்தியம் செய்கையில் அவள் என் மனைவி என அவனே சொன்னான். மீன் விடுத்த எச்சரிக்கை பற்றி அவன் இராமனிடம் சொல்லி விடவே இராமன் மீனின் நாக்கைத் துண்டிக்கச் செய்தான். அன்று முதல் இன்று வரை மீன்களுக்கு நாக்கில்லாமல் போயிற்று. உலகில் மக்கள் தொகையைப் பெருக்குமாறு இராமன் அந்தத் தொழிலாளியிடம்

www.t.me/DigitalNoolagam

கேட்டுக் கொண்டான். இதனால் அவன் சகோதரியை மணந்து கொண்டான். ஏழு பெண் ஏழு ஆண்பிள்ளைகளை அவர்கள் பெற்றெடுத்தார்கள். முதலில் பிறந்த குழந்தைக்கு இராமன் குதிரையைப் பரிசளித்தான். குதிரையேற்றம் தெரியாத காரணத்தால் அவன் காட்டுக்குள் மரம் வெட்டச் சென்றான். அவன் பரம்பரை இன்று வரை மரம் வெட்டிகளாகவே வாழ்கிறார்கள்.

+ + +

**மத்திய இந்தியா (ராய்ப்பூர்: கமார்)**

முதல் மனிதனுக்கும் முதல் பெண்ணுக்கும் ஒரு பையனும் பெண்ணும் பிறந்தார்கள். கடவுளுக்குச் சினமூட்டிய ஒரு ஓநாயைக் கொல்ல அவர் பெரு வெள்ளத்தை ஏவி விட்டார். வெள்ளம் வருவதறிந்து அந்தத் தம்பதியர் உள்ளுக்குள் பொந்து உள்ள மரம் ஒன்றினுக்குள் வெள்ளம் வடியும் வரை தங்கக்கூடிய உணவுடன் தங்கள் பிள்ளைகளைப் போட்டு அடைத்தார்கள். வெள்ளம் வந்தது. உலகில் உள்ள அனைத்தும் மூழ்கின. 12 ஆண்டுகள் கடந்தன. கடவுள் 2 பறவைகளைப் படைத்து அந்த ஓநாய் அழிந்துவிட்டதா என்று அறிந்து வர அனுப்பி வைத்தார். மிதக்கும் மரம் ஒன்றைத் தவிர அப்பறவைகளுக்கு வேறெதுவும் கண்ணில் படவில்லை.

அதன் மீது வந்தமர்ந்த பறவைகளுக்கு மரப்பொந்துக்குள் அடைப்பட்ட குழந்தைகள் பேசிக் கொள்வது கேட்டது. உள்ளே மூன்று நாள்களுக்கு மட்டுமே உணவிருப்பதாக அக்குழந்தைகள் பேசிக் கொண்டன. இதை அந்தப் பறவைகள் கடவுளிடம் தெரிவித்தன. கடவுள் வெள்ளத்தை வடியச் செய்தார். மரப் பொந்துக்குள் அடைப்பட்டிருந்த குழந்தைகளை மீட்டார். அவர்கள் கதையைக் கேட்டார். காலப்போக்கில் அந்தக் குழந்தைகள் மணந்து கொண்டனர். அவர்களுக்குப் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சாதியின் பெயரைக் கடவுள் சூட்டினார். இப்படியாகச் சாதிகள் பிறந்தன. எல்லா மக்களும் அவ்விருவரிடமே தோன்றினர்.

**வடகிழக்கு இந்தியா (அசாம்)**

பெருவெள்ளம் முன்னொரு காலத்தில் முழு உலகையே மூழ்கடித்தது. ஒரு தம்பதி மட்டுமே விதிவிலக்கு. அவர்கள் மிக உயர்ந்த லெங் மலை உச்சியில் இருந்த மரத்தின் மீதேறிக் கொண்டதால் தப்பிப் பிழைத்தார்கள். பொழுது புலர்ந்தது. அவர்கள் புலிகளாக உருமாற்றம் பெற்றிருந்தனர். உலகின் நிலை

www.t.me/DigitalNoolagam

கண்டு கலுழ்ந்த கடவுள் பாத்தியான் அம்மலைக் குகை ஒன்றிலிருந்த ஆணையும் பெண்ணையும் அனுப்பி வைத்தார். குகை விட்டு வெளிப்போந்த அவர்களுக்குப் புலி இணை கண்டு கிலி பிடித்தது. கடவுளிடம் வேண்டி வலிமை பெற்று அந்த மிருகங்களை அவர்கள் கொன்றனர். அதன் பின் அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து உலகில் மக்கட் தொகையைப் பெருக்கும் இடைவிடாப் பணியில் ஈடுபட்டனர்.

***லெப்ச்சா (சிக்கிம்):*** பெருவெள்ளத்திலிருந்து தப்பிய இணையர் இன்றைய டார்சிலிங்கு அருகில் உள்ள டெண்டாங் மலை மீது ஏறிப் பிழைத்துக் கொண்டனர்.

**திபேத்:** திபேத் முழுமையாக நீரில் மூழ்கிப் போனது. கயா என்ற கடவுள் உயிர் தப்பிப் பிழைத்தவர்களுக்காக இரக்கப்பட்டார். வெள்ள நீரை வங்காளம் வழியாக வடிந்தோடச் செய்தார். அந்தத் திபேத்திய மக்களுக்கு நாகரிகம் கற்றுத் தர நல்லாசிரியர்களைக் கடவுள் அனுப்பினார். குரங்கை ஒத்த அறிவன்றி அதனினும் மிகுதியான அறிவாற்றல் அப்போது அவர்களுக்கு இல்லை. அந்த மக்கள் மீண்டும் மக்கள்தொகைப் பெருக்கினர்.

***அசாம் : (சிங்போ)*** பன்றிகளையும் எருமைகளையும் கடவுளுக்குப் பலியிடும் வழக்கத்தைக் கைவிட்டதால் மனிதகுலம் அழிந்தது. குன் - லிடாங், கூ - லியாங் என்னுமிருவர் தங்கள் மனைவியரோடு உயிர் தப்பினார்கள். சிங்கிராபம் மலை மீது அவர்கள் வதிந்தனர். மாந்த குலத்துக்கே அவ்விரு இணையரே மூதாதையர் ஆயினர்.

***அசாம்(லுசாய்) :*** நீர் அசுரர்களின் தலைவன் நகாய் - டி என்ற பெண் மீது காதல் கொண்டான். அவள் அவன் காதலை ஏற்க மறுத்து ஓடிப்போனாள். அவளைத் துரத்திச் சென்ற நீர் அசுரர் தலைவன் வடகிழக்கில் நெடுந்தொலைவில் உள்ள புன்லு புக் மலையில் மனித குலத்தை நீர் சூழுமாறு முற்றுகையிட்டான். சுற்றிலும் நீரின் முற்றுகையைத் தாக்குப் பிடிக்க முடியாத மக்கள் நகாய் -டி என்ற அந்தப் பெண்ணை நீரில் வீசி எறிந்தனர்.

பின்வாங்கிச் சென்ற வெள்ளம் உலகெங்கும் பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தியது. அதுவரை உலகம் சமதரையாகவே இருந்தது.

**லிசு (வடமேற்கு யுன்னானி : சீனா)** ஒரு சாபம் காரணமாக வான்வெளிக்கும் பூமிக்கும் மனித ஆவிகளும் எலும்புகளும் தேவை என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகவே பெருவெள்ளம் ஏற்படலாயிற்று. அநாதைகளாக விடப்பட்ட ஒரு உடன்பிறப்பும் அவன் சகோதரியும் குக்கிராமம் ஒன்றில் வாழ்ந்து வந்தார்கள்.

www.t.me/DigitalNoolagam

இரு தங்கப் பறவைகள் ஒரு நாள் அவர்கள் தங்குமிடம் நோக்கிப் பறந்து வந்தன. உலகைப் பெருவெள்ளம் சூழும் என முன்னறிவிப்புச் செய்தன. ஒரு பலாப்பழம் போல வெளியே முரட்டுத் தோலுடைய பழத்தினுள் அவ்விருவர் புகுந்து கொண்டனர். புகுமுன் மற்றவர்களையும் எச்சரித்தார். அவர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை. 95 நாள்களுக்கு மழையின் பேயாட்டமும், அதனால் ஏற்பட்ட வெள்ளமும் உலகை முழுக்கடித்தன. அவ்வப்போது அந்த உருண்ட பழம் சொர்க்கத்தின் அடித்தளத்தில் மோதி யெழும் ஒலியை உள்ளிருந்த சகோதரனும் சகோதரியும் செவி மடுத்தனர். நெடுநாள் உள்ளே அடைபட்டிருந்தவர்களுக்குத் தங்கப் பறவைகளின் அழைப்பொலி காதில் விழுந்தது. அடைபட்டிருந்தவர்கள் வெளிப்போந்தனர். ஒரு மலை உச்சி மீது தாங்கள் இருப்பதை உணர்ந்து கொண்டார்கள். வெள்ளம் வடிந்து விட்டிருந்தது. ஆனால் அப்போது உலகில் ஒன்பது சூரியன்களும் ஒன்பது நிலவும் ஒளிவீசக் கண்டார்கள். பகலில் உலகைச் சூரியன்கள் சுட்டெரித்தன.

இருதங்கப் பறவைகளும் ஒரு தங்கச் சம்மட்டியையும் தங்கச் சட்டியையும் பரிசாகத் தந்தன. இவற்றைப் பயன்படுத்திப் பாதாள உலகத்தில் அரசனின் வில்லையும் அம்பையும் எப்படி கைப்பற்றுவது என்றும் சொல்லித்தந்தன. அண்ணனும் தங்கையும் பாதாள அரசனின் குளத்தில் கட்டப்பட்ட பவழப்பாறைகளான அவன் இல்லத்தைத் தங்கச் சம்மட்டியால் அடித்து நொறுக்கின. ஏதோ அரவம் கேட்பதறிந்து நடப்பதைத் தெரிந்துவரத் தன் பணியாளரான மீன்களை அரசன் அனுப்பி வைத்தான். கையிலிருந்த சட்டியால் அந்த மீன்களைப் பிடித்துக் கரையில் தூக்கி எறிந்தனர் அந்த உடன்பிறப்புகள். இதனால் நீர் அசுரனே வெளிவந்தான்.

அவனும் மாட்டிக் கொண்டான். தான் தப்பிப்பதற்காகத் தன் வசமிருந்த வில்லையும் அம்பையும் தந்தான். அந்த வில் அம்பு கொண்டு ஒன்பது கதிரவனில் ஒளிமிகுந்த ஒரு ஞாயிறு தவிர்த்து எல்லாச் சூரியனையும் ஒன்பது நிலவுகளில் ஒரு நிலவு தவிர்த்து எல்லா நிலவுகளையும் அம்பெய்து சாய்த்தனர். அதன் பின் அவ்விருவரும் மக்கள் எவரேனும் மிச்சம் உயிருடன் உள்ளனரா என்று தேடி வட திசை ஏகினர். தென்திசைப் போந்தனர்.

யாரும் இல்லை. மீண்டும் அந்தத் தங்கப்பறவைகள் வந்தன. அவ்விருவரையும் மணந்து கொள்ள வேண்டின. அவர்கள் மறுத்தார்கள். ஆயின் அப்பறவைகள் இது சொர்க்கத்தின் கட்டளை என்றன. அப்போது அவர்கள் கண்முன் விந்தையான

www.t.me/DigitalNoolagam

நிகழ்வுகள் நடந்தேறின. ஆமைகளின் ஓடுகள் பறந்து வந்தன. உடைந்து நசுங்கிய கற்கள் ஒன்று சேர்ந்தன. ஊசி முனைக் காதுக்குள்ளே புகுந்து செல்லுமாறு மும்முறை சகோதரன் அம்பெய்தான். இப்படிப்பட்ட நிகழ்வு கண்டு அஞ்சித் திருமணம் புரிய இசைந்தனர். அவர்களுக்கு 6 ஆண்களும் 6 பெண்களும் பிள்ளைகளாகப் பிறந்தனர். ஒவ்வொரு திசையாக அவர்கள் சென்று பல்வேறு இன மக்களைத் தோற்றுவித்தார்கள்.

**தென்சீனம்:** தொன்முது காலத்தில் மனிதர்கள் கொடியவர் களாக இருந்தனர். திசே-கு-டிழித் வானிலிருந்து மண்ணுலகுக்கு ஒரு தூதரை அனுப்பினார். ஒரு மனிதனின் உதிரத்தையும் ஊனையும் பெற்று வர அத்தூதர் வந்தார். ஒரேயொரு மனிதன் தாமூ என்பவன் மட்டுமே தர இசைந்தான் திசே-கு-தழித் சினஞ் கொண்டு மழையின் கதவுகளை மூடிவிட்டார். இதனால் வானுயர நீர் நிரம்பியது. பியரிசு மரத்தில் இருந்து செய்யப்பட்ட மரப் பொந்துக்குள் தூமூ அவன் நான்கு மகன்கள், மற்றவர்கள், காட்டு வாத்துக்கள் இவற்றோடு காப்பாற்றப்பட்டனர். இவர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தவர்களே நாகரிகங்களின் முன்னோடி ஆவர். பேரழிவு குறைந்த பின் தூமூ வடித்த மரச்சிற்பங்களின் வழித்தோன்றல்களே அறியாமை வயப்பட்ட குடிகளாவர்.

**ழினோ (தெற்கு யுள்ளான்) சீனா:** படைப்பு ஏற்பட்ட நாளில் இருந்து மக்கள் வாழ்வு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் சென்று கொண்டிருந்தது. ஆயின் ஓராண்டு பெருவெள்ளம் புறப்பட்டது. மகே, மனுயு என்ற இரட்டையரான சகோதர சகோதரிகளின் பெற்றோர் பெரிய மரம் ஒன்றை வெட்டிக் குடைந்தார்கள். உள்ளே பிள்ளைகளைப் போட்டு இரண்டு புறமும் மாட்டுத் தோலால் மூடினார்கள். வெளிப்புறம் பித்தளை மணிகளை ஓசையை எழுப்புதற்காகக் கட்டினார்கள். உள்ளே தானியங்களையும் விதைகளையும் கொட்டி வைத்தார்கள்.

வெள்ளம் வடியும் வரை வெளியே வருதல் வேண்டாமெனப் பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்தார்கள். வெள்ளம் வந்தது. எவ்வளவு காலமெனச் சொல்ல இயலா அளவுக்குத் தெப்பம் போல் மிதந்தது அந்த மரப் பேழை. பொறுமை இழந்த மகன் மகே தன்னிடமிருந்த கத்தியால் மரக்கூட்டுக்குள் ஓட்டை போட்டுப் பார்த்தான்.

வெளியில் இருந்து சேறும் சகதியும் உட்புகுந்தது. வெளியே பிணமலைகள் குவிந்திருப்பது தெற்றெனத் தெரிந்தது. உடனே போட்ட ஓட்டையை மெழுகு கொண்டு மூடினான். பிறகு அவன் தங்கை மனுபு ஓட்டை போட்டாள். வெளியே தண்ணீர் மட்டுமே

www.t.me/DigitalNoolagam

தெரிந்தது. அவளும் ஓட்டையை மூடினாள். இறுதியாக மரப் பேழைக்கு வெளியே கட்டிருந்த மணி ஓசை எழுந்தது. மரப்பேழை தரை தட்டியது. அதிலிருந்து வெளியே வந்தார்கள்.

அவர்க்ள் மட்டுமே உலகில் மிஞ்சி இருந்தனர். அவர்களும் முதுமை அடையவே தங்களுக்குப் பிறகு மண்ணுலகில் எவருமே இருக்க மாட்டார்களே எனக் கவன்றனர். மகே நாமிருவரும் மணம் புரியலாமென்றார். மனுயுவுக்கு உடன்பிறப்பை மணப்பது அருவெறுப்பாக இருந்தது. மந்திர மரத்தின் ஆலோசனை நாடலாமென மகே சொன்னார். மனுயு அங்குச் சென்றாள். ஆனால் மகே குறுக்கு வழிச் சென்று மரத்தின் பின் ஒளிந்து கொண்டான். தன் குரலை மாற்றி அண்ணனை மணந்து கொள் என மரம் சொல்வது போல் சொல்லித் தங்கையை ஏமாற்றினான். அவ்விருவரும் மணந்து கொண்டனர். அப்போது அவர்கள் முதுமையில் இருந்ததால் அவர்களால் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. தங்களுடன் கொண்டு வந்த பலா விதை மரமாகி வளர்ந்து பெரிதாகிவிட்டிருந்தது. அதில் ஒரு பழுத்த பழம் தொங்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள் அதில் இருந்து மெல்லிய குரலில் பேசுவது அவர்களுக்குக் கேட்டது. அந்தப் பழத்தை வேக வைக்கத் தங்களிடமிருந்த சட்டியைச் சூடாக்கினார்கள். ஒவ்வொரு முறையும் அதனை வேக வைக்க முயற்சிக்கும் போதெல்லாம் வேண்டாம் வதைக்காதே! விட்டுவிடு என்று உள்ளிருந்து குரல் ஒலி கேட்கும். இறுதியாகப் பாட்டி அபீரியர் பேசுகிறேன் என்றது ஒரு குரல். அது தன்னை எரிக்குமாறு வேண்டியது. முதலில் காங்கோ மக்களின் மூதாதை அபோ வெளிப்பட்டார். அவர் தோல் கருத்திருந்தது. அன், டேய், றினோ என வரிசையாக வெளிப்பட்டனர். இவர்கள் தத்தம் இனக்குழுக்களுக்கு முன்னோடிகளாவர். அது முதல் அபீரியருக்கு அரிசியாலான உணவு விருந்துப் படையலாக அளிக்கப்படுகிறது. றினோ வாழத் தன்னை ஈசையாகத் தந்த அபீரியருக்கு இது நன்றித்திரு விழா ஆகும்.

**கரேன் (பர்மா)** ஒரு கட்டுமரம் மீதேறிப் பெரு ஊழியில் இருந்து உடன்பிறந்தார் இருவர் தப்பினர். சொர்க்கத்தை எட்டும் அளவு உலகில் பெரு வெள்ளத்தின் நீர்மட்டம் உயர்ந்தது. வானுலகப் பொந்து ஒன்றில் மாமரம் ஒன்று வளர்ந்தது. அம்மாமரம் கனிகளைப் புசிப்பதற்குச் சகோதரன் உயரே ஏறினார். வெள்ளம் திடுமென வடிந்தது. மரத்தில் தொங்கிய சகோதரன் அங்கேயே மாட்டிக் கொண்டான்.

www.t.me/DigitalNoolagam

**மேற்கு பர்மா (சிங்பா)**

பெருவெள்ளம் வந்த போது பாவ்பாவ் நான் சுஆங்கும் அவர் சகோதரி சாங்-இகோவும் பெரிய நாவாய் ஒன்றில் ஏறி உயிர் தப்பினர். அந்த நாவாயில் தங்களுடன் ஒன்பது கோழிகளையும் ஒன்பது ஊசிகளையும் அவர்கள் எடுத்துச் சென்றனர். வெள்ளம் வடிந்ததும் ஒவ்வொரு நாளும் ஒரு கோழியையும் ஊசியையும் நாவாயில் இருந்து வெளியே வீசினர். ஒன்பதாவது நாள்தான் கோழி கூவிற்று. ஊசி தரை தட்டியது. கரை இறங்கினார்கள். காலாற நடந்து திரிந்தார்கள். கடைசியில் குகை ஒன்றில் குடியேறினார்கள். இரண்டு பேய்கள் அங்கிருந்தன. தங்கை கருவுற்றாள். மக வீந்தாள். தாய்தந்தையர் வெளிச் செல்லும்போது பெற்ற பிள்ளையைப் பேய்க்கிழவியாம் பில்லிசூனியக் காரி ஒருத்தி வசம் விட்டுச் செல்வர். குழந்தையின் மழலையும் கொஞ்சு அழகும் அந்தச் சூனியக்காரக் கிழவிக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் ஒன்பது சாலைகள் சந்திக்குமிடத்துக்கு அந்தப் பிள்ளையை எடுத்துச் சென்றாள். துண்டு துண்டாக வெட்டினாள். உதிரத்தையும் ஊன் சதைத் துண்டுகளையும் எல்லாவிடமும் இறைத்தாள். அவற்றில் சில துண்டுகளை எடுத்துச் சென்று குழம்பாகச் சுமைத்துப் பிள்ளையின் தாயிடமே சாப்பிடச் சொன்னாள் அக்கிழவி. நடந்தது அறிந்து அதிர்ந்த தாய் ஒன்பது சாலைகள் கூடுமிடம் சென்று ஓலமிட்டு அழுதாள். தூய ஆவியே என் பிள்ளையை மீட்டுத் தருக! அவன் கொலைக்குப் பழிக்குப்பழி வாங்குக என மன்றாடினாள். தூய ஆவி அவள் முன்தோன்றி இறந்த பிள்ளையை மீட்டுத் தருதல் இயலாது! அதற்குப் பதிலாக எல்லா நாடுகளின் மனிதர்க்கும் அவளைத் தாயாக்குதல் முடியும் என்றது. வெட்டப்பட்டுச் சிதறிய உடல் துண்டுகளில் இருந்து ஒன்பான் சாலைகளிலும் ஒவ்வொரு நாட்டு மாந்தர் உதித்தெழுந்தார்கள்.

***சீனா:*** மனிதர்கள் நடத்தைத் தவறினார்கள். அதற்காக அவர்களைத் தண்டிக்கப் பெருங்கடவுள் நினைத்தார். நீர்க் கடவுளான கோங்கோங்கை அழைத்து வெள்ளத்தை மனித குலம் மீதேவிவிடச் சொன்னார். 22 ஆண்டுகள் இடைவிடாத வெள்ளப் பெருக்கைக் கோங் குகோங்கு ஏவினார். உயர்ந்த மலைகளின் குகைகளில் இதனால் மனிதர்கள் ஒளிந்து கொண்டார்கள். மரக்கிளைகளில் தொங்கினார்கள். உணவுக்காகக் காட்டு விலங்குகளுடன் போரிட்டார்கள். பெருவெள்ளத்தை நிறுத்துமாறு பெருங்கடவுளிடம் அவர்கள் வேண்டுதல் பயன் நல்கவில்லை. கழுகும் வான்கோழியும் சொல்லித் தந்ததால் வளரும் நிலம் என்னும் மண் சொர்க்கத்தில் இருப்பது அறிந்தார்கள். மாந்தருள்

www.t.me/DigitalNoolagam

பெருவீரனான கன் சொர்க்கத்தில் இருந்து அந்த மண் கொண்டு வந்து நீரைத்தடுக்கும் அணைகள் போலக் கொட்டினான். அவன் திருடி முடிப்பதற்குள் அவனைத் தண்டிக்கப் பெருங்கடவுள் நெருப்புக் கடவுளான ழூரோங்கை அனுப்பி வைத்தார். வளரும் நிலம் மீட்கப்பட்டுச் சொர்க்கத்துக்குத் திரும்ப எடுத்துச் செல்லப் பட்டது. வெள்ளம் தொடர்கதை ஆயிற்று. கொல்லப்பட்ட வீரன் கன் உடல் நாறிப்போய்விடவில்லை. அழுகிப் போய்விடவில்லை. மூன்றாண்டுக்குப் பிறகு அந்த உடலை வெட்டியபோது அதிலிருந்து தலையில் கொம்புடைய அரக்கனாக அவர் மகன் யூ பிறந்தான். கன் உடலும் அரக்க உருவெடுத்து அமைதியாகப் பூமியில் ஆழத்தில் வாழத் தலைப்பட்டது. யூ எனும் பூதத்தின் பேராற்றல் கண்டஞ்சிய பெருங்கடவுள் சமாதானம் செய்ய விரும்பி "வளரும் நிலம்" என்ற மண்ணைத் திருப்பித் தந்தார். யிங் எனப்படும் பூதகணத்தையும் துணையாகத் தந்தார். எல்லாக் கடவுள்களின் கூட்டணி அமைத்து நீர்க்கடவுள் யோங்யோங்கை யூ பூதம் தோற்கடித்து விரட்டியது. வெள்ளத்தை ஒழிக்க வளரும் நிலம் என்ற சொர்க்கலோக மண்ணை அனைவர்க்கும் தந்தது. யிங் பூதம் துணையால் கால்வாய்கள் வெட்டி எல்லா நீரையும் கடலில் சேர்க்க யூ எனும் அசுரன் முனைந்தான்.

+++

நூடுவா என்ற பெண் கடவுள் அடுத்திருந்த இனக்குழு ஒன்றின் தலைவனோடு சண்டையிட்டு அவன் மலைகளுக்குத் தப்பி ஓடச் செய்தாள். ஒரு பெண்ணிடம் தோற்ற அவமானம் தாங்காமல் எதிரிகளைப் பழிவாங்கவும் முடியாவிட்டால் தன்னைத் தானே அழித்துக் கொள்ளவும் தெய்வீக மூங்கில் மீது தலையைப் பலமுறை மோதிக் கொண்டான்.

இப்படி முட்டி மோதியதில் அந்த மூங்கில் மரம் சாய்ந்தது. இதனால் வான் வெளியில் ஓட்டை ஏற்பட்டது. அதிலிருந்து வெள்ளம் பெருக்கு எடுத்தது. அனைவரும் கொல்லப்பட்டனர். ஆயின் பெண்ணரசி நூடுவாவும் அவள் படையும் மட்டுமே அழிவிலிருந்து தப்பினர். அவளுடைய தெய்வீக ஆற்றல் அவளையும் அவள் படைஞரையும் பாதுகாத்தது. ஐந்து வண்ணங்களில் உள்ள கற்கள் கொண்டு உருக்கிய சாந்து கொண்டு வானில் ஏற்பட்ட ஓட்டையை அவள் அடைத்தாள். அதனால் வெள்ளம் நின்றது.

+++

www.t.me/DigitalNoolagam

**கொரியா:** பனிக்காலத்தில் கீழே விழுந்துவிடாத பசிய இலைகள் கொண்ட மரத்துக்கும் வானுலக தேவன் ஒன்றுக்கும் மகன் பிறந்தான். அச்சிறுவனுக்கு ஏழு அகவையாக இருந்த போது தேவன் வானுலகம் சென்றான். ஒருநாள் திடுமென அடைமழை பிடித்தது. பல திங்கள்கள் மழை இடையறாது கொட்டியது. நிலம் நீரில் மூழ்கியது. கடற்கோள் நடந்தது. அந்த மரம் கீழே சாய்ந்துவிடும் அபாயம் நெருங்கிற்று. அலைகள் தன்னை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டால் மிதக்கும் மரம் மீதேறித் தப்பிக்க வழி சொன்னது மகனுக்கு! பலநாள் அவ்வாறே மரத்தைப் பற்றிக் கொண்டு அவன் மிதந்தான். ஒருநாள் நிறைய எறும்புகள் நீரில் தத்தளிப்பதைக் கண்டான். தங்களைக் காப்பாற்றுமாறு எறும்புகள் அவனிடம் இறைஞ்சின. மரத்திடம் அனுமதி பெற்று எறும்புகளைக் கிளைகளில் ஏறிக் கொள்ளச் சொன்னான் மகன். அப்போது அங்குப் பறந்து வந்த கொசுக்கள் தங்களுக்கும் புகலிடம் தருமாறு அவனை மன்றாடின. மீண்டும் மரத்தின் அனுமதி பெற்றுக் கொசுக்கள் ஓய்வெடுக்க இடந்தந்தான். இன்னொரு பையன் வெள்ளத்தில் மிதந்து வந்தான். அவனும் அடைக்கலம் கேட்டான். மரம் அனுமதி மறுத்தது. மீண்டும் மீண்டும் இருமுறை மகன் அனுமதி நாடினான். மூன்றாம் முறை அவன் கேட்டபோது உன் விருப்பம் போல் செய்து கொள் என்றது மரம். கடைசியாக மிதந்து வந்த மரம் மலை உச்சியை அடைந்து தரை தட்டியது. பூச்சிகள் நன்றி கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றன. இரண்டு சிறுவர்களுக்கும் கடும்பசி. அலைந்து திரிந்து ஒரு வீட்டைக் கண்டுபிடித்தார்கள். முதியபெண்மணி ஒருத்தியும் அவள் மகளும் வளர்ப்பு மகளும் அந்த வீட்டில் வசித்தனர். உலகில் உள்ள அனைவரும் மடிந்துவிட்டமையாலும் வெள்ளம் வடிந்து விட்டமையாலும் மீண்டும் வேளாண்மை செய்ய வேண்டியது இருந்ததாலும் மகள்களுக்குத் திருமணம் செய்விக்க அம்மூதாட்டி எண்ணினாள். புத்திசாலிப் பையனுக்குத் தன் சொந்தப் பெண்ணை கட்டிக் கொடுக்க நினைத்தாள். இரண்டாவதாக வழியில் தொற்றிக் கொண்ட சிறுவன் வேண்டுமென்றே மூதாட்டியிடம் மரத்தின் மைந்தனுக்கு மணலில் கலந்துவிட்ட உணவுத் தானியத்தை விரைந்து பொறுக்கி எடுக்கும் திறன் உள்ளது என்று பொய் சொன்னான். அவனைச் சோதிக்க முற்பட்டாள் கிழவி. மரத்தின் மைந்தன் மலைத்தான். தடுமாறினான். எறும்புகள் உதவின. விரைந்து சேகரித்து மூட்டை கட்டி வாகை சூட்டினான். முதல் பையனே இச்சாதனை புரியவில்லை. எறும்புகள் உதவியோடு ஈடேறியது எனக் குழப்பினான் இரண்டாமவன். மூதாட்டிற்கு மூளை குழம்பியது. முடிவெடுக்க முடியாமல் திணறினாள்.

www.t.me/DigitalNoolagam

இருட்டறைகளில் இரண்டு பெண்களை அடைத்து அதில் எவன் போகிறானோ அவனுக்கே அந்தப் பெண் என மூதாட்டி முடிவு எடுத்தாள். எந்த அறையில் மூதாட்டியின் சொந்த மகள் இருக்கிறாள் என்பதைக் கொசு மரத்தின் மைந்தன் காதுகளில் ஓதிவிட்டது. அங்குச் சென்றான். அவர்கள் மணந்து கொண்டனர். இரண்டாமவன் வளர்ப்பு மகளைக் கட்டிக் கொண்டான். இவ்விரு தம்பதிகளிடமிருந்தே மனிதகுலம் உருவாயிற்று.

+ + +

சிம் என்பவன் தந்தையைத் திருடர்கள் கொன்று விட்டனர். அத்திருடர்களைத் தேடிச் சென்று பழிதீர்க்க மகன் நினைக்கிறான். போகிற வழியில் தன்னைப் போலவே அந்தத் திருடர்களால் பாதிக்கப்பட்ட இன்னொருவனைச் சந்திக்கிறான். இருவரும் உடன்பிறப்புப் போல இனி வாழ்வதென முடிவு செய்கிறார்கள். ஆற்றைக் கடக்கும் போது வீசிய புயலால் அவர்கள் சென்ற படகு கவிழ்கிறது. இருவரும் பிரிகிறார்கள். அதே கொள்ளைக் கூட்டத்தால் கொல்லப்பட்டவனின் மகன் ஒருவனை மீண்டும் சிம் சந்திக்கிறான். அவர்கள் உறவும் அவர்களது படகும் கவிழவே பிரிவில் முடிகிறது. சிம்மைக் காப்பாற்றிய ஒரு கிழவி அவனை ஒரு தீவில் பத்திரமாகப் பதுக்கி வைக்கிறாள். சிம்முக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறாமையால் ஏதும் செய்ய இயலாது அடைப்பட்டுக் கிடந்தான்.

ஒருநாள் புதிர்போல ஒரு புதியவன் வந்தான். தன்னுடன் புறப்பட்டு வருமாறு சிம்மை அழைத்தான். 16 அகவை அடையும் வரை மலை ஒன்றில் தங்கி அப்புதியவனிடம் மந்திர தந்திரங்களை கற்றுச் சிறக்கிறான் சிம். அப்போது அவன் குரு சொல்கிறார். "போய்த் திருடர்கள் பிடியில் சிக்கிக் கொண்டுள்ள அரசனை மீட்டிடு" என! மீண்டும் மூன்றாண்டு கழித்து, சிம்மைச் சந்திப்பதாகச் சொன்ன அந்தக் குரு விடைபெறுகிறார். சிம் புறப்படுகிறான் குருவின் கட்டளையை முடிக்க! போகிற வழியில் மந்திரப் புரவி கிடைக்கிறது. படைக்கலன்கள் கிடைக்கின்றன. அவன் அரசனின் மாளிகை அடையும் போது அவை சரண் அடையும் நிலையில் இருப்பதைக் காண்கின்றான். எதிர் முகாமில் கருப்பு முகம் ஒன்று நெருப்பு உமிழ்வதையும், மந்திர ஆவி ஒன்று காலக் கணிதம் கணிப்பதையும் வாலாட்டும் எலி ஒன்றின் வாலின் இருந்து கிளம்பும் வெள்ளம் அம்மாளிகையை மூழ்கடிக்கப் பார்ப்பதையும் சிம் காண்கின்றான். அரசனின் படைமுகாம் மீது நெருப்பலைகளை வீசும் பூதத்தையும் காண்கின்றான். சிம் தான் கற்ற மந்திர தந்திரங்கள் துணையோடு அவர்களிடம் போர்

www.t.me/DigitalNoolagam

புரிகிறான். எதிரிகள் எண்ணிக்கை மிகுதியால் தோற்கிறான். அரசனோடு புறமுதுகிட்டு ஓடி, தீவு ஒன்றுக்குச் செல்கிறான். எலி அந்தத் தீவையும் தன் வாலிலிருந்து வெளிப்படும் வெள்ளத்தால் மூழ்கடிக்கிறது. ஒரு பட்டாம்பூச்சி தொலைதூரத்தில் உள்ள மலைக்குகை ஒன்றுக்கு அவனைப் பாதுகாப்பாக வழிநடத்திச் செல்கிறது. அங்கே முதலில் தான் சந்தித்து வழியில் தவறவிட்ட நண்பனைச் சந்திக்கிறான். மீண்டும் அந்த நண்பன் துணையோடு போருக்குப் போகிறான்.

அந்தப் போரில் நண்பன் கொல்லப்படுகிறான். அந்தத் தீவும் மூழ்கிப்போயிற்று. சிம்மும் அரசனும் இரண்டாவது தீவு ஒன்றுக்குப் பின் வாங்குகின்றனர். ஒரு காகம் தோன்றி இன்னொரு மலைக்குகைக்குச் சிம்மை வழி நடத்திச் செல்கிறது. அங்கு இரண்டாவதாகத் தான் தொலைத்த நண்பனைக் காண்கின்றான். இருவரும் மீண்டும் போருக்குச் செல்ல இந்த நண்பனும் போரில் கொல்லப்படுகிறான். இரண்டாவது தீவும் நீரில் மூழ்குகிறது. மூன்றாவது தீவுக்குச் செல்கின்றனர். அங்கும் வெள்ளம் துரத்தவே கப்பல் ஒன்றில் அடைக்கலம் ஆகின்றனர். மூன்றாண்டுகள் கழித்து வருவதாகச் சொன்ன குரு வருகிறார். நடந்தது அறிகிறார்.

அவரது மந்திரத்தின் பயனாக வானிலிருந்து இடிகளை இறக்கி எதிரிகளைக் கொன்றழிக்கிறார். அதன்பிறகு பகையாளி வசமிருந்த தீவுக்குச் சிம் போகிறான். அங்கு அவன் தன் தாயைச் சந்திக்கிறான். இரண்டாம் நண்பனின் தங்கையை மணந்து கொள்கிறான்.

உலகத்தொன்மங்கள் யாவும் கடற்கோள் பற்றிப் பேசுகின்றன. இந்தத் தொன்மங்களை ஒப்பீடு செய்தாலே மனிதகுலப் பொதுப்பண்பாடு பற்றிஅறிதல் முடியும்.

www.t.me/DigitalNoolagam

## உலகெலாம் தமிழன் பரவினான் எனும் உண்மை மெய்ப்பிக்க முனைக!

இலெமூர் என்பது தேவாங்கைக் குறிக்கும். தேவாங்கு போன்ற உயிரினம் வாழ்ந்தது என்பதாலேயே இலெமூரியாக் கண்டம் அப்பெயர் பெற்றது.

*பூமியின் நடுக்கோட்டை அடுத்த நாடுகளில் பெரிய காற்றுக் குழப்பங்களும் எரிமலைக் குழப்பங்களும் தோன்றுதல் இயல்பு. எரிமலைக் குழப்பங்களால் தரைப்பாகங்கள் கடலுள் மறைந்தபோதிலும் கடலுள் தரைகள் எழுதலும் இயல்பு. ஒரு காலத்தில் பெரிய எரிமலைக் குழப்பத்தினால் நாவலந்தீவு சின்னாபின்னமாக்கப்பட்டது.*

*இந்துமாக்கடல் பசிபிக் கடல்களின் இடையிடையே தீவுக் கூட்டங்களாக விளங்குவன நாவலந்தீவின் பகுதிகளே. அவை நாவலத்தீவில் இருந்த பெரிய மலைகளின் சிகரங்கள் ஆகலாம். நாவலந்தீவு சிதறுண்ட போது அங்கு வாழ்ந்த மக்களில் எண்ணில்லாதோர் மாண்டனர். பலர் ஒருவாறு தப்பிப் பிழைத்தனர். உலக மக்கள் எல்லோரிடையேயும் பெரிய கடல்கோள் ஒன்றைப் பற்றிய பழங்கதை வழங்குகின்றது. ஒவ்வொரு மக்களிடையேயும் வழங்கும் அப் பழங்கதைகள் எல்லாம் சிற்சில மாறுதல்களைவிட ஒரே வகையாகக் காணப்படுகின்றன. அவ்வரலாறு மக்கள் எல்லோரும் ஒரு மத்திய இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நேர்ந்த பெரிய வெள்ளப் பெருக்கு ஒன்றின் ஞாபகமே என்று நன்கு அறியக் கிடக்கின்றது. பெரிய வெள்ளப் பெருக்குக்குத் தப்பிப் பிழைத்த சத்திய விரதன் என்னும் தமிழ் மனுவில் இருந்து உலக மக்கள் தோன்றிப் பெருகினார்கள் எனப் புராணங்கள் நவில்கின்றன. கிறித்துவ வேதத்தில் அப்பெரிய*

www.t.me/DigitalNoolagam

*வெள்ளப்பெருக்கைப் பற்றிய வரலாறு கூறப்படுகின்றது. அவ்வரலாறு யூத மக்களுக்குச் சாலடிய மக்கள் வாயிலாகக் கிடைத்தது.*

சாலடியர் சோழ நாட்டினின்றும் சென்று மேற்கு ஆசியாவில் குடியேறிய மக்கள் ஆவர்.

*மேற்கு ஆசிய மக்களும் தமிழ் மக்களும் ஒரே மக்கட் குலத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப் பட்டமை யாலும் இருமக்களின் பண்டை நாகரிகமும் பெரிதும் ஒத்திருந்தமையாலும் மேற்கு ஆசிய மக்களே இந்திய நாட்டை அடைந்தவர் களாவர் என ஆராய்ச்சியாளர் கருதலாயினர். இன்றைய ஆராய்ச்சியில் மேற்கு ஆசிய மக்களே இந்திய நாட்டினின்றும் மேற்கு ஆசிய நாடுகளில் சென்று குடியேறியவர்களாவர் எனத் தெளிவுறுகின்றது.*

*சோழ நாட்டினின்று சென்று தைகிரசு, யூபிராதசு ஆற்றின் வடபால் குடியேறிய மக்கள் தம் நாட்டுக்குச் சால்தியா எனப் பெயரிட்டார்கள் என்றும் அப்பெயர் சோழ தேசம் என்பதன் திரிபாகும் என்றும் ஏ.சி. தாசு என்பார் தமது இருக்கு வேத நூலில் நன்கு விளக்கிப் போந்தார்.*

*சிந்துப் பிரதேசத்திலிருந்து நமது நாகரிகமும் பாபிலோனியா எகிப்து முதலிய தேசங்களுக்கும் பரவியது. அவ்விடங்களில் இருந்து இந்தியாவிற்குப் பரவியது என்ற அய்ரோப்பிய ஆராய்ச்சியாளரின் எண்ணம் தவறென்றே கருத வேண்டும் பாபிலோனியாவில் கி.மு. 700 இல் ஒரு தமிழ்க் குடித்தனம் இருந்தது.*

*தென்னாட்டிலிருந்து தமிழ் நாகரிகம் உரோமாபுரிக்கும் கிரேக்க நாட்டிற்கும் பரவியது. இன்றும் தக்கிண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி நில மக்கள் யவன தேசத்துக்கும் சென்று தங்கள் அரசை நிலைநிறுத்தித் தங்கள் பெயரையும் அந்நாட்டிற்குக் கொடுத்தார்கள். இதுவே கிரீட் தேசம். இதன் நாகரிகத்துக்கும் தமிழ் நாகரிகத்திற்கும் ஒப்புமை மிகுதியாயுள்ளது*

www.t.me/DigitalNoolagam

என வி.ஆர். இராமச்சந்திர தீட்சதர் என்ற வரலாற்று ஆய்வாளர் எழுதுவார்.

எனவே உலகத் தொன்மங்கள் பிறருடைய கதைகளல்ல. நமது உறவுகளின் கதைகள்! தமிழர் பரவல் நிகழ்ந்தமைக்கான தடயங்களை இத்தொன்மங்களில் தேடலாம். குமரிநாட்டில் நாற்பத்தொன்பது பிரிவுகள் இருந்தன என்பது சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் அறிய முடிகின்றது. அங்குக் குமரி, பஃறுளி என்றும் ஆறுகளும் குமரி என்னும் மலையும் இருந்தன எனச் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம். செங்கோன் தரைச்செலவு என்றும் நூலால் அங்கிருந்த மணிமலை, பேராறு என்னும் சில மலைகள், இடங்களின் பெயர்களும் அறிய வருகின்றன. செங்கோன் தரைச்செலவு என்பது குமரிநாட்டில் இருந்த அரசனாகிய செங்கோன் மீது பாடப்பட்ட தமிழ்நூல். அதன் சில பாடல்களே கிடைத்துள்ளன. மிகப் பழமை வாய்ந்த நூலில் இருந்து இடப் பெயர்களை அறிகிறோம். தமிழர் வரலாற்றுக் கட்டமைப்பில் இடப்பெயர் ஆய்வும் ஒரு துறையே! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற மொழிக்கேற்ப வரலாறு எழுத இடப் பெயரும் ஒரு கருவியே எனச் செம்மையுடன் அதனைச் செய்தவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தில் இன்று துணைத் தேர்தல் ஆணையராக உள்ள பாலகிருட்டினன். தமிழ் வழியில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் வென்று உயர்பதவி வகிக்கும் இத்தமிழர் இந்தியாவெங்கும் தமிழர் பரவி இருந்தமையை விளக்குகிறார்.

தமிழ் என்று தொடங்கும் ஊர்ப்பெயர்களைப் பட்டியல் இட்டார். ஆந்திரப் பிரதேசத்தில் 29 ஊர்களும் அருணாச்சலப் பிரதேசத்தில் 11 ஊர்களும் அசாமில் 39 ஊர்களும் தமிழ் என்ற முன் ஒட்டுடன் தொடங்குவதைச் சொன்னார். பீகாரில் காடா மாவட்டத்தில் கோடா என்று முடியும் 12 ஊர்களில் ஒரு ஊராகத் தமிழ்க் கோடா இருக்கக் கண்டார். பீகாரில் 53 ஊர்ப்பெயர்கள் தமிழ் என்று தொடங்குகின்றன. குசராத்தில் 5 ஊர்கள் தமிழ் என்று தொடங்கின. குசராத் தலைநகர் ஆமதாபாத்தை ஒட்டிய இலக்குமி நாராயணன் கோயில் அடுத்துள்ள அருங்காட்சியகத்துக்கு வாலறிவன்-சரோசா வாலறிவன்இணையரின் அன்பு மகள் இளவேனில் என்னும் சிறுமி என்னை இட்டுச் சென்றாள். அங்குள்ள காட்சிப் பொருள்களுக்கும் ஓவியங்களுக்கும் கீழே விளக்கவுரைகள் எழுதப்பட்டிருந்தன. ஒரேயொரு படம் தவிர்த்து! மன்னன் அரியணையில் இருக்கிறான்! அவன் முன் வீராவேசமாகக் கையில் சிலம்பு ஓங்கியபடி நிற்கிறாள் ஒருத்தி! இன்னொரு சிலம்பு

www.t.me/DigitalNoolagam

உடைந்து அதன் பரல்கள் தரையில் சிதறி உள்ளன. மன்னன் திகைத்து நிற்கும் ஓவியம் விளக்கம் எதுவுமில்லாமல் உள்ளது. கண்ணகி கதை கூச்சர மக்களிடையே நிலவியது என்பதற்கு இந்த ஓவியம் சான்றாகும். தமிழக அரசும் அதன் தன்னிகரில்லா முதல்வரும், நரேந்திரமோடிக்கு இப்பிழையைச் சுட்டிக்காட்டி அந்த ஓவியத்திற்குரிய கண்ணகி வரலாற்று விளக்கத்தை எழுதச் செய்தல் வேண்டும்.

கோவாவில் 5 ஊர்கள் தமிழில் தொடங்கின. அரியானாவில் 3, இமாச்சலப் பிரதேசத்தில் 34, கர்நாடகாவில் 24, மகாராட்டிராவில் 120, மேகாலயாவில் 5, மணிப்பூரில் 14 என்று தமிழ் எனத் தொடங்கும் ஊர்களைப் பட்டியல் இடுகிறார்.

மத்தியப் பிரதேசத்தின் சிந்துவாரா மாவட்டத்தில் தாமியா என்ற ஊர் உள்ளது. 60 ஊர்கள் மத்திய பிரதேசத்தில் தமிழ் என்று தொடங்குகின்றன. தமிழ்க் கோடா என்றும் தமிழ்க்குடி என்றும் ஊர்ப் பெயர்கள் தொடங்குவதைக் காட்டிலும் வியப்புக்கு உரிய தகவலைப் பாலகிருட்டினன் பதிவு செய்கிறார். தமிழ் என்று தொடங்கும் ஊர்களுக்கருகே பழனி, தேக்கடி, தேனி, போடி என மதுரை மாவட்டத்தில் உள்ள பல பெயர்களிலும் ஊர்ப் பெயர்கள் இருந்தன. இருக்கின்றன.

நாகாலாந்தில் 4, ஓரிசாவில் 84, பஞ்சாபில் 4, இராசசுதானில் 26, தமிழ்நாட்டில் 10, உத்திரப்பிரதேசத்தில் 64 மேற்கு வங்கத்தில் 24 என இந்தியாவெங்கும் எல்லா மாநிலங்களிலுமுள்ள 612 ஊர்ப் பெயர்கள் தமிழ் என்று தொடங்குவதாகப் பாலகிருட்டினன் கூறுவார்.

தொன்மம் தொடங்கி ஊர்ப் பெயர்வரை உலக ஒருமையை உலகெங்கிலும் தமிழரின் பரவலைக் காட்டும் தடங்களைத் தேடித் தொகுத்துத் தமிழ் வரலாற்றுக்குப் புதிய கலைக் களஞ்சியத்தை உருவாக்க ஆய்வாளர்களை அழைக்கிறேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய குடியெனப் பாவலன் நம் பெருமையைப் பாடினான். நம்மை நாமே மெச்சி மகிழ்ந்தோம். ஆயின் இந்தப் பாடல் வரியில் தமிழர் தொன்மை நிறுவ வழி ஒன்று காட்டினார் அக்கவிஞர். அதை நாம் இதுகாறும் எண்ணிப்பார்க்கவில்லை. தமிழகத்தின் கற்கள் பற்றிய ஆய்வும் அவற்றின் காலக் கணக்கீடும் நம் பழமையை அறிவியல் அடிப்படையில் நிறுவத் துணைபுரிபவை.

பாறைகளை முப்பிரிவினவாகப் பகுப்பார்கள். 1. தணற்

www.t.me/DigitalNoolagam

குழம்பு சார் பாறை 2. படிவுப்பாறை 3. உருமாற்றப் பாறை. இப்பாறைகளின் காலக் கணக்கீடு அறிவியல் முறைப்படி செய்யக் கூடியதே! அதனைக் கதிரியக்கக் காலக் கணக்கீடு என்பார்கள். அப்படி செய்வோமாயின் நம் வரலாறை ஈராயிரமாண்டுக்கு முன்னோ பின்னோ என்ற அளவில் குறுக்கப் பார்க்கும் கூட்டம் வாயடைத்துப் போகும்! நம் வரலாறும் வாழும்.

Mesozoic Era எனப்படும் இடைக்கால உயிரிகள் ஊழி 248.2 பன்னிலக்கமாண்டுகள் (Million years) தொடங்கித் தற்காலத்துக்கு முந்திய 65 பன்னிலக்கம் ஆண்டு வரை நீண்ட நெடிய காலமாகும். எல்லா நிலங்களும் பங்கேயா என்ற பெருங்கண்டமுடன் இணைந்திருந்த காலமாகும். இந்தியத் துணைக்கண்டத்தின் அடிக் கண்டமும் புதை வடிவமண்ணும் (Carboniferous era) எனப்படும் கரியம் உண்டாக்குகிற காலமான தற்காலத்துக்கு முந்தைய 320286 பன்னிலக்கம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. பெருங்கண்டமாகப் பங்கேயா இருந்த காலத்தில் நாம் இருக்கும் துணைக் கண்டம் இருந்துள்ளது. இன்றுள்ள இந்தியா வடிவில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆயின் நம் நிலம் உலகப் பெருநிலத்தின் ஓர் அங்கமாகவே இருந்துள்ளது. இலக்கிய வாணர் கல்தோன்றி மண்தோன்றாக் காலம் பற்றி இயம்பினால் நீங்கள் ஏற்க மறுக்கலாம். நிலவியலார் நமது கண்டத்தின் பாறைகள் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும்போது எப்படி ஏற்க மறுப்பீர்கள்?

பங்கேயா வடக்கே இலாராசியாகவும் தெற்கே கோண்டுவானா வாகவும் பிரிந்தது. (Cretaceous Era) எனப்படும் சீமைச் சுண்ணாம்பு ஊழியான தற்காலத்துக்கு முந்திய 1442லிருந்து 65 பன்னிலக்கம் ஆண்டுக்குள் இப்பிளவு நேர்ந்தது. இந்தியாவில் தற்காலத்துக்கு முந்திய 98 பன்னிலக்கம் ஆண்டுகளுக்குரிய புதைவடிவப் பெரும்பல்லி (Dinosaur) கிடைத்துள்ளது. தென்னிலப் பரப்பு உடைந்து ஆசியத் தட்டு நோக்கி மிதந்தது. வட இந்தியா அப்போது கடலுள் அமிழ்ந்திருந்தது. இராசதானியிலும் கட்ச் பகுதியிலும் கிட்டும் கடல்கள் புதைவடிவங்கள் (Oceanic Foils) மணிச்சுண்ண ஊழிக்காலம் (Jurassic Period) எனப்படும் தற்காலத்துக்கு முந்திய 213144 பன்னிலக்கம் ஆண்டுக்குரியவை என அறியப்பட்டுள்ளது. ஆனால் இமயப் பகுதியில் இடைக்கால உயிரிகள் ஊழி (Mesozoic Era) சார்ந்த மீனினப் புதைபடிவச் சான்றுகளே கிட்டுகின்றன. நாம் கி.மு., கி.பி. என்பது போல நிலவியலில் (Before Present) என்பது தற்காலத்துக்கு முந்திய காலமெனச் சுட்டப்பயன்படுகின்றது.

சீமைச் சுண்ணாம்பு ஊழிக்கும் (Teritiary period) எனப்படும் கடைநிலை ஊழிக்கும் இடைப்பட்ட தற்காலத்துக்கு முந்திய 65

www.t.me/DigitalNoolagam

லிருந்து 1.64 பன்னிலக்கம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தெக்கண பீடபூமியில் எரிமலைக் குழம்புகள் எங்குநோக்கிலும் படிந்தன என்பதும் அறிவியலார் ஆய்வாகும். தற்காலத்துக்கு முந்திய 35.4 பன்னிலக்கம் ஆண்டுகளுக்கும் 23.3 பன்னிலக்கம் ஆண்டுக்கும் இடையில் மற்றும் 23.3 லிருந்து 5.2 பன்னிலக்கம் ஆண்டுகளுக்கும் இடையில் அங்காரத் தட்டின் தென்பகுதியில் இமயம் கடலில் இருந்து எழுந்தது. திராவிடத்துக்கும் இமயத்துக்கும் இடையே 2 6000 மீட்டர் ஆழமுள்ள (Tethy sea) தெத்திசு கடல் இருந்தது. இந்தக் கடல் அப்போதைய ஆறுகள் கொண்டு வந்து சேர்ந்த கழிவுகளால் மெல்ல மெல்லத் தூர்க்கப் பட்டது. 1.8 பன்னிக்கலக்கமாண்டு முன் சிந்து-கங்கை-பிரம்மபுத்திரச் சமவெளி இப்படித்தான் உருவாயிற்று.




அந்தக் காலம் முதல் ஏறக்குறைய அதே (Latitude) எனப்படும் அகலாந்தில் அதே தட்பவெட்பச் சூழலில் தான் இருந்து வருகிறது. புவி வெப்பமயமாதல் விளைவுகளும் புவிதட்பவெட்ப மாறுபாடு களும் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து சற்றேக்குறைய அதே இந்தியா தான் நம் ஆய்வுக் களமாகும். பனி ஊழியில் இமயம் தற்போதுள்ளது போல் கடல் மட்டத்தில் இருந்து 4000 மீட்டர் உயரமாக இல்லை. அந்த உயரத்தில் 1800 மீட்டர் கம்மியாகவே இருந்தது. கடல் மட்டமும் இப்போதுள்ளதைக் காட்டிலும் 100 முதல் 150 மீட்டர் ஆழம் குறைவாகவே இருந்தது. அந்தமான் தீவுக் கூட்டமனைத்தும் ஒரே நிலப்பரப்பாக இருந்தது. இலங்கைத்தீவு இந்தியாவுடன் இணைந்திருந்தது.

அறிஞர் ந.சி. கந்தையப்பிள்ளை,

*தமிழரின் இன்னொரு கூட்டத்தினர் பாரசீகக் குடாக் கடல் வழியே சென்று தைகிரசு - யூபிழதிசு*

www.t.me/DigitalNoolagam

*ஆறுகளின் கீழ் ஓரங்களில் குடியேறினார்கள். இவர்கள் ஆற்றினின்றும் நீரைக் கால்வாய்களால் வயல்களுக்குப் பாய்ச்சி வேளாண்மை செய்தனர். அவர்களின் தலைநகர் சுசா. சுமேரியாவில் ஓர் இடத்துக்கும் ஒரு மலைக்கும் எல்லாம் என்றும் தமிழ்ப் பெயர் வழங்கிற்று. எல் என்பது ஞாயிறைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். இந்தியாவின் தென்கோடியில் உள்ள இலங்கையின் பழைய பெயரும் எல்லம். எல்லம் என்பதே பிற்காலத்தில் ஈழம் என்று திரிந்து வழங்கிற்று. ஈழம் என்பதன் அடி அல் எனமொழி நூலார் ஆராய்ந்து காட்டியுள்ளார்கள். எல்லம் என்ற இடப்பெயர் களின் ஒற்றுமையால் சுமேரியர் ஒரு போது இலங்கைத் தீவினின்று சென்ற மக்கள் ஆவார்களோ? என்பது ஆராயத்தக்கதாகின்றது.*

என்பார்.

சுமேரியாவுக்கு வடக்கே குடியேறி வாழ்ந்த தமிழர் அக்கதியர் எனப்பட்டனர். இச்சொல் ஒருபோது அந்தப் பக்கத்தில் குடியேறி உள்ளவர்கள் என்ற பொருளில் (அப்பக்கத்தார்) வழங்கி இருக்கலாம். பின்னர் அவ்விடங்களில் சோழ நாட்டினின்று வெளிப் போந்த ஒரு கூட்டத்தார் சென்று தங்கி வாழ்ந்தனர். அவர்கள் அந்த நாட்டுக்குச் சோழ தேசம் என்று பெயரிட்டார்கள். சோழ தேசம் என்பதே கல்தேயா எனத் திரிந்தது எனவும் அறிஞர் ந.சி. கந்தையா கூறுவார். தமிழர் வரலாற்றை தமிழ்நாட்டுக்குள் மட்டும் தேடினால் போதாது. தமிழ் நிலத்தில் மட்டும் தேடினால் போதாது. தமிழ்நாட்டை ஒட்டிய கடலில் மட்டும் தேடினால் போதாது.

நாவலந் தீவே இறலித் தீவே, குசையின் தீவே இரவுஞ்சத் தீவே, சான்மலித்தீவே தெங்கின் தீவே, புட்கரத் தீவே எனத் தீ வேழே, ஏழ்பெரந் தீவும் ஏழ்பொழில் எனப்படும் என்பது திவாகார நிகண்டு. ஆகத் தீவாக இருந்தது தமிழ்நிலம்.

அத்தீவாக எங்கிருந்தோம் என்று அறிவியல் சொல்லுமிடம் எல்லாம் கடலடியில் தமிழ் நாகரிகத்தைத் தேடுவோம்.

பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி

www.t.me/DigitalNoolagam

எனச் சிலப்பதிகாரம் சொன்னால் அது கட்டுக்கதை என நூலெழுதும் தமிழ்ப் பேசுவோராகப் பிறந்தும் தாம்யாரென்றறியாப் பேதையர் தருக்கடக்க உலகின் மூலை முடுக்கெல்லாம் கிடைக்கும் தரவுகளைத் தடயங்களைத் திரட்டுதலே தமிழர் கடனாகும்.

எனவே புதிய ஆய்வுகள் தொடரல் வேண்டும். வரலாறு புத்துருவாக்கம் செய்யப்படுதல் வேண்டும். பெரிய வெள்ளப் பெருக்குக்குப் பிற்பட்ட மக்கள் அல்லது ஹெமத்திய இந்திய மத்திய தரை மக்கட்கும் நூலெழுதிய பாதிரியார் எச். ஈராசு அன்று சொல்லிச் சென்றார்.

> *யான் பல்லாண்டுகளாகப் பிற்கால இந்திய மக்களின் நாகரிகத்தைக் குறித்து இந்தியாவிலும் இசுபெயின் நாட்டில் இருந்தும் ஆராயலானேன். அவ்வாராய்ச்சி பெரிய வெள்ளப்பெருக்குப் பிற்பட்ட மக்களின் வரலாற்றையும் அம்மக்கள் பற்பல கிளைகளாகப் பிரிந்து சென்று பற்பல குலத்தினராகப் பெருகிய வகையையும் விளக்கு வதாகின்றது. யான் ஆராய்ந்து கண்ட அளவில் பழைய திராவிட மக்கள் தமது நாட்டை விட்டு உவண்ணா, ஓடக்கோன் என்பவர்களின் தலைமையின் கீழ்ச் சுமேரியாவை வரலாற்று ஆசிரியர் பெரசொஸ் என்பவரும் குறிப்பிட்டுள்ளார். அமரியாஜில் குடியேறிய மக்கள் மொகஞ்சதரோவால் உள்ளன போன்ற வீடுகளைக் கட்டினார்கள். விவிலிய மறைவின் ஆதி ஆகமம் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளது. சுமேரிய வகுப்பைச் சேர்ந்த மக்களே சிரியாவிலும் குடியேறினார்கள். கிதைதி ஆட்சிக்குத் தளம் இட்டார்கள் இம்மக்களே ஆவர். அங்கு நின்றும் பெயர்ந்த மக்கள் சில மத்தியத் தரைக் கடல் ஓரங்களில் குடியேறினார்கள். அவர்கள் பினிசியர் எனப்பட்டனர். இது மனையசு என்ற பெயரின் திரிபு. முற்காலத்தில் பெரிய வாணிகத் துணிவுடையவர்களாக இருந்தவர்கள் இவர்களே! இவ்வினத்தினர் சிலர் கிரேக்க நாட்டிலும் இத்தாலியிலும் குடியேறி முறையே மீனவர், எதிருஅசுர் என்றும் பெயர் பெற்றனர். திராவிடர் சிலர் பேமென் என்றும் இடத்தில் குடியேறி இருந்தார்கள்*
>
> *அவர்கள் இங்கு ஏமனிலிருந்து செங்கடல் வழியாகச் சென்று குடியேறி வியக்கத்தக்க எகிப்திய*

www.t.me/DigitalNoolagam

*பழைய நாகரிகங்களை அடிகோலிய இச்சாதியாரின் நாகரிகங்கள் எல்லாம் ஒரே வேரிலிருந்து முளைத்தன. அவை எல்லா முக்கியப் பகுதிகளிலும் ஒத்துள்ளமையால் பிற்கால இந்திய மத்தியத் தரை நாகரிகம் எனலாம்*

என அறிஞர் ஈராசு கூறிப் பல்லாண்டுகள் உருண்டோடிவிட்டன. பெருவெள்ளத் தொன்மங்களில் தொடங்கிப் பல அகழாய்வு முடிவுகள் வரை கிடைத்த ஒப்பீடுகள் அடிப்படையில் எல்லா நாகரிகமும் ஒரே வேரில் இருந்து முளைத்தவை என்றார். பொதுப் பெயரும் சூட்டினார். மத்தியத் தரைக்கடல் அய்ரோப்பாவுடன் நின்று விடவில்லை. இமயம் வரை நீண்டது. இமயம் கடலாக இருந்தது. அந்தக் கடல் வழியே இங்கிருந்து நாகரிகம் பரவியது. இதற்கு நில அகழாய்வுச் சான்றுகள் இந்துச் சமவெளியில் கிட்டி விட்டன. கடலடியில் இனித் தேடுவோம்!

ஆபிரகாம் பண்டிதர் தமது கருணாமிருத சாகரம் நூலில்

*முன் தமிழ்நாட்டிலிருந்து மெசபெதோமியா, பாபிலோன், கல்தேயா, ஆசியா முதலியவிடங் களுக்குப் போய்க் குடியேறி இராச்சியங்களை ஸ்தாபித்துப் பிரபலமாய் ஆண்டு கொண்டிருந்த தமிழர்கள் மிகுந்த நாகரிகமுடையவர்களாய்ப் பல கலைகளில் தேர்ந்தவர்களாய்ப் பற்பல சாதியினராய் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் பேசிய தமிழ் மொழி எபிரேய, கல்தேய, பாபிலோனிய, அசீரிய, சுமேரிய, பாரசீக, போர்குவிய, பிராகிருத,சித்திய, ஆங்கிலோ செர்மானிய பாசைகளில் மிக ஏராளமாகக் கலந்து வருவதாலும் தமிழ்மக்களே மிகப் பூர்வ குடிகளாய் உள்ள மக்கள் என்றும், அவர்கள் பல கலைகளிலும், சங்கீதத்திலும் தேர்ந்து இருந்தார்கள் என்றும் அவர்கள் இருந்த நாடு கடலால் கொள்ளப்பட்ட காலத்தில் தங்குவதற்குச் சமீபத்தில் உள்ள ஆசியா, சின்ன ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஓசினியா என்னும் கண்டங்களின் கரையோரங்களில் தங்கினார்கள் என்றும் தப்பிப் பிழைத்தவர்களின் கலைகளின் தேர்ச்சிக்கேற்ற விதமாய் ஆங்காங்கே சிற்பம், சங்கீதம், சோதிடம் முதலிய அருங்கலைகள் விருத்தியாகிக் கொண்டு வந்தன என்றும் நாம் காண்பதற்கு உதவியாகச் சில சரித்திரக்*

www.t.me/DigitalNoolagam

> *குறிப்புகளைச் சொல்லியிருந்தேன். சுருக்கமாகச் சொல்லுமிடத்துச் சரித்திரக் காலம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலம் முன்பு உள்ள இலெமூரியா நாடு தமிழ்நாடாக இருந்தது என்றும் இலெமூரியாவில் பேசப்பட்டு வந்த பாசை தமிழாக இருந்தது என்றும் அது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாக வகுக்கப்பட்டு இலக்கண வரம்புகள் மிகுந்த தேர்ச்சி உடையதாக இருந்தது என்றும் அதன் பின் உண்டான பிரளயங்களில் அந்நாடு கொஞ்சம் கொஞ்சமாகக் கடலால் விழுங்கப்பட்ட பின்பு பலப் பல கதைகளும் இதைப் பற்றிச் சொல்லும் அரிய நூல்களும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து தற்போது அனுபவத்தில் இருக்கும் சொற்ப முறையே மிஞ்சி இருக்கின்றது என்றும் அறியலாம்*

என்பார் ஆபிரகாம் பண்டிதர். ஆக, கடற்கோளுக்குப் பின் தமிழர் கரையேறிய கண்டங்களிலும் அதையொட்டிய கடல்களிலும் எவர் எதைக் கண்டெடுத்தாலும் உள் வாங்கி அதனுள் தமிழர் வரலாறு ஒளிந்துள்ளதா என ஒவ்வொரு தமிழ் ஆராய்ச்சியாளரும் தம் அறிவை அகலப்படுத்திக் கொள்ள வேண்டும். அலசி ஆராய வேண்டும். ஆழத்தில் மூழ்கித் தேடும் அரும்பணி ஆற்றுமாறு ஒவ்வொரு முனைவரையும் முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் தூண்டுதலே என் கடன்!

www.t.me/DigitalNoolagam

# புதிய அறிவும் புத்துருவாக்கமும்

எல்லா அறிவியல் அடிப்படைகள் பற்றியும் புதிய உண்மைகள் புலப்படும் காலம். புதிய அறிவு ஊற்றெடுக்கும் உலகம். இதுகாறும் ஏற்கப்பட்ட முடிவுகளை அறிவியல் உலகம் புத்துருவாக்கம் செய்கிறது. புதுப்பொலிவு ஊட்டுகிறது. சிந்தனையைத் தூண்டும் செய்திகள் பல வெளிவந்துமுள்ளன. உலகில் உயிர்களின் தோற்றம் பற்றிப் புதுக் கண்ணோட்டம் உருவாகிவிட்டது.

சல்டார்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வில்லியம் மார்ட்டின் அவர்களும் கிளாசுகோவில் உள்ள இசுகாட்டிசு சுற்றுச்சூழல் ஆய்வு நடுவத்தின் முனைவர் மைக்கேல் இரசலும் புதிய கண்டுபிடிப்பை 2002 ஆம் ஆண்டில் (Dec 4, 2002 Science Daily) வெளியிட்டனர். இரும்புக் கனிமத்தின் சல்பைடு பாறைகளின் சிறிய தடுப்புகளுக்குள் உயிர்க்குஞ்சு பொறிக்கப்பட்டது என்பது அவர் தம் முடிவு.

1930 முதல் அறிவியல் உலகம் செல்களின் தோற்றமும் அன்றைய நிலவுலகின் சுற்றுச்சூழல் மாறுபாடுகள் விளைவித்த வேதியல் எதிர்வினைகள் காரணமாகவும் உயிர் அடங்கிய சிறிய கட்டுமானமும் தோன்றிற்று என்றது. முதலில் உயிரும் பின்னர் அது உறையச் செல்களும் உருவாக இயற்கை ஏற்படுத்திய மாற்றங்களே காரணம் என்றனர் அறிவியலார்.

இதை மறுத்து, செல்களே முதலில் தோன்றின. முதலில் தோன்றிய செல்கள் உயிருடையவை அன்று. கடலின் அடிமட்டத்தில் கும்மிருட்டில் இரும்புச் சல்பைடு பாறைகளில் செல் கட்டுமானம் நிகழ்ந்தது. ஹைட்ரஜன், சைனைடு, சல்ஃபைடு, கார்பன் மோனாக்சைடு போன்ற செழுமிய வேதியல்களடங்கிய குழம்பு கடல்அடியில் பூமியின் நொறுங்கிய அடிப்பாகத்திலிருந்து ஊற்றெடுத்துச் சின்னஞ்சிறு மாழைகளின் சல்ஃபைடுகளுடன் உயிர் உருவாகக் காரணமான செல்கள் வேதியல் எதிர் விளைவுகளால் ஏற்பட்டன. சுருங்கக் கூறின் இரும்புச் சல்ஃபைடு செல்களே உயிரின் தோற்றத்துக்கு உதவிய உடம்பாகும் என்பது இவ்விரு அறிஞர் கருத்தாகும்.

www.t.me/DigitalNoolagam

நம் உலகில் மட்டுமல்ல இப்பேரண்டத்திலும் பல கோள் களிலும் இதற்கு முந்தைய நம்பிக்கைக்கு மாறாக இங்கு உருவானதைப் போன்றே உயிர் உருவாகி இருக்கும் என்ற இந்த இரண்டு அறிஞர்கள் கண்டுபிடிப்பு உலகை உலுக்கியுள்ளது. பழைய கொள்கைகளைத் தடம்புரளச் செய்துள்ளது.

## கடலடியில் அல்ல! வான் வெளியில்

கடலடியில் அல்ல, வான் வெளியில் உயிர் தோன்றிற்று என்ற வாதமும் 2007 முதல் அறிஞர்களால் முன் வைக்கப்படுகிறது.

சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் உயிர் தோன்றி இருக்கக் கூடும் என அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துவதாகக் கார்டிஃப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் 2007இல் கருத்து வெளியிட்டனர். இலெய்கசெடர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மார்க்கு வில்லியம்சு ழான் ழலா சிய்விக்கூ ஆகிய இருவரும் உலகில் ஏற்படும் பருவ மாற்றங்களை மறு கட்டமைப்புச் செய்து 460 -445 மில்லியன் ஆண்டுகள் முன்பு இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் நம் காலத்திய மாற்றங்களுக்கும் ஒப்பீடு செய்து இப்போதுள்ளமை போன்றே அந்தப் பழம் பூமியும் இருந்ததாகச் சொல்லியுள்ளனர்.

**Life from Space : An emerging Paradigm:** நூலின் ஆசிரியரும் கார்டிஃப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான என். சந்திரா விக்கிரமசிங்கே நம் உலகின் மீது வந்து மோதிய எரி நட்சத்திரங்களில் இருந்து நுண்ணுயிரிகள் வந்தன. பூமி தானே உயிர்களைப் படைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகளைக் கொண்டிருக்கவில்லை. எரிநட்சத்திரங்களும் எரிகற்களும் தொடர்ந்து மண்ணுலகில் ஏற்பட்டுவிட்ட உயிர்களுடன் இயைந்து உயிர் உற்பத்தி செய்ய விதைகளை வாரி வழங்கி வருகின்றன என்கின்றார். இருப்பதை வைத்துக் கொண்டு இல்லாததைத் தேடியாக வேண்டும். இலக்கியங்களை வைத்துக் கொண்டு தமிழர் வரலாற்றைக் கட்டமைக்கச் சான்றுகள் தேடியாக வேண்டும். காலத்திற்கேற்ப மாற்றங்களை நாம் கொண்டு வந்ததாக வேண்டும். காலங்களுக் கேற்ப மட்டுமல்ல; காலமே மாற்றம் பெறும் காலத்தில் நாம் வாழ்கிறோம்.

அனைத்துலகப் பூமிச் சுழற்சி மற்றும் தகவல் அமைப்புக்குச் சேவையில் (International Earth Rotation and Reference system Service) உலகளாவிய 200 அணுக் கடிகாரங்களின் வலைப்பின்னல் உள்ளது. அணுக்களின் சீரான அதிர்வுகள் மூலம் ஒரு நாளின் ஒரு விநாடியின் பத்தில் ஒரு பங்குவரை துல்லியமாகக் கணக்கிட வல்லவை

www.t.me/DigitalNoolagam

இக்கடிகாரங்கள். ஆனால் உலகின் சுழற்சி அவ்வளவு துல்லியமாக இல்லை. நம் கடல் அலைகள் மீதான நிலவின் ஈர்ப்பால் முன்பு போல அதே அளவு வேகத்தில் உலகம் சுழலவில்லை. சுழற்சியில் தொய்வு ஏற்படுகிறது. வேகம் மட்டுப்படுகிறது. உலகின் நேரத்தையும் அணுக்கடிகாரங்களின் நேரத்தையும் ஒன்று போலச் சமநிலையில் வைத்திருக்க ஒரு சில ஆண்டுக்கொரு முறை அணு அடிப்படையிலான கால அட்டவணையில் ஒரு லீப் (Leap) விநாடி சேர்த்து இரண்டையும் சரி செய்கிறார்கள். Coordinated Universal time ஒருங்கிணைக்கப்பட்ட உலகளாவிய நேரம் இவ்வாறே குறிக்கப் படுகின்றது. யாதுமூரே! யாவருங்கேளிரெனக் கணியன் பூங்குன்றன் கழறியதைக் கருத்தில் இருத்தி நம் நேரத்தை உலகத்தோடு ஒட்ட ஒழுகி ஒருங்கிணைக்கப்பட்ட உலகளாவிய நேரத்தோடு பொருத்திடத் தமிழர்கள் முன்வரல் வேண்டும்.

நம் மரபில் கண்ணிமையை இமைத்தலுக்குரிய கால அளவை அடிப்படையாகக் கொண்டு காலக் கணக்கை அளக்கிறோம். இதில் உள்ள இடர்ப்பாடுகளைச் சற்றே சீர்தூக்கிப் பாருங்கள்.

> *தமிழ் மரபில் விநாடி எனும் அலகு குறிக்கும் கால அளவும் ஆங்கில மரபில் 1 செகண்ட் என்று குறிப்பிடும் கால அளவும் ஒன்று அல்ல. தமிழ் மரபில் 60×7.5×4×2 = 3600 விநாடி = ஒரு நாள் ஆகும். ஆங்கில மரபில் 24×60×60=86400 செகண்ட் ஒருநாள். ஆகவே தமிழரின் 3600 விநாடி = ஆங்கிலேயரின் 86400 செகண்ட் ஆகிறது. தமிழ் மரபில் 1 விநாடி = 86400 / 3600 =24 செகண்டு ஆக ஆங்கில மரபில் உள்ளது. 1 விநாடி 24 செகண்டுக்குச் சமம்*

என்பர். ஆனால் இன்று நடைமுறையில் ஆங்கில மரபை நாம் பின்பற்றுவதால் விநாடி என்ற தமிழ்ச்சொல் செகண்டு என்ற அலகைத் தமிழில் குறிக்கப் பிழையாகப் பயன்படுத்தப் படுகிறது.

இதன் காரணமாக நம் நாட்டில் உள்ள பல்வேறு மரபுகளை ஆய்ந்தறிந்து அவற்றில் உள்ள குறைகளை நீக்கி நிறைகளை ஒருங்கிணைத்து ஒரு முழுமையான காலக் கணிப்பு முறையை ஏற்படுத்த அருட்செல்வர் நா. மகாலிங்கம் முயன்றார். ஆங்கிலக் கணக்கு முறையுடன் நம் பழம்பஞ்சாங்க முறையைத் தொடர்புபடுத்தும் ஒரு முழுமையான கணிப்பு முறையாக நமச்சிவாய வேத வானியல் என்னும் கோட்பாட்டை உருவாக்கும் அறிஞர் குழு ஒன்றையும் உருவாக்கியுள்ளார்.

www.t.me/DigitalNoolagam

*ஆங்கில வழக்கில் ஒரு வருடத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை 365-365.25, 365.242757 எனப் பலவாறு உள்ளது போல் இல்லாமல் நமச்சிவாய வேத வானியல்படி ஒரு வருடத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை 365.25625 எனக் கணக்கிடப் படுமாம். ஆங்கில முறையில் ஒரு வருடம் என்பது 365 நாள் 6 மணி 7 நிமிடம் ஆகும். நமச்சிவாய வேத வானியல்படி ஒரு ஆண்டு என்பது 365 நாள் 6 மணி 9 நிமிடம் என ந.பொ. இராமதுரை என்பார் கணக்கிட்டுள்ளதாகக் கூறுவார்.*

இப்படி ஒரு முயற்சி தமிழரிடம் நடப்பது தமிழருள் எத்தனை பேருக்குத் தெரியும். ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும் குறை உண்டு. அக்குறை நீக்குவோம். நிறைகளைச் சேர்ப்போம். பொதுக் கருத்தில் புதிய பஞ்சாங்கம் உருவாக்க அருட்செல்வர் மகாலிங்கம் முயலலாம்! ஆயின் பழம் பஞ்சாங்கத்தை வைத்துப் பிழைப்போர் இம்முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவார்களே! பொதுக்கருத்து தமிழரிடம் உருவாக்குவது எவராலும் இயலாத ஒன்று ஆயிற்றே!



அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம்

கதிரவனைப் பார்த்துக் கணக்கிட்டோம்! நிழலின் மூலம் நேரத்தை நிச்சயித்தோம். நீர்க்கடிகாரமும் மணற் கடிகாரமும் படைத்தோம்! ஊசலின் அசைவில் இன்று ஓடும் கடிகாரங்கள்! இவையெல்லாம் மாறி அணுவாற்றலால் இயங்கும் கடிகாரங்கள் வந்துவிட்ட காலத்தில் உலகு ஏற்பதைத் தமிழரும் உவந்து ஏற்கலாமே! தனித்தனி நேரக் காலக் கணக்குகள் எற்றுக்கு?

உலகெங்கும் 40 வகையான ஆண்டுக்கணக்குகளை வைத்துள்ளோம். ஒவ்வொன்றிலும் நிறையும் உண்டு குறையும் உண்டு. நாம் பயன்படுத்தின ஆண்டுக் கணக்கு அறுபதுக்குப் பின்னுள்ள கதைகளை வெளியே சொல்ல முடியாதவை. எனவே மூான் ஆப்கின்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் டிக் என்றி எல்லாச் சமூகமும் எந்நாடும் ஏற்கத்தகுந்த ஒரு ஆண்டுக் கணக்கை வடிவமைத்தார். சமச் சீரான உலக ஆண்டுக் கணக்கு (Uniform Global Caledar) மனிதகுல ஒருமைப்பாட்டுக்கு வித்திடுவது. எனவே

www.t.me/DigitalNoolagam

ஏற்கத்தக்கதென்று 19.5.2007 இல் ஏசியன் டிரிபியூன் ஏட்டில் என் கருத்தை வெளியிட்டேன். ஓருலக மக்கள் ஒவ்வோராண்டும் ஒவ்வொரு தேதியும் உலகெங்கும் ஒரே வாரத்தின் நாள்களாக இடம் பெறுமாறு புரட்சிகரமான ஆண்டுக் கணக்கை வகுத்த டிக் என்றி போற்றற்குரியவர்! அவர் காட்டும் புதிய நாட்காட்டி உலகமே பின்பற்ற வல்லது.

ஏரம்பம், காக்கை பாடினியாரின் கணக்கதிகாரம், கிளராலபம், அதிசாரம், திருபுவன திலகம், கணிதரத்தினம், சிறுகணக்கு ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு காரி நாயனார் கணக்கதிகாரம் இயற்றியதாக அவரே சொல்லி இருந்தாலும் பன்நூல்கள் அழிந்தன. இன்று அந்நூல்கள் இல்லை. உள்ளவை கொண்டு இல்லாமற் போனவைகளை மீட்டுருவாக்கும் பணியும் மட்டுமே போதுமா? புத்தறிவு புகட்டும் புதிய நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துமுள்ளன. அவற்றை அருந்தமிழில் இயற்றி நம்மவர் அறிவை அகலப்படுத்துதல் நம் கடன் அன்றோ!

ஊடகங்களின் உட்பொதிந்துள்ள செய்திகள் கூட நம் சிந்தனையைத் தூண்ட முடியும். 2010 ஆகத்து 20 ஆம் நாளில் தி. டைம்சு ஆப் இந்தியா நாளேட்டில் அறிவார்ந்த உலகம் என்ற தலைப்பில் மிட் ஆகு மொர்ச்சண்டு என்பார் எழுதிய அறிவியல் கட்டுரை என்னை ஈர்த்தது.

நாம் வாழும் பேரண்டம் 13.70 பில்லியன் ஆண்டுகள் பழமை மிக்கது. உலகில் எதுவுமே இல்லை. உலகே இல்லை. எந்தப் பொருளும் இல்லை. சுழி நேரம் எனப்படும் பூஜ்ய நேரத்தில் புடவி இல்லை. புவியில்லை, உயிரில்லை. ஒன்றுமே இல்லை. ஆக்கின்சு பென்ரோசு கூறும் வெற்றிடமான நேரத்தில் ஏதோ ஒரு விவரிக்கவியலா நிகழ்வு நேரிட்டது. சுழி நேரத்துக்கு முன் பாசிட்ரான் - எலக்டிரான் இணைகள் தத்தம்மை தாமே ஒன்றுக்கொன்று ஒவ்வொரு விநாடிக்கும் பல டிரில்லியன் முறைகள் அழித்துக் கொண்டன. பலமுனை மோதல்கள் விளைவாக இவை ஒன்றையொன்று அழித்துக் கொண்டன. இதனால் பொருட் திரட்சி எதுவும் உருவாகாத வெறுமை விளைந்தது. சுழி நேரம், எதுவுமற்ற வெளி, முழுமையான வெற்றிடம் நிலவியது. ஒரு விநாடியின் 100 இல் பத்து அளவில் எலக்டிரானும் பாசிட்டிரானும் தம்மை அழித்துக் கொண்டன.

பார்ப்பவர்களுக்கு எதுவுமே நிகழ்ந்திடவில்லை என்ற எண்ணம் ஏற்படும். துவங்கியதும் தெரியாத இம்மோதல்கள் முடிந்து முற்றிலுமாக அழிந்ததும் புலப்படாமல் போயிற்று. இதில் 13.70 மில்லியன் ஆண்டு முன்பு ஒருமுறை quadrillionபாசிட்டிரான்

www.t.me/DigitalNoolagam

எலக்டிரான் இணை முற்றழியில் இருந்து தப்பிப் பெரும் மோதல் என அறிஞர்கள் கூறும் நிகழ்வை ஏற்படுத்தின. நமது பேரண்டமும் இதே போன்று இதன் எதிரிடையான பேரண்டங்களும் பிறந்தன. பேரண்டம் விரிவடைய விரிவடைய உடுக்கூட்டமும் பேரளவுக் கோள்களும் நம் உலகைப் போன்று வான் வெளியில் சுற்றிவருமாறு தோன்றின. பல பில்லியன் சூரியன்களடங்கிய பல பேரண்டங்களடங்கிய கோள்களும் அவற்றில் கருந்துளைகளும் தோன்றின. இவற்றின் புவி ஈர்ப்பு விசையாற்றலால் ஒளி கூட ஊடறுத்துச் செல்லாமல் சுற்றுப் பாதையில் செல்லும். இவ்வாறு அறிவியல் உண்மைகளைச் சொல்ல வந்தவர் கடவுளுக்கே இந்தப் புதிர் புரியும் என்று சறுக்கி விழுவார்.

வெறுமை, சூன்யம் என்பதே விடையாக இருக்கட்டுமே! புரியாத புதிர்கள் படவியின் தோற்றம் பற்றிப் புரியும் வரை சூன்யமே விளக்கமாக இருக்கட்டுமே விடைதேட அவசரம் என்ன? மனிதனின் அறிவு எட்டிப் பார்க்கட்டும் விடை தேடட்டும்! எதுவுமே இல்லாத சூனியத்தில் கடவுள் மட்டும் எப்படி இருந்திருக்க முடியும்? அப்படி கடவுளைக் கற்பனை செய்ய வேண்டிய அவசியமென்ன! அவசரமென்ன? நம் சூரியக் குடும்பத்திலிருந்து அண்மையில் உள்ள உடுக்கள் கூட்டம் ஆல்பா செஞ்சுரி ஆகும். இன்று உலகில் உள்ள அதிவேக வான்கலமான ஈலியாசு 2 விண்கலத்தில் மணிக்கு 1,57,000 மைல் வேகத்தில் பறந்து சென்றால், இந்த ஆல்பா செஞ்சுரி உடுக்கூட்டத்தை அடைய 12,000 ஆண்டுகள் ஆகுமாம். இப்படி பல அண்டங்களும் கோள்களும் நம் ஆய்வுக்குரியதாக உள்ள போது ஆண்டவனே ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் மாட்டின் மீதும் மயிலின் மீதும் பறந்து வருவது எப்படி? பாம்புப் படுக்கையில் பாற்கடலில் மிதந்து வருவது எப்படி? அறிவின் வாசல் திறந்து வைப்போம்; ஆய்வால் புதியதை அறிவோம்.

www.t.me/DigitalNoolagam

# முடிவுரை

## 1. கியூபா நாட்டருகே கடலடியில்

வரலாறு அவ்வப்போது புதுப்பிக்கப் படல் வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளைப் பதிவு செய்தாக வேண்டும். வரலாறு எழுதுவோர் திறந்த மனதுடன் இயங்க வேண்டும். செருப்புக்கு ஏற்பக் காலை வெட்டுவது போலத் தங்கள் சிந்தையில் உள்ள விருப்பு வெறுப்புக்கு ஏற்ப வரலாற்றை வெட்டக் கூடாது. எங்கு எது கிடைத்திருப்பினும் அது பற்றி அறிவாளரிடம் ஒத்த கருத்து உருவாகினாலும் உருவாகாவிட்டாலும் இன்னின்ன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது பற்றி என் கருத்து இது. முடிந்த முடிவு அல்ல. முடிந்த முடிபை நீங்களே சீர்தூக்கிப் பார்த்திடுக என உலக மக்களுக்கு ஒளிவு மறைவின்றி உரைத்திடல் வேண்டும். முதலாளித்துவ நாடான அமெரிக்காவில் இன்று ஒபாமா குடியரசுத் தலைவர். அறிஞர் அண்ணா திராவிட நாடு இதழில் வெள்ளை மாளிகையில் என்ற தலைப்பில் ஒரு கறுப்பினத்தவர் குடியரசுத் தலைவராகி அமெரிக்காவில் சந்தித்த அவமானங்கள் பற்றிய கற்பனையான நாவல் பற்றி எழுதினார். இன்று வெளியே ஒபாமா குடியரசுத் தலைவராக உலவினாலும் உள்ளுக்குள் பொருமிய படியே வாழ்கிறார். அமெரிக்காவில் நடப்பது மக்கள் சனநாயகமல்ல, கம்பெனிகளின் சனநாயகமே Corporate Democracy என ஒப்புதல் வாக்குமூலமே அளித்தார். அமெரிக்க அதிபருக்கே முதலாளித்துவம் நெருக்கடி தருமானால் முதலாளித்துவத்தை எதிர்த்து அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பொதுவுடைமையை உயர்த்திப் பிடித்த சின்னஞ்சிறு நாடான கியூபாவுக்கும் அதன் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற பிடல் காசுடிரோவுக்கு எத்தனை இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கும். பிடல் காசுடிரோ ஓய்வு பெற்ற பின் எனக்கு அனுப்பிய பதில் வாழ்த்துச் செய்தியில் இடம் பெற்ற கையெழுத்து கீழே உள்ள படத்தில் இடம் பெற்றுள்ளது.



FIDEL CASTRO RUZ



அந்தக் கியூபா நாட்டருகே கடலடியில் நாகரிகம் இருந்த சான்றுகள் கிட்டிப் பத்தாண்டுகள் ஓடிவிட்டன. கனடா நாட்டின் புகழ்பெற்ற ஆங்கில ஏடான The Globe and mail ஏட்டில் திசம்பர் 7, 2001 இல் செய்தியாளர் மைக்கேல் பேசினார் இக்கண்டுபிடிப்பைப் பதிவு செய்துள்ளார். கியூபாவின் மேற்குக் கரையை ஒட்டிக் கடலடியில் கனடா - கியூபா எனுமிரு நாட்டு ஆய்வாளர் குழு இணைந்து 6000 ஆண்டுகள் பழமை வாய்ந்த நகரத்தைக் கண்டெடுத்துள்ளனர் என்பதே அச்செய்தி! மிகுயுயர் தொழில்நுட்பமுடன் வடிவமைக்கப்பட்ட ஒலி அளிந்தறியும் மின் கருவியுடனும் ஒளிபடச் சுருள் பதிவு செய்யும் கருவியுடனும் பௌளினா ஜெலிட்சுகையும் அவரது கணவர் பால் வீண்ழீவெய்க்கும் மகன் எர்னசுடோ தபேனசும் கூட்டாகக் கடலடியில் 40 மீட்டர் அகலமும் 40 மீட்டர் உயரமுள்ள இயற்கையாக உருவாகாத திட்டமிட்டுச் செதுக்கப்பட்ட ஒரே சமச்சீரான அளவுடைய கற்கோட்டையைக் கண்டனர். கண்டதை விண்டனர்.



கியூபா கடலடியில் கண்டுபிடிப்பு

கியூபா நாட்டு மாந்த உயிரியல் (Anthropology) அகாதெமியின் ஆய்வாளர் ஒருவர் அந்தப் பாறைகள் மீது குறியீடுகளும் கல்வெட்டு எழுத்துக்களும் பதிவாகி உள்ளதைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. ஆனால் எந்த மொழியில் அவை எழுதப்பட்டன என்று கண்டறிய முடியவில்லை என்று சொன்னார். தமிழக அரசின் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரான முனைவர் இரா. மதிவாணனைக் கியூபா நாட்டுக்குத் தமிழ்நாட்டரசு அனுப்பி அந்த எழுத்துக்களைப் படித்தறிய வேண்டும். பிரெஞ்சு அரசே புதுச்சேரியில் நடத்தும் எகோல் பிரான்சே எக்சுடிரீம் ஒரியண்டு நிறுவனப் பேராசிரியர் விசய வேணுகோபால் எனும் கல்வெட்டியல் அறிஞரையும் அவரோடு அனுப்பித் தமிழின் வேர்களைக் கியூபா கடலடியில் தேடியாக வேண்டும்.

www.t.me/DigitalNoolagam

ஒலி அளந்தறி "சோனார்" கருவிகளின் படங்கள் மெக்சிகோவில் மாயன் நாகரிகத்தில் கட்டப்பட்ட பிரமிடு களுக்கும் அழ்டெக் கோயில்களுக்கும் உள்ளது போன்றே கியூபா கடலடி கட்டுமானங்கள் இருப்பதைக் காட்டுகின்றன.

மூன்று காலக்கட்டங்களில் இக்கட்டுமானங்கள் கடலடியில் மூழ்கியுள்ளன. கடல் தரையில் உள்ள சமவெளியில் எரிமலையின் சகதிகள் மீது கடலுக்கு 650-700 மீட்டர் ஆழத்தில் உள்ள ஒரு கட்டுமானம், பூமிவெடிப்பு (Geo-fracture) உள்ள பகுதியை ஒட்டியே அமைந்துள்ளது.

எரிமலைகள் வெடித்து அமைதியானபிறகு அந்தப் பகுதியில் உள்ள மண் வளமாக இருக்கும். இதனால் பல நாகரிகங்கள் எரிமலைகள் இருந்த இடத்திலேயே அமைக்கப்பட்டன. இது உலகப் பொது நியதியாக உள்ளது. மறைந்த - அட்லாண்டிசுக் கண்டம் மூழ்கிய காலத்திலேயே இக்கட்டுமானங்களும் கடலில் மூழ்கி இருத்தல் வேண்டும் என்றார் வீண்ழீவெய்க்.

> *நாங்கள் கடலடியில் ஒரு நாகரிகத்தின் தடயங் களை, கட்டுமானங்களைக் கண்டெடுத்துள்ளோம். இது அறிவியல் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப் பட வேண்டிய களமாகும். கண்டுபிடித்ததைக் காசினிக்கு அறிவிப்பதுடன் எங்கள் கடமை முடிகிறது. பழம்பெரும் நாகரிகங்களை ஆயும் அறிஞர்கள் இதனை மேலும் ஆராய்தல் வேண்டுமென அடக்கமுடன் கூறி அமைகிறார்கள் இந்த ஆய்வுக் குடும்பத்தினர். இக்கடலடி ஆய்வுக்குரிய இடம் எக்காலத்தினது என்று இன்னமும் வரையறுக்கப் படவில்லை. ஆனால் 1966 இல் கியூபா நாட்டு அகழ்வாராய்ச்சியாளர்கள் நிலத்தில் பெருங் கற்காலப் பண்பாட்டுக்குரிய கட்டுமானத்தைக் கண்டறிந்து கி.மு. 4000 ஆண்டு பழமையானது என்றனர். அந்த நிலஞ்சார்ந்த கடலடியில் கிடைத்துள்ள இக்கண்டுபிடிப்பு இனி எக்காலத்தினது என்று முடிவு செய்தல் வேண்டும்.*

மனித குலம் நகரமைத்த குடியேற்றங்களில் வசிக்கத் தலைப்பட்டு 500 ஆண்டுக்குப் பிறகே இவை கட்டப்பட்டு இருக்கக் கூடும் என்ற கருத்து நிலவுகிறது.

கி.மு. 3500இல் சுமேரிய நாகரிகத்தில் சக்கரம் கண்டு பிடிக்கப்படுமுன் கி.மு. 3000இல் எகிப்தில் சூரியகடிகை

www.t.me/DigitalNoolagam

வடிவமைக்கப்படுமுன் இவை கட்டப்பட்டிருக்கலாம். எகிப்தில் கீசாச் சமவெளியில் கி.மு. 2900 - 2200 க்குமிடையே பிரமிடுகள் கட்டப்பட்ட காலத்திற்கு முன் கட்டப்பட்டு இருக்கலாமென இத்தம்பதியார் கருதுகின்றனர். அவானா நகரில் உள்ள அட்வான்சுடு டிஜிட்டல் கம்யூனிகேசன்சு நிறுவனத்தை இவர்கள் நடத்துகின்றனர். முதன்முதலில் சோனார் கருவி துணையோடு 2000 சூலையில் சாலைகள், கட்டடங்கள், பிரமிடுகளுடன் கூடிய கடலடி நகரத்தைக் கண்டெடுத்தார்கள். பிறகு கப்பலில் இருந்து கட்புலனுக்குரிய நாரிழை (fibre.optic) மூலம் கட்டளை பிறப்பித்துக் கடலடியில் இயக்கவல்ல கருவியைத் தாங்கிய 1.3 டன் எடையுள்ள ஆய்வு வண்டியைக் கடலடிக்கு அனுப்பினார்கள். அது ஏந்திச் சென்ற புகைப்படக்கருவி 2×5 மீட்டர் அளவில் செங்குத்தாகவும் வட்டவடிவிலும் வெட்டப்பட்டு (செதுக்கப்பட்டு) உள்ள கிரானைட் கற்களைப் படம்பிடித்தது.

கடலடியில் 2310 அடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்தப் பழம்பெரும் நாகரிகத் தடயங்கள் கியூபா தீவுத்திட்டுகளில் இருந்து மெக்சிகோவின் யூகாடன் குடாநாடு வரை 120 மைல்தூரம் அளவு பரவி இருந்த பல்லாயிரமாண்டு முற்பட்ட நாகரிகத்தின் எச்சங்களாகும் என்கிறார் 57 வயதான கடற்பொறிஞர் திருமதி ழெலிட்சுசி.

அட்லாண்டிசில் பிணைந்திருந்ததா நம் குமரிக்கண்டம்? என்ற அய்யப்பாடும் அறிவார்ந்த முறையில் ஆராயப்பட அட்லாண்டிசுக் கண்டத்தின் மூழ்கிய நாகரிக எச்சங்களில் உள்ள கண்டுப்பிடிப்புகளைக் கல்வெட்டுக்களை, குறியீடுகளைத் தமிழர்கள் ஆராய்தல் வேண்டும். சின்னஞ்சிறு கியூபா தன் உண்மை வரலாற்றை உலகம் இருட்டடிப்புச் செய்யுமென உணர்ந்து தனியார் நிறுவனம் மூலம் 2310 அடி ஆழத்தில் கருவி கொண்டு படமெடுக்கும் போது மூச்சடக்கி மூழ்கி முத்தெடுக்கும் மீனவருடன் கடலடியில் 23 மீட்டரில் கண்டு எடுக்கப்பட்ட பூம்புகார் ஆய்வு போதுமென நாம் தூங்கலாமா? தமிழக அரசு பூம்புகார் கப்பல் நிறுவனம் கண்டு கப்பலோட்டிய அரசு! கடலடி ஆய்வுக்கெனத் தமிழக அரசே மாநில ஆணையம் ஒன்றை உருவாக்கி அயல்நாட்டில் இப்படி சின்னஞ்சிறு நாடுகளில் கருவி கொண்டு கடலடியில் மிக மிக ஆழமாக ஆய்வு செய்யக் கூடிய வல்லுநர்கள் கொண்டு ஆய்வு நடத்தினால் அரிய உண்மைகள் புலனாகும்.நம் வரலாற்றை இருட்டடிக்கப் பார்க்கும் கூட்டத்தின் கொட்டம் அடங்கும்! குமரிக்கண்ட உண்மைகள் துலங்கும்.

www.t.me/DigitalNoolagam

## 2. நிலப்பாலங்களும் மனித நிலப்பரவலும்

இலெமூரியா மூழ்கியது கண்டங்களின் இடப்பெயர்வால் என்பார் ஒருசாரார். தீய சக்திகளால் என்பாரும் ஒரு சாரார். வால்ட்டிராஃப் பள்ளி என்ற கருத்தியல் குழுவினர் அட்லாண்டிசுகளிலும் இலெமூரியாவிலும் மூழ்கி இறந்தவர்கள் ஆவியுடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அதன் அடிப்படையில் கண்டம் மூழ்கியதை உறுதி செய்வதாகவும் சொல்லி வருகிறார்கள். இந்த நம்பிக்கையாளர்கள் www.lemuria.net என்று இணையத்தளம் நடத்துகிறார்கள்.




அட்லாண்டிசுக் கண்டத்திற்கு முன்பேயும் அட்லாண்டிசு இருந்த காலத்தேயும் இருந்த இலெமூரியா நாகரிகம் பற்றிப் பேசுகிறார்கள். தென் பசிபிக் பெருங்கடலில் வட அமெரிக்காவுக்கும் ஆசிய, ஆசுதிரேலியாவுக்கும் இடையே இலெமூரியாக் கண்டம் இருந்தது. இலெமூரியாக் கண்டம் மூ என்றும் அழைக்கப்படும். மூ என்பது மதர்லேண்டு (தாயகம்) என்று பொருள்படும். இலெமூரியா பற்றிய நூல் பட்டியலும் குறுந்தகடுகளும் ஈண்டுத் தரப்படுகின்றன.

**Books About Lemuria**

**Books**

Ancient South America: Recent Evidence Supporting Edgar Cayce's Story of Atlantis and Mu Gregory Little, John Van Auken, and Lora Little 2002

An Earth Dwellers Return, also known as

Return of an Earth Dweller by Phylos Phylos the Tibetan

www.t.me/DigitalNoolagam

Aros of Atlantis David L. Manley

Atlantis and Lemuria Rudolf Steiner 1989, 1991

Atlantis: Insights From a Lost Civilization Shirley Andrews http://www.atlantisinsights.net 2004

The Books of the Golden Age: The Sacred and Inspired writings of MU Churchward, Col. James 1997

The Call Goes Out from the Subterranean City of Telos: Telepathic Messages Received from Adama in Telow Channeled by Lailel Dianne Robbins 1995

The Camino Shirley McLaine

The Children of MU Churchward, Col. James 1992

The Cosmic Forces of MU, Vol. 1 & 2 Churchward, Col. James 1992

Cosmic Memory: Atlantis and Lemuria Rudolf Steiner 1981

Dreaming the Past, Dreaming the Future Stein, Diane 1991

Edgar Cayce's Atlantis & Lemuria Frank Joseph 2001

The Golden Goddess of The Lemurians Abraham Mansfield

The Huevolution of Sacred Muur Science Past and Present Noble Timothy Myers-EL 2005

In Search of Lemuria Mark R. Williams

http://www.goldenerabooks.com/lemuria.syn.html 2001

Isis unveiled Helena Petrovna Blavatsky

Legend of Altazar Solara

Legends of Atlantis and Lost Lemuria Scott-Elliot, W 1990

Lemuria and Atlantis: Studying the Past to Survive the Future Shirley Andrews 2004

Lemuria Rising Vol 1 Ruth E. Norman 1976

Lemuria Rising Vol 2 Ruth E. Norman 1976

Lemuria Rising Vol 3 Ruth E. Norman 1976

www.t.me/DigitalNoolagam

Lemuria: Soul Mates Roberta Rhodes Kimpton, Robert Walker (Illustrator) 1991

Lemuria: The Lost Continent of the Pacific Wishar S. Cerve

http://www.villagebooks-mtshasta.com/lemlosconofp.html 1931

Lemuria, This Side of Paradise Nancy Ettinger

Lemurian Scrolls Satguru Sivaya Subramuniyaswami

Lemurian Atlantean Vision Wheel David Jungclaus 1991

The Lemurian Way, Remembering Your Essential Nature Thyme, Lauren O. with Sareya Orion 1997

The Lost Cities of Lemuria & The Pacific Childress, David Hatcher 1988

The Lost Continent of MU - The Motherland of Man Churchward, Col. James 1992

The Lost Land of Lemuria Sumathi Ramaswamy 2005

The Lost Lemuria - 1904 W. Scott Elliot 1997

Maya Atlantis Queen Moo & The Egyptian Sphinx Augustus Le Plongeon 1973

Mound Builders G. Little, John Van Auken and L Little 2001

Mu Revealed Tony Earl 1970

MYLHI: A Novel of Temple Life in Lemuria Bette Klein 1997

On The Way To Shunyiam (written in Hebrew language)

Ouseal - The Diary of a Lemurian Jonathan Robert Gravish

http://www.lemurianvisions.com

The Pleaidian Perspective Quan Yin, Amorah 1995

Problem of Lemuria: The Sunken Continent of the Pacific Lewis Spence 1997

RA-MU of Lemuria Speaks Ruth Norman 1988

Ramtha, The White Book, also sometimes called Ramtha the Enlightened One J.Z. Knight http://www.ramtha.com

www.t.me/DigitalNoolagam

The Return of the Serpents of Wisdom Mark Amaru Pinkham

Right Use of Will - Healing and evolving the emotional body Ceanne DeRohan

Sacred Mysteries Among the Mayas and the Quiches Augustus Le Plongeon 1886, 1973

Secrets and Mysteries of Hawaii Pila http://www.mysticalhawaii.com

Star Song Oracle Rose, Delfina 1997

Story of Atlantis and The Lost Lemuria Scott Elliot 1940

Tales of the Night Rainbow Pali Lee and Koko Willis

Telos, Volume 1, Revelations of the New Lemuria Aurelia Louise Jones 2004

Telos, Volume 2, Messages for the Enlightenment of a Humanity in Transformation Aurelia Louise Jones 2004

The Sacred Symbols of Mu Churchward, Col. James 1996

The Sun Rises Robert D. Stelle

Lemurian Fellowship, Ramona, CA 92065

The Thiaoouba Prophecy Michel Desmarquet

Three Worlds Lost - The History of Mu, Lemuria & Atlantis Denny Highben

Toward the Light: A Message to Mankind from the Transcendental World by Johanne Agerskov (Author), Michael Agerskov

http://www.towardthelight.com

The Ultimate Frontier, The Adelphi Organization Kueshana, Eklal 1991

The World Before Ruth Montgomery 1975

You Are Becoming A Galactic Human Virginia Essene and Sheldon Nidle 1995

பசிபிக் பெருங்கடலில் கி.மு. 98,000 முதல் கி.மு. 8000 வரை நீடித்த நாகரிகம் இலெமூரிய நாகரிகம். அமெரிக்காவில் உள்ள டெக்சால் - பிளானாவில் வாழும் இரிக் ஔடேட் கடந்த முப்பதாண்டுகளாக இலெமூரியா பற்றிய தத்துவங்களையும் தகவல்களையும் கரைத்துக் குடித்தவர். அவர் இலெமூரியாக்

www.t.me/DigitalNoolagam

கண்டம் பற்றிய வரைபடங்களைப் பல்லாண்டு அரிதின் முயன்று கடும் உழைப்பால் உருவாக்கினார். இராபர்ட்டு ஸ்டெல்லே எழுதிய The Sun Rises நூலில் இந்த இலெமூரியாக் கண்டப் படத்தின் அடியொற்றிச் கிரிக் ஔடேட் வரைபடங்கள் தீட்டினர். உதய சூரியனுக்கும் இலெமூரியாவுக்குமுள்ள உறவை நூல் தலைப்பே நுவலும். அதன் அடிப்படையில் ஓவியமாகவும் இலெமூரியாக் கண்டம் உருப்பெற்றது.




மிக்சிகன் பல்கலைக்கழகச் செய்திக் கடிதம் (27, நவம்பர் 2007) வட, தென் அமெரிக்கப் பழங்குடிகள் பெர்ரிங் நீரினை (Bering Strait)ல் இருந்த நிலப் பாலம் வழியாக 12,000 ஆண்டு முன்பு சைபீரியாவில் இருந்து குடியேறியவர்களா? அல்லது இன்றைய அமெரிக்கப் பழங்குடிகள் ஆசியாவில் இருந்தோ பாலினேசியாவில் இருந்தோ வந்தவர்களை என்று வினாவுக்கு விடை தருகின்றது. 30000 ஆண்டு முன்பு கடல் வழியாகவும் நிலவழியாகவும் ஆசியாவில் இருந்து வரத் தொடங்கியவர்களா? என்பதும் ஆராயப்பட்டது.

அமெரிக்காவில் வட, நடுவண், தென் பகுதிகளில் 29 பழங்குடி இனங்களின் மரபணுக்களை ஆரய்ந்தனர். 678 இடங்களில் இந்தச் சோதனைகளை நடத்திய மனித மரபணுவியல் துணைப் பேராசிரியரும் ஆய்வாளருமான நோவா. ஏ. உரோசன்பெர்க் திட்டவட்டமாகக் கூறுகிறார். அமெரிக்கப் பழங்குடிமக்கள் கிழக்காசியாவினின்று குடியேறிவர்களே என மெய்ப்பிக்கும் மரபணுச் சான்றுகள் தெள்ளத் தெளிவாக உள்ளன.

www.t.me/DigitalNoolagam

தமிழருக்கும் அமெரிக்கப் பழங்குடி மக்கட்கும் தொடர்பே இல்லை என்று எந்தச் சான்றையும் தூர எறிந்து விட முடியாது.

FIGURE 2
The Eurasian Land-Bridge: Proposed Links to a Worldwide Rail Network




உலகனைத்தையும் இருப்புப் பாதைகளால் இணைக்கத் தற்போது நாடுகள் பலவும் கூடித் தீட்டும் திட்டத்தின் படம் இங்கே தரப் படுகின்றது. அமெரிக்காவையும் ஆசியாவையும் இணைக்கும் இடமாகப் பெர்ரிங் நீரிணைப் பகுதி விளங்குவதை நீங்கள் படத்தில் காணலாம். இந்தப் பெர்ரிங் நீரிணைக் கடலில்தான் பாலம் இருந்தது. அதன் வழியாகத்தான் ஆசியாவிலிருந்து அமெரிக்காவிற்கு மக்கள் குடியேறினார்கள் என்பது மரபணுச் சங்கிலி ஒப்புமை மூலம் அறிஞர்கள் கருத்து வெளியிட்டனர். பாக் நீரிணைப் பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்துக்கு தடைக் கல்லாக ஒரு பாலம் இருப்பதாகச் சொல்வார்கள். அதேபோன்ற பாலம் ஆசியாவையும் அமெரிக்காவையும் இணைத்ததே! அதை யார் கட்டியது என்று இனித் தேட வேண்டுமோ! இராணவன் பாலம் என அதற்குப் பெயரிடலாமே!




www.t.me/DigitalNoolagam

நிலப்பாலங்கள் கண்டங்களை இணைத்த சங்கிலிகள். ஒரு கண்டத்தில் இருந்து இன்னொரு கண்டத்துக்கு மக்கள் இடம் பெயரக் கடல்வழி மட்டுமல்ல நிலவழியும் இருந்துள்ளது. கடல் நீர் மட்டம் தாழ்வாக இருந்தபோது அமெரிக்காவில் அலாசுகாவையும் ஆசியாவின் சைபீரியாவயையும் நிலப்பாலம் இணைத்தது. வட துருவம் பனிக்கட்டிகளால் போர்த்தப்பட்டிருக்கத் தேவையான தண்ணீரைக் கடல்களில் இருந்து உறிஞ்சும். அப்போது பெர்ரிங் கடலும் பெர்ரிங் நீரிணைப் பகுதியும் வெறுந்தரையாகும். அப்படி உருவான ஒரு தீவுக்குப் பெர்ரிங்கியா என நிலவியலார் பெயர் சூட்டியுள்ளனர்.

அத்தகு நிலப்பாலங்கள் இயற்கையாக எழுந்தவை. எந்த மனிதனோ வானரமோ கட்டியதல்ல. இத்தகு நிலப்பாலங்கள் அய்ரோப்பாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் இருந்துள்ளன. நியுகினியாவுக்கும் ஆசுதிரேலியாவுக்கும் இடையே நிலப்பாலம் இருந்துள்ளது. தென்கிழக்காசியாவை இந்தோனேசியத் தீவுக் கூட்டமுடன் இணைக்க நிலப்பாலம் இருந்துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இயற்கையாக உருவான நிலப்பாலம் இருந்துள்ளது.

பனியூழிக் காலத்தியவை இந்த நிலப்பாலங்கள்.

Homo - Sapiens நிலையில் மாந்த குல முன்னோடிகள் இருந்த போது ஆசுதிரேலியாவுக்கும் பிலிப்பைன்சுக்கும் சப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நிலப்பாலம் வழியே தான் பரவினார்கள் என்பது அறிஞர் பலரின் கருத்தாகும்.

நூறாண்டுகள் முன்பு கண்டங்கள் இடப்பெயர்வு என்பது எவரும் அறிந்திராத செய்தியாகும். ஆனால் உறைந்து படிமங்களாகிப் போன உயிரினங்களின் தடயங்கள் கடல்கள் இடையே பிரித்தபோதும் வெவ்வேறு கண்டங்களில் கிட்டிய போதும் அவற்றுள் ஒத்த தன்மைகளை உறுதிப் படுத்தின. ஒன்றாக ஓரிடத்தில் இருந்தவை கடல்களால் பிரிக்கப்பட்டன எனப் புரிந்தது. நிலப்பாலங்கள் எழுந்தன. வீழ்ந்தன. மலைகள் கிளம்பியதும் பின்னர் அழிந்ததும் போன்றே இவை நிகழ்ந்தன.

1885 இல் எட்வார்டு சூயசு உடைந்து பிரிந்த ஒரு பெருங் கண்டத்துக்குக் கோண்டுவானாலாந்து என்று பெயரிட்டார். அக்கண்டத்தினின்று உடைந்து கழன்றவை இந்தியா, ஆப்பிரிக்கா, அண்டார்டிகா, தென்னமெரிக்கா ஆகியவை. எனினும் அவற்றை இணைத்த நிலப் பாலங்கள் ஆங்காங்கே இருந்தன என்பது அவர் கருத்தாகும்.

www.t.me/DigitalNoolagam

ஆனால் 1912 இல் ஆல்பிரடு வெக்கனர் கண்டங்களின் இடப்பெயர்வுக் கோட்பாட்டை உருவாக்கிய பின்னர் நிலப்பாலங்களால் மக்கள் பரவினர் என்ற கருத்து தகர்ந்தது. ஒரு பெருங்கண்டம் உடைந்து பிரிந்ததால்தான் ஒப்புமைக் கூறுகள் உள்ளன என உலகம் பேசத் தொடங்கியது.

1940 முதல் நியாயர்க் ஜார்ஜ் கேலார்டு சிம்கன் அவர்கள் Fossilsகளுக்கிடையே ஒப்பீடு என்ற திசையில் நடந்தார். நிலப்பாலம் கோட்பாட்டை மறுத்தார். அவர் 1940 இல் Mammals and land Bridges நூலெழுதினார். 1960 இல் தட்டுகளின் இடப் பெயர்வு செல்வாக்குப்பெற்றபின் அவர் கருத்து வலுவிழந்தது.

இன்றும் உலகில் பேசப்படும் நிலப்பாலமாக வட தென்னமெரிக்காக்களை இணைக்கும் பாலம் உள்ளது. நிலப்பாலமாயினும் கண்டங்களின் இடப்பெயர்வாயினும் மனிதகுலம் பரவியுள்ளது. ஓரிடத்திலேயே உறைந்து போய்விடவில்லை. எனவே, எக்கண்டமாயினும் அங்குக் கிடைக்கும் தடயங்களில் தமிழர் பரவல் தட்டுப்படுகிறதா என ஆராய்தல் நம் கடனன்றோ! நாமிருக்கும் கண்டமே நம் பழந்தமிழகம் அல்ல. எனவே சப்பானை ஒட்டிக் கடலடியில் எவை கிட்டினாலும் அவற்றோடு தமிழர்க்குத் தொடர்பு இருக்கலாம். தமிழ் நாகரிகம் பரவி இருக்கலாம். ஒன்று விடாமல் உலகில் கிடைக்கும் சான்றுகளைத் தமிழில் உரசிப் பார்ப்போமாக!

நீண்ட நெடிய போராட்டத்துக்குப் பிறகு தமிழுக்குச் செம்மொழித் தகுதியை இந்திய அரசிடம் பெற்றுத் தந்தவர் தமிழக முதல்வர் கலைஞர். அவர் பெற்ற வெற்றியைப் பாரறிய வைக்கச் செம்மொழி மாநாடு நடந்தது. செம்மொழியாக ஒரு மொழி அறிவிக்கப்படக் குறைந்த அளவு 1000 ஆண்டு இடைவிடாத வரலாறும் வளமும் இலக்கியமும் பெற்றதாக அந்த மொழி இருக்க வேண்டும் என்ற வரையறையை நடுவண் அரசு வகுத்தது. அதன்படி தமிழ் செம்மொழியானது! ஆயிரமாண்டு வரலாறு எங்களுக்கும் இருக்கிறது என்று வேறு மொழிகளும் செம்மொழித் தகுதி கோருகின்றன.

இந்த நிலையில் 1000 ஆண்டா? தமிழ் வரலாறு கி.மு. 9500 ஆண்டு பழமை வாய்ந்தது என்று நிறுவிக் கடல் கொண்ட பூம்புகாரை ஆய்வு செய்து அதிர்வலைகளை எழுப்பியவர் கிரகாம் ஆன்காக். நம் சோழர்கள் துறைமுகம் இன்றிலிருந்து 11500 ஆண்டுகள் முற்பட்டது என்றால் 9500 கி.மு. அளவில் தமிழ் பேசப்பட்டிருக்குமே! இனியும் ஈராயிரம் ஆண்டுகள் பழமை என்று நாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாமே!

www.t.me/DigitalNoolagam

கிரகாம் ஆன்காக் ஆய்வுகள் பற்றி அவரே மனம் திறக்கிறார்.

> *மனித குல வரலாற்றில் நடந்த முக்கியச் சம்பவம் ஒன்றை நாம் மறந்து விட்டோம்! பனி ஊழிக் காலத்தின் கடைசியில் 12000 ஆண்டுகள் முன்பு உலகில் கடல்களை ஒட்டிய கடற்கரை ஓரங்களில் நாகரிகத்தில் சிறந்த கடலோடிகளான சமுதாய மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கடல் மட்டம் உயர்ந்ததால் பெரு வெள்ளம் ஏற்பட்டு வாழ்விடங்களை விட்டுத் துடைத்தெறியப் பட்டார்கள். இப்பேரழிவு நிகழ்வைப் பல மொழிகளில் உள்ள 600 புராணங்களோ இலக்கியங்களோ கதைகளோ ஏதாவது ஒரு வகையில் பதிவு செய்துள்ளன.*

எப்படி இந்தக் கடல்கோள் ஏற்பட்டிருக்கும்? அதற்கும் கிரகாம் ஆன்காக் சொல்கிறார். வட ஐரோப்பியாவையும் வட அமெரிக்காவையும் பனிப்பாறைகள் இணைந்திருந்தன.

> *1,00,000 ஆண்டுகள் முன்பு அவற்றிடையே கடல் இல்லை. மூடிய பனிப் பாறைகள் மீது நடந்தே ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்கா சென்று விட முடியும். 3 மைல் அளவு கனமுடைய பனிப் பாறைகள் இவ்விரு கண்டங்களுக்கும் இடையே பல்லாயிரக்கணக்கான சதுர கி.மீட்டர் பரப்பளவில் மூடி இருந்தன. இந்தப் பாறைகள் 12000 ஆண்டுகள் முன்பு உருகத் தொடங்கின. படுவேகமாக உருகத் தொடங்கின. உலகெங்கும் கடற்கோள்.*

இந்தக் கடற்கோள்தான் நமது தமிழக இலக்கியங்கள் கூறும் கடற்கோள்! இலக்கியங்கள் பொய் அல்ல! இலக்கியங்கள் சொன்னவை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்தாகவல் வேண்டும். ஆய்வு செய்தார் கிரகாம் ஆன்காக்.

ஒரு காலத்தில் மனிதன் வாழ்ந்த நிலம் இன்று கடலாகி விட்டது. அந்தக் கடலடியில் தான் மனித குலத்தின் உண்மையான வரலாற்றுக்குரிய சான்றுகள் கிடைக்கும் என நம்பினார் கிரகாம் அன்காக். சப்பான் அருகே கடலடியில் அவர் கண்ட சான்றுகள் பற்றி நூலில் எழுதியுள்ளார். உலகெங்கும் கடலடியில் அவர் கண்டெடுத்த நாகரிகங்களின் தொகுப்பு நூலாக அவரது நூல்

www.t.me/DigitalNoolagam

உள்ளது. இந்த நூலில் தான் நமது கடல் கொண்ட பூம்புகார் பற்றிய அவரது கண்டுபிடிப்புகள் உள்ளன.

17000 ஆண்டிலிருந்து 7000 ஆண்டு வரை கடல் மட்டம் உயர்ந்ததும் கடற்கோள்கள் எழுந்ததும் 15 மில்லியன் சதுர கிலோ மீட்டர் மக்கள் வாழ்நிலம் கடலடியில் மூழ்கியது. மூழ்கிய அந்தப் பகுதிகளில் நம் முன்னோர் வரலாற்றைத் தேடியாக வேண்டும்! நம் வரலாறு மனித குல வரலாற்றில் இருந்து பிரித்திட முடியாதது! உலக முதன்மொழி தமிழென நிறுவச் சொற்பிறப்பியலை அளவு கோலாக்கினோம்! உலக முதன் நிலமென நிறுவத் தமிழகக் கற்பாறைகளை அளவு கோலாக்குவோம்! ஓயாமல் தேடுவோம்! உலகெங்கும் தேடுவோம்! உலகின் முதன் மாந்தனை, முதல் மொழியை முதல் பண்பாட்டைத் தேடுவோம்! அதில் தமிழும் தமிழரும் முதலிடம் பெற ஆய்வுகளை ஆற்றுவோம்! தமிழ்ப் பெருமை தரணிக்குணர்த்துவோம் வாரீர்!

www.t.me/DigitalNoolagam

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை | 75.00 |

**674 கடலடியில் தமிழர் நாகரிகம்** **55.00**

www.t.me/DigitalNoolagam